# தென் கிழக்கு ஆ[illegible]வின்
# நவ நாகரிகம்

அலவா லொட்டெரக் நிட்சுஜ்



# தென் கிழக்கு ஆசியாவின் நவ நாகரிகம்

ஆக்கியோர்:

அலவா
லெட்டோக்
நிட்கஜ்

கொழும்பு 1961

ஆசியாவில் ஜென்மித்த
காக்குசந்தா, கோணுகமணு, காசியப்பர், கௌதமர்
ஆகிய பௌத்த குருமார் நால்வருக்கும்
வணக்கம்

---

இருள் நிறைந்த உலகிற்கு இப்புத்தகம்
ஒளியாய் விளங்கட்டும்

# தென் கிழக்கு ஆசியாவின் நவ நாகரிகம்.

முதலாளித்துவம் என்பதுயாது? மாக்சியம் என்பதுயாது? இரு கொள்கைகளும் மேற்கத்திய நாடுகளில் நிலவிய லோகாயத மயமான நாகரிகத்திலிருந்தே தோன்றியுள்ளன. ஒரு கொள்கை மற்றக் கொள்கைக்குக் காரணமாயுள்ளது; முன்னதன் விளைவே பின்னது.

மேற்கத்திய நாகரிகத்தை லோகாயத நாகரிகம் என்னும் பொழுது நாம் குறிப்பாகக் கருதுவது என்ன? அச் சொல்லுக்கு இரண்டு கருத்துக்களைக் கூறலாம். ஒன்று மற்றதற்கு எப்பொழுதும் ஒரே தொடர்புடைய கொள்கையையுடையதல்ல. ஒரு கருத்தின்படி லோகாயத வாதம், உலகவாழ்வில் ஆன்மீக, சமய, ஒழுக்க முறைகள் அவசியம் என்பதைப் புறக்கணிக்கும் அநாத்மீக வாதமாக அமைகிறது. மற்றக்கருத்தின் படி இதே லோகாயதவாதம், சாதாரண, லௌகிக, பற்று நிறைந்த வாழ்வைக் குறிக்கிறது. அதாவது பொருளிலாபத்தைத் தேடிப் புலன்களின் இன்பத்தை நாடும் வாழ்வைக் குறிக்கிறது. இப்படியான லோகாயதவாதம் சமயத்தோடு ஒட்டிய வாழ்வாக அமைய முடியும்; பெரும்பாலும் அமைகின்றது. இக்கருத்தின்படி, சகல சமயங்களைப் பின்பற்றுகிறவரிற் பெரும்பாலோர் லோகாயதவாதிகளாவர். இதே கண்ணோட்டத்தோடு பார்க்கும் பொழுது, பொதுவாக மேலைத்தேய நாகரிகத்தை லோகாயதவாதம் என்று கொள்ளலாம்; இது உலக சம்பந்தமான செல்வங்களுக்கும், சாதனைகளுக்கும் புலன் நுகர்வுக்கும், அதிக முக்கியத்துவம் அளிக்கின்றது.

இத்தகைய நாகரிகம், பொருள் சேகரித்து வைப்பதற்குள்ள அவாவை இலட்சணமாகக் கொண்டுள்ளது. ஐரோப்பிய சமுதாய அமைப்பு முறைகள், பிரபுத்துவகாலந் தொட்டுச் சூறையாடும் கொள்கைக்கு இடம் கொடுத்துப் பகைமையுணர்ச்சியையும் வெறுப்புணர்ச்சியையும் வளர்த்துள்ளன. இவ் வுணர்ச்சிகள் யுத்தம், புரட்சி, சமூகப் பொருளாதார அநீதிகள் போன்ற பயங்கரக் குழந்தைகளைத் தோற்றுவித்திருக்கின்றன. இக்கூற்றுக்குச் சரித்திரம் போதிய சான்று பகர்கின்றது.

மாக்சியம் கடுமையாகச் சமயத்தையெதிர்க்கும் கண்ணோட்டத்தைக் கொண்ட அநாத்மீகவாதமாக அமைந்த போதிலும், தாபிக்கப்பட்ட சமய அம்சங்கள் சிலவற்றைத் தன்னகத்தே கொண்டுள்ளது. மனித சமூகத்திற்கு எதிராகத் தாம் செய்த துரோகங்களைச் சமயம் என்னும் போர்வையின் கீழ் மறைக்க முயன்றோரின் வஞ்சகமான லோகாயத நோக்கங்களுக்கு எதிராக எழுந்த புரட்சியே மாக்சியத்தின் அநாத்மீகவாதமாகும். தாபிக்கப்பட்ட சமயங்களுக்கு எதிராக மாக்சியம் கூறும் குற்றச்சாட்டுக்களிற்பல உண்மையானவையாயும் மறுக்கமுடியாதனவை யாயும் இருக்கின்றன. ஆனல், மாக்சியம் அவற்றிலும் சிறப்பானவற்றையோ அல்லது குறிப்பிடத்தக்க மாற்ற முள்ள கொள்கையையோ அளிக்கிறதா? இங்கு எமது நோக்கம் இவ்வினவுக்கும், வாழையடி வாழையாக நம்மிடையே இருந்து வரும் பெரும் பிரச்சினையான சிந்தனைக் கட்டுப்பாட்டினுல் ஏற்படும் தீமைகள் சம்பந்தமான வேறு சில வினக்களுக்கும் விடை பகர்வதாகும்.

மனிதனின் ஆதிகால வாழ்க்கையை யாராய்ந்தால் அவனின் இன்றைய நிலையை விளங்கிக்கொள்ளலாம். சுமார் மூவாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தென் கிழக்காசியா, நாகரிகத்தின் உச்சநிலையை யடைந்திருந்தது. இப்பிர தேசத்தின் வளம் வாய்ந்த நாடாகத் திகழ்ந்தது இந்தியா. இங்குதான் ஆரியக் கொள்கைகளும், பண்பாடும் தோன்றி வளர்ச்சியடைந்தன. இங்கிருந்து பேர்சியாவுக்கும் கிரீசுக்குமூடாக மேலைத்தேய நாடுகளுக்கு இப்பண்பாடு பரவியது.

இந்திய சமுதாயம் நான்கு சமூகப்பிரிவுகளாக வகுக்கப் பட்டிருந்தது. பிராமணர்கள் தம்மைக் கடவுள் வழித் தோன்றல்களென்றும் கடவுளின் அதிகாரத்தைப் பெற்றிருந்தனரென்றும் சாதித்தனர். இவர்களே கல்வி மான்களாகவும் சமய ஆசாரியர்களாகவும் விளங்கினர். அடுத்த பிரிவில் யுத்த வீரரும் நாட்டைப் பரிபாலித்தவரு மான சத்திரியர் அடங்கினர். மூன்ருவது பிரிவில் வியாபாரி களாகவும் கமக்காரர்களாகவும் விளங்கின வைசியரும் நான்காவது பிரிவில் சமூகத்தின் இழிதொழில் புரிந்த சூத்திரரும் அடங்கினர். இந்த நான்கு வருணத்தவர் களுக்கும் வெளியே, சாதியிற் குறைந்தவரும், மிருகங்களைப் போல் நடத்தப்பட்டவருமான ''பறையர்'' என்று ஒரு சாதியினர் இருந்தனர்.

ஒரு காலத்தில் இந்த நான்கு வருணத்தின் முதலிடத்துக்காகப் பிராமணர்களும் சத்திரியர்களும் போட்டியிட்டனர். ஆரவாரமற்ற இந்தப் போராட்டம் குறிப்பிடத்தக்க காலம் தொடர்ந்து நடைபெற்றது. கடைசியாக, பிராமணர் தமக்குரியதெனக் கூறிய தெய்வீக அதிகாரங்களைக்கொண்டு, மக்களின் நம்பிக்கையைப்பெற்று, வெற்றியீட்டினர். இதனால், அவர்களே சமூகத்தில் அதிக செல்வாக்குப் பெற்ற வகுப்பினராகவும், சமூக அமைப்பின் நிகரற்ற தலைவராகவும் திகழ்ந்தனர். அவர்கள் அகம்பாவமாக, உலகின் படைத்தற் கடவுளான பிரமாவின் வாயிலிருந்து தாங்கள் மாத்திரமே தோன்றியதாகவும், மற்றைய வருணத்தவர் பிரமதேவனின் முக்கியமற்ற அவயவங்களிலிருந்து தோன்றினராகவும் இறுமாப்புடன் கூறிக்கொண்டனர்—சத்திரியர்கள் பிரம தேவனின் கரங்களிலிருந்தும், வைசியர் அவரின் தொடையிலிருந்தும், சூத்திரர் அவரது பாதத்திலிருந்தும் தோன்றினரென்பதே அவர்கள் கூற்று.

இந்த பிராமணவாதத்தின்படி தாமே சமயநூல்களான வேதங்களைப் போதிக்கத் தனிகமை வாய்ந்தவரென்றும், அந்நூல்களைப் பயிலவும் பயிற்றவும் அவர்களுக்கு மட்டுமேயுரிமையிருந்ததென்றும் அவர்கள் கூறினர். ஒரு சூத்திரன், வேதநூலைத் தொட்டாலுமே அப்பாதகத்தைச் செய்ததற்காக அவன், நரகத்தில் துன்பம் அனுபவிக்க வேண்டுமென அவர்கள் கட்டளையிட்டார்கள். அத்துடன் அவனை விட்டுவிடுவதில்லை-இந்த வாழ்விலும் அவனுக்கு மிலேச்சத்தனமான தண்டனை விதிக்கப்படுவதற்குக் காலாயிருந்தனர். இந்தக் கட்டளையை மீறி நடந்த சூத்திரருக்கு காட்டுமிராண்டித்தனமான தண்டனைகள் விதிக்கப்பட்டதாக இந்துப்புராணங்களிற் காணலாம். மேலும், ஒரு சூத்திரன் அல்லது தீண்டாதானின் நிழல் கூடப் பிராமணர் மேற்பட்டாலும், அந்த பிராமணன் தனது சமய ஆசாரப்படி தன்னைச் சுத்திகரிக்க வேண்டுமென்று பிராமணர் வகுத்த விதியொன்று கூறியது. சில வேளைகளில், ''பிராமணர் சுத்தி''யைப்பற்றிய விதிகளைத் தற்செயலாகவே மீறி நடந்ததற்காகவும் சூத்திரர் மரணதண்டனை பெற்றிருக்கின்றனர்.

பிராமணீயின் உச்சநிலை பூரணம் பெற்றிருந்தது. மக்களின் நாளாந்த வாழ்க்கையின் எல்லா அம்சங்களிலும் மதச் சம்பிரதாயமும், சமயாசாரிகளின் செல்வாக்கும் வலுப்பெற்றிருந்தன. பிறப்பு, பெயரிடுதல், ருதுவாதல், விவாகம் இறப்புப் போன்ற எல்லா முக்கிய சம்பவங்களோடும்

தொடர்பான ஆடம்பரம் மிக்க சடங்குகளிற் பிராமணர் பங்குபற்றுவது சமூக சம்பிரதாயம் மட்டுமல்ல; சமய அனுட்டானத்தின் படியே அவசியமாகக் கருதப்பட்டது. மேலும், துரதிர்ஷ்டத்தைத் தவிர்த்தல், தாம் ஏற்கும் தொழிலில் வெற்றி பெறச் செய்தல் போன்றனவற்றிற்கும் பல சடங்குகள் இருந்தன. குடும்பஸ்தன் மேற்கொள்ளும் தொழில்களெல்லாவற்ரேடும் சம்பந்தப்பட்ட பல சடங்குகளிலும் பிராமணரின் பிரசன்னம் அவசியமாயிருந்தது. இச்சடங்குகளிலெல்லாம் பிராமணர் தமக்குரிய தட்சணையோடு மேலதிகமாக விலைபெற்ற சன்மானங்களும் பெற்றனர். மறுபிறப்புகளில் நல்வினைப் பயனையடைவதற்காகப் பிராமணருக்கு அன்னமளிப்பதும் வெகுமதிகள் வழங்குவதும் இன்றியமையாததெனக் கருதப்பட்டது. எனவே, பிராமணர்கள் சாதாரணமக்களின் இரத்தத்தை உறிஞ்சி வாழ்ந்த சலுகை பெற்ற உறுப்பினராக இருந்தனர். அதே நேரத்தில், மக்களின் சிந்தனையையும் செய்கைகளையும் முற்ருகத்தாமே கட்டுப்படுத்தி வந்தனர். சமயசம்பிரதயாத்தாலும் மூடநம்பிக்கைகளினுலும் மக்களின் சிந்தனு சக்தி பாதிக்கப்பட்டு இருந்ததால், அவர்கள் பிராமண ஏகாதிபத்தியத்தில் சுருண்டு கிடந்தனர். அவர்கள் பயத்தினுல்—இவ்வுலகில் தண்டனைக்கும், மறுவுலகில் நரக வேதனைக்கும் கொண்டிருந்த பயத்தினுல் இப்படிப் பிராமணர் ஆதிக்கத்தில் அடங்கியிருந்தனர்.

இத்தகைய உலகிற்தான், கி. மு. ஆரும் நூற்ருண்டில் புத்தபிரான் பிறந்தார். அவர் பிராமணர்களின் தீய வழக்கங்களை யறிந்து, அவர்களின் சிந்தனைக்கட்டுப்பாட்டு நடவடிக்கைகளினுல் மனித சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு ஏற்பட்ட தீமையை உணந்தார். அவர் இளைஞராக இருக்கும் பொழுதே வருணக் கடமைக் கட்டுப்பாடுகளைப் புறக்கணித்து, செல்வம், அதிகாரம் ஆகிய தளைகளை நீக்கி, சத்தியத்தை நாடுவோனின் எளிய வாழ்க்கையைக் கடைப்பிடித்தார். நீண்டகாலக் கடும் போராட்டதின் இறுதியில் பிராமணர்கள் உரிமைசாற்றிய தெய்வீக அதிகாரத்தின் பயனின்மையையும், சிருஷ்டிகராகிய ஒரு கடவுளுடன், இரண்டறக்கலப்பதாகக் கருதும் நோக்கத்தின் பொய்மையையும், முன்னையிலும் பார்க்கத் தெளிவாகப் புத்தர் தெரிந்து கொண்டார். அவர் பின்பு கயாவிலே அரசமர நீழலில் மெய்ஞ்ஞானம் பெற்று, அன்று முதல் தனது போதனை செய்யும் ஊழியத்தைத் தொடங்கினுர். இத்துடன், உலகச் சரித்திரத்திலேயே இதற்கு முன்

எவராலும் மேற்கொள்ளப்படாத, மனிதசிந்தனையை விடுதலை செய்யும் இயக்கத்தை ஆரம்பித்துவைத்தார். பிராமணர்கள் தமக்கிருப்பதாக நடிக்கும் தெய்வத்தன்மையை வேரொடு தகர்க்கத்தக்கதான இரு விஷயங்களை யெடுத்துக் காட்டினர். முதலாவதாக, ஒரு இலகுவான கேள்வி கேட்டார்-''பிராமணன் என்பான் யார்?'' அவரது விடை 'பிறப்பினால் ஒருவன் பிராமணன் ஆகான்; நன்னடத்தை, நல்லொழுக்கம், நேரிய வாழ்வு, நற்செய்கை, ஆன்மீக உள்ளுணர்வு ஆகியனவற்றைக் கொண்டவனே பிராமணன்' என்பதாம்.

இரண்டாவது விஷயத்தை மக்களிடம் கூறினர். ''ஒரு நூலில் இருந்ததற்காக ஒரு கருத்தையோ கொள்கையையோ ஏற்றுக்கொள்ள வேண்டாம்; முன்னோர் பின்பற்றிய சம்பிரதாயம் என்பதற்காகவோ, ஒரு பெரியார் கூறினர் என்பதற்காகவோ, அல்லது உங்கள் ஆசிரியர் (தன்னையே குறிப்பிட்டு) கூறினர் என்பதற்காகவோ ஏற்றுக்கொள்ள வேண்டாம். நன்ருக ஆராய்ந்து, பரீட்சித்து, அவ்விஷயம் நியாயமானது என்றும் உமக்கும் பிறருக்கும் பயன்தரத் தக்கது என்றும் அறிந்தால் மாத்திரமே அதனையேற்றுக் கொள்ள வேண்டும். இத்தகைய ஒரு கொள்கையைக் கண்டால் அதனைக் கடைப்பிடிக்குக. பயன்தராத கொள்கையைக் கடைபிடித்தால் உமக்கு எவ்விதபயனும் ஏற்படாது. அப்படிக் கடைப்பிடித்தால், தன்னுள் ஏந்தும் பானத்தின் ருசியை அறியமுடியாத கிண்ணத்தைப் போலாவீர்.''

புத்தரின் காலத்தில், அவரின் நுண்ணிய ஞானமும், கருணையும், அவரது துணிவான போதனைகளும் சமூகத்தில் ஒரு புரட்சியை ஏற்படுத்தின. பிறப்பினால், சமூகத்திலும் ஆத்மீக வாழ்விலும் உயர்வு கோருவதை எதிர்த்து அவர் போதித்ததுமல்லாமல், அவரது கொள்கைகள் நடைமுறையில் எப்படி இயங்கின என்பதையுங் காட்டினர். அவர் ஆண்களுக்கும் பெண்களுக்கும் என இரு மடங்களைத் தாபித்தார். இம்மடங்களிலே வெகுவிரைவில் அரச வம்சத்தைச் சேர்ந்தவர்களும், மற்றவர்களும், அவர் காலத்தில் மிகவும் குறைந்த சாதியினரெனக் கணிக்கப் பட்டவர்களும் சேர்ந்தனர். புத்தரின் மதபோதனைகளில் வருணப் பிரிவினைகள் இடம் பெறவில்லை; சமூக அந்தஸ்து இருந்த இடம் தெரியாது மறைந்து போயிற்று; ஒரு மனிதனின் பெறுமதி, அவனது சிந்தனையின் தரத்தையும்,

அவனது ஆத்மீகப் பேற்றின் தன்மையையும் பொறுத்திருந்தது. புத்தகுருமாரின் மடங்களிலும் புத்த சந்நியாசினிகளின் மடங்களிலும், யார், முதற் தவக்கோலம் பூண்டனரோ அவர்களுக்கே முதன்மையளிக்கப்பட்டது.

சமயங்களையாராயுஞ் சிலர், பௌத்த சமயத்திற்கும் இந்துசமயத்திற்குமிடையில் உள்ள ஒற்றுமைகள் காரணமாக, பௌத்தம் இந்துசமயத்தின் தோன்றலென்கின்றனர். ஆனல் அப்படியன்று; அவர்கள் கூற்றுக்கு ஆதாரமாக உபநிடத போதனைகளையெடுத்துக் காட்டுகின்றனர். ஆனல் இதுசம்பந்தமாக, ககுசந்தர், கோனகமர், காசியப்பர் என்ற புத்தர்கள், கௌதம புத்தருக்கு முன்னே இந்தியாவில் வாழ்ந்தன ரென்பதையும், அவர்களது போதனைகளையும் இந்துசமயம் தன் வயப்படுத்தியிருக்கு மென்பதையும் மறந்துவிடக்கூடாது.

பௌத்தம் இந்தியா முழுவதிலும் பரவி சிறிதுகாலத்திற்குள் மற்றத் தென்கிழக்கு ஆசிய நாடுகளிலும் பரவிற்று. புத்தசமயம் எங்கெல்லாம் பரவிற்றே அங்கெல்லாம் பிராமணரின் மதச்சலுகைகளையும் சிந்தனைக்கட்டுப்பாட்டையும் தகர்த்தது. சிரத்தையுடன் எழுப்பப்பட்டுச் சலியாது பாதுகாக்கப்பட்டு வந்த பிராமணர்களின் தலைமைப் பதவியாகிய கோபுரம் பௌத்த போதனைகளின் தாக்குதலைத் தாங்கமுடியாது அடிசார்ந்தது. நியாயமற்ற மூடக்கொள்கைகளினுலும் இலியினுலும் கட்டுப்படுத்தப்பட்ட மக்களின் சிந்தனசக்தி இறுதியில் ஒரு புதிய, எழுச்சியூட்டும் சுதந்திரத்தையடைந்தது. புதிய நம்பிக்கையும், நோக்கலும், மக்கள் உள்ளத்தில் எழுந்தன. பெலத்துடன் வீசும் நல்லகாற்றைப்போல, ஆதிலகாலத்துக் கோட்பாடுகளாகிய துர்நாற்றங்களைப் போக்கிப் பிராமணர் இழைத்திருந்த சிந்தனைக்கட்டுப்பாடாகிய செறிந்த வலையையும் பௌத்தம் பிய்த்தெறிந்தது. மானிடத்தின் மகத்துவத்தைப்பற்றிப் புதிய கருத்துக்களும், சமாதானம் ஒற்றுமையுடன் பிரபஞ்சத்தைப் பற்றியும் மனிதனின் சிந்தனசக்தியைப் பற்றியும் ஒரு அறிவார்ந்தவிளக்கமும் பௌத்தமத விளைவாகப்பரவத் தொடங்கின.

பௌத்தம் பரவியதன் பின்னர் சில நூற்றுண்டுகளுக்கிடையில் முன்னெப்பொழுதும் தோன்றுத ஒரு புதிய நாகரிகம், சிறப்பான பண்பாடு அம்சங்களுடன் தோன்றியது. இந்தியாவின் புதைந்த நகரங்களான தக்சிலா,

நாளந்தையும், எல்லோரா அஜாந்தாக் குகைகளும்; இலங்கையின் அழிந்த நகரங்களான அனுராதபுரம், பொல்லனறுவையும்; பர்மாவின் சுவேதகன் பொற் போபுரமும், இந்தோனிசியாவின் போருபுதூர் மாபெருந் தூண்களும், கம்போடியாவின் அங்கோர்வாற் கட்டிடச் சிற்பங்களும், சிந்தனைக் கட்டுப்பாடு மூடக்கொள்கைகள், பயம், போன்ற சங்கிலிப் பிணைப்புகளிலிருந்து விடுவிக்கப் பட்ட மனிதனின் சிந்தனைசக்தி எவ்வளவு சிறப்பான சாதனைகளைச் சாதிக்க முடியுமென்பதற்குச் சான்றாக விளங்குகின்றன, ஆனால், இவையெல்லாம் புகழ் பெற்ற பௌத்த இலக்கியங்களுக்கு ஈடாகா-பரந்த அறிவும் சகிப்புத்தன்மையும் அமைந்த சூழலிலே எவ்விதக் கட்டுப் பாடுமற்ற சிந்தனையால் ஆக்கப்பட்டுத் தழைத்த நூல்களே பௌத்த மத இலக்கியங்களாம். பௌத்தமதம் சிறப்பாக ஆசியாவுக்கும் பொதுவாக உலற்கிகும் அளித்த சேவையை இச்சான்றுகளாற் கணிக்கலாம்.

'லிச்சவ' வம்சத்தினருக்குப் போதிக்கும் பொழுது ஒரு நல்லாட்சியின் முதற் கோட்பாடுகளைப் பற்றியவர் கூறியதாவது:—

> ஒரு குழு அல்லது சமுதாயம் மேலே தரப்படும் நான்கு உயரிய விதிகளைப் பின்பற்றினுல், அவர்கள் சந்தோஷமாகவும் செல்வாக்குடனும் பலநூற்றுண்டு கள்-சிலவேளை ஆயிரமாயிரமாண்டுகள் கூட வாழ் வதற்கு அவை உதவிபுரியும்.''

> (1) ''சமூகத்தில் உள்ள முதியோர் அடிக்கடி ஒன்று கூறி எல்லோரதுஞ் சேம நலன் குறித்துக் கரைந்துரையாடல் வேண்டும். (2) கருத்து வேறு பாட்டினைச் சகிக்கும் தன்மையவசியம். (3) தங்கள் சமுதாயத்தில், தாழ்ந்தவர்களையும் பேணுதல் வேண்டும். (4)சமூகத்தினர் முதியோர்களின் தீர்ப்புகளை யேற்று; அவற்றின்படி நடத்தல் வேண்டும்.''

இந்தியாவில் அக்காலத்திருந்த அரசுகளி லொன்ருன 'லிச்சவி' குழுவினரை முதியோர்கள் ஆயம் பரிபாலித்த தாகத் தெரிகிறது. இந்த ஆட்சிமுறையை, இன்றைய மக்கள் ஆட்சிமுறைக் கொள்கையுடன் ஒப்பிட்டுப்பார்த்தல் ஒருவேளை பொருத்தமற்றதாய் இருக்ாலாம். ஆனுல்,

புத்தரின் போதனைகளைப்பார்க்கும் பொழுது, இன்றைய மக்கள் ஆட்சி முறையின் உயரிய இலட்சியங்களின் கோட்பாடுகளை முதன் முதற் போதித்தவர் புத்த பிரான் தான் என நாம் கொள்ளலாமல்லவா? ஆண் டெண் இருபாலார்க்கும் சம அந்தஸ்து அளித்தல்; தனி மனித உரிமைச் சரியாக நிர்ணயித்தல்; சிந்தனைக்கட்டுப்பாடு, பயம், மூடக்கொள்கைகளிலிருந்து மனிதனை விடுவித்தல்; எல்லா வேறுபட்ட கருத்துக்களுக்கும் இடமளித்தல்; வசதியற்ற மக்களுக்கு சமூக வாழ்வில் உயர்வளித்தல் போன்ற சிறந்த இலட்சியங்களைக் கொண்ட புத்தரின் போதனைகள் மனித சிந்தனையின் வளர்ச்சிக்குச் சந்தர்ப்பம் அளிக்கவில்லையா? இப்படிப்பட்ட கோட்பாடுகளிற்தானே இன்றைய மக்கள் ஆட்சிமுறையின் இலட்சியங்கள் தங்கியுள்ளன. இந்த நிலையையடைவதற்காகத்தானே மனித சமுதாயம் பலநூற்றுண்டுகளாகப் போராடி வந்திருக்கிறது.

பெரும்பான்மை வாக்குகளைக் கொண்டு ஒரு சமூகத்தின் விஷயங்களைப் பரிபாலிக்கும் முறையில், மற்றவர் மூலம் வாக்களிப்பதை, மேலைத்தேசத்தவர் சில நூற்றுண்டுகளுக்கு முன்னர்தான் அமுலுக்குக் கொண்டுவந்தனர். ஆனால், புத்த பெருமான் காலத்தில் இந்த வாக்களிப்பு முறையிருந்ததாக 'விநயபிடக' த்திலிருந்து தெரியவருகின்றது. விநயக்கட்டளைகளின்படி ''பத்திமோக்க'' க் கூட்டங்களிலே பங்குபெற வியலாத பௌத்தகுரு, தமக்குப் பதிலாக இன்னொரு பௌத்த குருவைத் தம் பிரதிநிதியாக அனுப்பமுடியும். சங்கத்தைச் சேர்ந்த அங்கத்தவர்களை வெளியேற்றுவது போன்ற மிகவும் பாரதூரமான பிரச்சினைகள் அங்கே இடம் பெற்றன வென்பதிலிருந்து 'பத்திமோக்க' க் கூட்டங்களின் முக்கியத்துவம் தெரிகின்றது.

கி. மு. ஆறும் நூற்றுண்டிலே, புத்தர் தமது போதனை சேவையை நாற்பத்தைந்து வருடங்களாக நடத்தினர். அவருடைய சீவிய காலத்திலேயே அவர் போதனையின் எதிரொலி இந்தியாவுக்கப்பாலும் கேட்டது. எனவே, ஐரோப்பிய சரித்திரத்தில் முதலாவதாக மக்களாட்சியை நிறுவிய கிரேக்க நாட்டிலே அவரது பல கொள்கைகள் இடம் பெற்றது ஆச்சரியப்படுவதற்கில்லை. தெமோஸ்தினஸ், சொகிரடீஸ், பிளாட்டோ, போன்ற பெரியார் வாயிலாகவும், இவர்களுக்குப் பின்தோன்றிய மேதைகள் பலர் வாயிலாகவும் இவரது கருத்துக்கள் வெளிப்படுத்தப் பட்டிருக்கின்றன. ஐரோப்பாவில் பௌத்த போதனையாகிய

விதை முளைத்தெழுந்த முறையை 'மிலிந்த பன்ஹ' என்னும் பௌத்தநூல் எமக்கு எடுத்துக் காட்டுகின்றது. இந்தியப் பௌத்தப் பெரியார் நாகசேனருக்கும் கிரேக்க மன்னன் மினந்தருக்குமிடையே நடந்த தத்துவார்த்த தர்க்கங்களை யிந்நூலிற் காணலாம்

புத்தருடைய போதனைகள் சிந்தனையின் விடுதலைக்கும், இறுதியில் சம்சார வாழ்க்கையின் துன்பத்திலிருந்து விடுபடுவதற்கும், வழி காட்டுவதோடு, புத்தர் ஒரு விசேஷதரம் வாய்ந்த சமுதாயப் புரட்சிக்காரனாயும் அமைந்தார். வாழ்க்கையின் இலட்சியத்தைப் புதிய கண்ணோட்டத்திற் திருப்பிய அவரது கருத்துக்கள் அன்றைய தென்கிழக்கு ஆசிய சமுதாயத்திலே ஆழ்ந்த மாறுதலை யேற்படுத்தக் காலாயிருந்தன. அவர் தோற்றுவித்த வாழ்க்கை முறை ஆன்மீக வாழ்க்கையாக மாத்திரம் அமையாது, சமூக அமைப்பையும் மானிட உறவையும் பொறுத்த வாழ்க்கையாகவும் அமைந்தது. பகைமையின் எல்லைக்கப்பால் நின்று அவர் கொண்டுவந்த அமைதி நிறைந்த, ஆக்கும் சக்திவாய்ந்த சிந்தனைகள் அரசியற் தத்துவங்களில் நின்று எழாது, மக்களின் உள்ளத் தேவைகளாலும் உயர்ந்த வாஞ்சைகளாலும் எழுந்தன.

புத்தரின் காலத்திலேயே பலபிரிவைச் சேர்ந்த பிராமணர்கள் கடுமையாகவும் விடாப்பிடியாகவும் அவரைத்தாக்கினர். ஆனல் அவர் அரசவம்சத்தைச் சேர்ந்த ஒரு சத்திரியன். அரியாசனம், அழகுநிறை மனைவி, அன்பு மகன், செல்வம், சௌகர்யவாழ்வு, அதிகாரம் ஆகியவற்றையெல்லாம் துறந்து வெளியேறியமை சத்தியத்தை நாடுபவரின் பற்றற்ற, துணிகரமான சுபாவத்திற்கு அத்தாட்சியாக விளங்கிற்று. இச்செய்கையானது அவரது போதனைகளின் மகிமையையும் கீர்த்தியையும் உணர்ந்து கொள்ள முடியாதவரின் பார்வையிலும் அவருக்கு உயர்ந்த ஸ்தானத்தை வழங்கியது, இதே செயல் அதிகாரம் படைத்தவர்களின் தாக்குதலிலிருந்தும் அவரைப் பாதுகாத்தது. அகம்பாவிகளும் அப்பாவிகளும் அவரது கருணை வாய்ந்த, எல்லோரினதும் நன்மையைக் கோரும், நியாயமான போதனைகளால் ஈர்க்கப்பட்டனர். அவரது போதனைகள் வேற்றுமைகளை அகற்றி, மாயையும் வெறுப்பும் நிறைந்த இருண்ட உலகிற்கு வெளிச்சத்தையும் அன்பையும் வழங்கின.

ஆறு நூற்றுண்டுகளுக்குப் பின்னர் இன்னுமொரு தீர்க்கதரிசி தோன்றி, ஒரு செல்வந்தன் மோட்சத்துக்குச் செல்வதிலும் பார்க்க, ஒரு ஒட்டகம்ஊசியின் காதினுள்ளே நுழைவது இலகுவானது எனக் கூறியதற்காகத் தனது உயிரையே அர்ப்பணம்செய்ய நேரிட்டது. அதிகாரத்திலும் ஆதிக்கத்திலும் ஊறிப்போயிருந்த குருத்துவம் அவரையும் எதிர்த்தது. ஆனல், அவருடைய கதையின் முடிவு முன்னையதிலும் முற்றிலும் மாறுனதாகும். அரசியற் சந்தேகங்களுக்காளாகினதாலும், நசுக்கப்பட்ட ஏழைகளின் நண்பனுக விளங்கியதற்காகவும், அக்காலத்தில் எருசலேமில் வாழ்ந்த அதிகாரம் படைத்தவர்க்கம் இயேசுகிறிஸ்து நாதரைக் கேவலமான முறையிலே கொன்றது.

அக்காலத்திலே ஐரோப்பாவிலும் மத்திய கிழக்கு நாடுகளிலும் வாழ்ந்த மக்கள் நம்பிக்கையிழந்து திருத்தங்களை விரும்பாதவர்களாக வாழ்ந்தார்கள். 'அவர்களின் வாழ்க்கை நிலையைச் சுருக்கமாக விவரிக்க இயலாது. ஒவ்வொரு குழுவினரும் ஒவ்வொரு குழுக்கடவுளைத் தம் தெய்வமாகக் கொண்டிருந்தனர்; இத்தெய்வங்கள் வழிபடுவோரின் மனத்தின் பிரதிவிம்பங்களாக விளங்கின. இஸ்ரவேலரை ஒரு பிரிவினராகக் கொண்ட 'செமிற்றிக்' (Semitic) சாதியினரும் இதே முறையைப் பின்பற்றினர். யூதர்கள், யெகோவா எனும் கடவுளை வணங்கினர். அவர்கள் தம் கடவுளின் பெயரால் அயலாருடன் நடத்திய போர்களையும், அயலவர் கையில் அவர்கள் பட்ட கஷ்டநஷ்டங்களையும், அவர்களது, ஜாதிச் சட்டங்களையும் அவர்கள் தம் கடவுளுக்கு இட்ட பலிகளையும் பற்றிக் கூறும் அரைக் குறைச் சரித்திர நூலே பழைய வேதாகமம். ஐரோப்பாவிலும் மற்ற நாடுகளிலும் இதே முறையிற்றுன் தெய்வ வழிபாடுகளமைந்தன.' அவர்களின் பூர்வகாலத்து ஆண் பெண் தெய்வங்கள் பலி கோரின; இத்தெய்வங்களின் சின்னங்களையே தமது போராட்டங்களின் போது இக்குழுவினர் உபயோகித்தனர்; இத்தெய்வங்களின் பெயர்களையே தமது யுத்தகோஷங்களாகவும் பாவித்தனர். 'தியூத்தெனியர்' (Teutons) 'தோர்', 'வொரன்' என்ற தெய்வங்களையும்; எகிப்தியர் 'ஐசிஸ்', 'ஒசிறிஸ்' என்ற தெய்வங்களையும்; கிரேக்கர் இடிமுழக்கத்தைத் தன் ஆயுதமாகக் கொண்ட 'சியஸ்' என்ற கடவுளையும்; ரோமர் 'சீயஸின்' பிரதிரூபமான 'யூப்பிற்றரையும்' வணங்கினர், இவற்றோடு எண்ணற்ற பல தெய்வங்கள் வழிப்பாட்டில் இடம் பெற்றன. ஒவ்வொரு தெய்வத்தின் பெயரிலும் ஒவ்வொரு வழிபாடு

தோன்றி, வழிபடுவோரின் செல்வாக்குடன் தழைத்து, அவர்களின் வீழ்ச்சியுடன் மறைந்து போயின.

இயேசு கிறிஸ்துவின் மரணத்தின் பின், அவரது சீடர்கள் மத்தியதரைக் கடலைச் சார்ந்த நாடுகளில் தம் மதத்தைப் பரப்பலாயினர், பரி. பேதுருவானவர் ரோமாபுரிக்குச் சென்று அங்கே வத்திக்கான் திருச்சபையைத் தாபித்தார். பரி. பவுல் பைசாண்டியத்துக்குச் (Byzantium) சென்று அங்கே கிரேக்க ஒதொடக்ஸ் திருச்சபையை (Greek Orthodox Church) நிறுவினர். சரித்திர ஏதுக்கள் காரணமாக இந்தப் புதிய கிறித்துவம் ஐரோப்பாவில் பரவத் தொடங்கிப் படிப்படியாக முன்னைய தெய்வ வழிபாடுகளை மறைத்தது.

312ம் ஆண்டிலே * கொன்ஸ்றன்ரைன் என்னும் அரசன் கிறித்துவ மதத்தைத் தழுவியது, மேற்கு உலகில் கிறித்தவம் வெற்றியடைவதற்கு உதவிய முக்கிய காரணங்களுள் ஒன்ருக இருந்தது. இந்த வெற்றியை சொற் பொருளமைப் பின்படியே வெற்றியெனலாம். ஏனெனில், பரம்பரைக் கதையின்படி, கொன்ஸ்றன்ரைன், மக்சின்ரியஸ் (Maxentius) என்பவனின் சேனைத்தலைவர்களை முறியடித்து வெற்றி கொண்டதற்கு முன்னை நாளிரவு அவனது கனவில், "இதனுல் வெற்றி பெறு" என்று பொறிக்கப்பட்ட, தீயைப் போல் பிரகாசமுள்ள ஒரு சிலுவை தோன்றியது, எனக் கூறப்படுகிறது. 'யூசிபியஸ்' (Eusebius) கூற்றின்படி கனவு காண்பதற்கு முன்னமேயே கொன்ஸ்றன்ரைன் மத்தியான வேளையில் இந்தக்காட்சியைக் கண்டதாகத் தெரியவருகிறது. ஆனுல் இதனை ருசுப்படுத்துவதற்கு ஆதாரங்கள் இல்லை; அத்துடன் இது கர்ணபரம்பரைக் கதையாயுமிருக்கலாம். கொன்ஸ்டன்ரைன் மதம் மாறியது அரசியற் காரணங்களுக்காகவே. அசோகன் பௌத்த மதத்தைத் தழுவியது, சமாதானமும் நல்லாட்சியும் நிலவும் ஒரு புதிய யுகத்தின் முன்ஞேடியாக இருந்தது; இதைப் போலல்லாது கொன்ஸ்றன்ரைன் கிறித்தவனுகியபின் தனது யுத்த வாழ்வைச் சற்றேனும் தணியாத கொடூரத்துடன் நடத்தினுன். ரோமாபுரியின் முதலாவது கிறித்தவ தலைவனுக "பொன்ரி பெக்ஸ்

---

* "கொன்ஸ்றன்ரைன் தனது எதிரிகளுடன் நடத்திய போராட்டங்களின் போது, தனது நன்மைக்காகத் கிறித்துவ பிரஜைகளின் ஆதரவை பெற விரும்பினுர்; சுயநலங்காரணமாவே அவன் கிறித்துவமதத்தைத் தழுவி இருக்கலாம்." சேர். வில்லியம் சிமித்

மக்சிமுஸ்'' (Pontifex Maximus) என்ற பட்ட நாமத்தைச் சூடிக் கொண்டது மாத்திரமல்லாது தனது ஏகாதிபத்தியத்தின் மத ஆதிக்கத்தையும் தன்கையிலே நிறுத்திக் கொண்டான். இத்துடன் நில்லாது கிறித்தவ விசுவாசப் பிரமாணங்களையும் வரையறுத்தான். ''பொன்ரிபெக்ஸ் மக்சிமுஸ்'' என்ற பட்ட நாமத்தையின்று பாப்பரசர்கள் சூடிக்கொள்கின்றனர். கொன்ஸ்ரன்ரைன் என்ன செய்த போதிலும், பழைய வழிபாடுகளை ஒரளவு சகிக்கும் தன்மை பெற்றிருந்தான். ஆனல் அவனுக்குப் பின்வந்தோர் இச்சகிப்புத் தன்மையற்றிருந்தனர். அவர்கள் வளர்ந்து கொண்டே போகும் தம் பலத்தைக்கொண்டு அஞ்ஞானிகள், யூதர், கிறித்தவமத விரோதிகள் ஆதியோரை இரக்கமற்ற முறையில் தாக்கினர். அவர்கள் சிந்தனையைக் கட்டுப் படுத்துவதற்காக எடுத்துக் கொண்ட நடவடிக்கைகளைத் ''தியோடசியஸின் கட்டளைகளில்'' (Code of Theodosius) காணலாம். மேலே வரும் பகுதிகள் அந்தக் ''கட்டளை'' களிலிருந்து எடுக்கப்பட்டன:—

''இது முதல் நகரங்களிலும் மற்றும் எல்லா இடங்களிலும் உள்ள தேவாலயங்கள் மூடப்படுதலும் அவற்றுட் பிரவேசிக்க அனுமதிகள் முற்ருக மறுக்கப்படுதலும் எமது விருப்பமாகும். பலியிடுதலை உடனடியாக எல்லோரும் நிறுத்த வேண்டுமென்பது எமது கட்டளையாகும். எவராவது இத்தகைய செயல்களைச் செய்தால், அவர் வாளுக்கிரையாவார்''

''எவராவது பலியிடுதல் அல்லது விக்கிரகங்களை வழிபடுதலில் ஈடுபட்டால் அவர் மரணதண்டனை விதிக்கப் படவேண்டுமென்பது எமது கட்டளை.''

—356ம் வருடத்து 6ம் கட்டளை.

சார்லிமேன் புதியமதத்தைப் பின்பற்ருதவர்களைத் தன் முன்னேர்களைப் போலவே மிகவும் கடுமையாகத் தண்டித்தான். இவ்விதமாகத் திருச்சபை, மக்களின் உடல் உள்ளம், ஆகிய இரண்டின் மீதும் தனது அதிகாரத்தைக் கடுமையாகச் செலுத்தியது. ரோமாபுரியிலிருந்து சென்ற மத போதகர்கள் ஐரோப்பா முழுவதிலும் திருச்சபைகளை நிறுவி, ரோமாபுரியிலிருந்த பாப்பாண்டவருக்கு, இவ்விடங்களில் குருமாரை நியமிக்கும் அதிகாரத்தை வழங்கினர். பாப்பாண்டவருக்குச் சமய சம்பந்தமற்ற விஷயங்களில்

உள்ள அதிகாரம் அதிகரித்ததும், ஐரோப்பாமுழுவதிலும் உள்ள மக்களின் சிந்தனையைக் கட்டுப்படுத்தும் செல்வாக்கை வத்திக்கான் பெற்றது. கீழைத் தேச திருச்சபையும் இதே கொள்கையைக் கடைப்பிடித்தது; அதன் அதிகாரம் ஓரளவிற்கு நாட்டின் எல்லையினுல் மட்டுப்படுத்தப்பட்டது. பிராமணிய முறையிலே பின்பற்றப்பட்டு வந்து விதமாகவே, கிறித்தவகுருமார் எல்லாப் பிரதான சடங்குகளையும் தலைமை தாங்கி நடத்தியது மல்லாமல், சமூக நடவடிக்கைகளிலும் ஆலோசனை கூறும் நிலையிலிருந்தனர். பாவ சங்கீர்த்தன முறையின் மூலம், குருமார் லௌகீக வாழ்க்கையில் ஈடுபட்டிருப்போரின் இரகசியங்களை அறிந்திருந்ததால், அவர்களைச் சபையிலிருந்து நீக்குவதாகப் பயமுறுத்தக்கூடியதாயிருந்தது. எனவே, இந்தியாவில் பிராமணர் கையாண்ட முறையைப் போலொன்று மேற்கிலும் எழுந்தது. இம்முறை அரசியற் சூழ்ச்சிகளினுல் பலம் பெற்று, காலகதியில் பாப்பரசர் இராச்சியங்களை ஆக்கவும் அழிக்கவும் கூடிய வல்லமையைப் பெற்றனர். பிராமணர் தாம் தலையிட்டாற் தான் மக்கள் மோட்சபலாபலன்களைப் பெறலாமென்று எப்படிவாதித்தனரோ, அப்படியே கிறித்தவ மதத்தில் அதே அந்தஸ்து வகித்த குருமார், திருச்சபையாற்தமக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தைக் கொண்டு தாம் மோட்ச வாயிலைப் பூட்டவும் திறக்கவும் முடியுமென்றும், இரட்சிக்கவோ நாசத்தை விளைவிக்கவோ முடியுமென்றும், தாமே சமய உண்மைகளின் தனியுறைவிடமென்றும் உரிமைசாற்றினர்.

புராதன திருச்சபைக் குருமார்களால் தெரிந்தெடுக்கப்பட்டும் விலக்கப்பட்டும் தயாரிக்கப்பட்ட பிபிலிய நூலைச் சபையோர் குருவின் மேற்பார்வையின் கீழ் மாத்திரமே வாசிக்க வேண்டுமெனவும், கிறித்தவ சமயத்தனவல்லாத நூல்களை வாசிக்கக் கூடாதென்றும் கட்டளையிட்டனர். இன்றும், சபையினர் வாசிக்கக் கூடாதென்று விலக்கப்பட்ட நூல்களின் பட்டியல்—"விலக்கப்பட்ட நூல்களின் அட்டவணை" (Index Librorum Probibitorum)—ஒன்று வத்திக்கானில் உண்டு. இப்பட்டியல் நாளுக்கு நாள் நீடித்துக்கொண்டே போகின்றது. இப்பட்டியலின் படி சட்டத்தின் பிரகாரம் விலக்கப்பட்ட நூல்களில், கத்தோலிக்கரல்லாதாரல் வெளியிடப்பட்ட பிபிலிய மூலப்பிரதியின் பதிப்புகளும், ஆதிகாலக் கத்தோலிக்க பரிசுத்த வேத நூல்களும், கத்தோலிக்கரல்லாதாரால் ஆக்கப்பட்ட எல்லா மொழிபெயர்ப்புகளும் இடம் பெறுகின்றன. இப்படியாகத் திருச்சபையினருக்குப் பொதுவாக விலக்கப்பட்டுள்ள

நூல்களோடு, எந்த மேற்றிராணியாரும் தமது பகுதிக்குள் எப்புத்தகத்திற்கும் தடை விதிக்கலாம். மக்களிடமிருந்து வேதாகமங்களை விலக்கிவைத்த பிராமணர்கள், மேலைத் தேய குருமார் சிந்தனைக் கட்டுப்பாட்டில் செலுத்திய அளவு ஆர்வத்தைக் காட்டவில்லை. அத்துடன் மேலைத்தேய குருமார் தமது அதிகாரத்தைப் பிராமணரிலும் பார்க்க நீண்டகாலம் நிலைநாட்டிவைப்பதில் வெற்றிகண்டனர். யேசுநாதரின் போதனைகளை விளக்கும் அதிகாரத்தைத் திருச்சபைதனதாக ஏற்றுக்கொண்டது; அது தனது நோக்கத்திற்கு ஏற்றமுறையில் அவரது போதனைகளை இடைவிடாது திரித்துக் கூறியது' உண்மையைப் பற்றிச் சிறிதேனும் அக்கறையின்றி, புராதன அஞ்ஞானிகளின் மதச்சடங்குகளுடன் பொருந்தத்தக்கதாக யேசுகிறிஸ்துவின் பிறப்பு நாளை தக்ஷிணயன காலத்துக்கு மாற்றியமைத்தது சரித்திரமறிந்த விஷயமாகும்.

யூதர்களைத் திரும்பவுந்திரும்பவும் வதைத்தமை; ''பரிசுத்த'' விசாரணை'' சபை மதவிரோதிகளுக்கு மரண தண்டனை விதித்து அவர்களைக் கம்பத்தில் கட்டி யெரித்தமை: சூரியனைச் சுற்றிப் பூமி சுழல்கிறது என்பதை நிரூபிக்கத் துணிந்த கலிலேயோவின் மீது 'மூளை கழுவும்' முறையைப் பாவித்தமை; கியார்டாரேனா பூறூேனைவை (Giardarno Bruno) ரோமாபுரி வீதிகளில் எரித்துக் கொன்றமை; சிந்தனைச் சுதந்திரத்துக்காகப் போராடியமற்றும் பலரையும் எரித்தமை போன்ற செயல்களில் நூற்றுக்கணக்கான வருடங்களாக வத்திக்கான் செலுத்திய ஆதிக்கம் பிரதிபலித்தது. இவ்விதம் எத்தனை யெத்தனையோ இரத்த வெறியாடல் களிலே வத்திக்கான் ஈடுபட்டது. பாப்பரசர் நரகத் தீ என்னும் மிரட்டலால் ஐரோப்பியர்களை நடுங்கவைத்து முழந்தாளிடச் செய்தனர். சிலரே யெதிர்க்கத் துணிந்தனர். ஏனெனில் பிராமண ஆதிக்கத்தின் கீழிருந்தது போன்று மக்கள் மனம், பயம், மூடநம்பிக்கை, குருத்துவம் என்னும் அந்தகாரத்தால் நன்று மூடப்பட்டிருந்தது. பாவ விமோசனம், பிராயச்சித்த விமோசனம், குருமாரிடம் இருந்ததாகக் கருதப்பட்ட தெய்வீக அதிகாரங்கள் என்பவற்றின் பொருட்டு மக்களிடமிருந்து பறித்த பணத்தின் மூலப் திருச்சபையும் மடங்களும் செழித்து வளரத்தொடங்கின.

மேலையத்தேயப் ''பிராமணர்கள்'' அதியுன்னத நிலையிலிருந்தனர். ஆனால் ஒருவகையில்-மேலைத்தேய பிராமணன் கொடுமைபுரிவதில் கீழைத்தேய பிராமணனை மிஞ்சியிருந்தான். மத உண்மைகளைப் பொறுத்தளவில் ஏகபோக உரிமை பாராட்டுவதில் பிராமணனைப் போன்றிருந்ததோடு, தமது மதத்தை எம்முறையைக் கையாண்டும் பரப்புவதற்குத் தமக்குக்கிருபா கடாட்சம் உண்டென்றுங் கூறினர். தந்திரம் மூலமோ, லஞ்ச ஊழல் மூலமோ, ஆக்கிரமிப்பின் மூலமோ— தமக்குக் கிடைக்கும் எவ்வழியைக் கொண்டும் தம் மதத்தைப் பரப்பத் தமக்கு அதிகாரம் உண்டென்றனர். இங்கு உண்மைக்கும் சன்மார்க்கத்துக்கும் இடமேயில்லை. ரோமன் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவதற்கு எது உதவிபுரிகின்றதோ அது சரியெனக் கருதப்பட்டது. வேறு எந்த அளவு கோலையும் அவர்கள் உபயோகிக்கவில்லை. இதனாற்றான், வத்திக்கான் இழிவான இரட்டையளவு கோல் முறையைக்கடைப்பிடிக்கின்றது. ஒன்று மத உண்மை; மற்றது கொள்கையுண்மை. இதில் வசதியாயிருப்பின் எந்தப் பொய்யும் இடம் பெறமுடியும். மிக முக்கியத்துவம் வாய்ந்த சமயச் சகிப்பிலும் இதே விதமான இரட்டையளவு கோல் கொண்டே கணிக்கின்றனர். ''சிந்தனைச் சுதந்திரத்தின் வரலாறு'' என்ற நூலிலே Dr. ஜே. பி. பெரி (Dr. J. B. Bury) இவ்விதமாகக் குறிப்பிடுகிறார்:—

''கிறித்தவ மதத்திற்குத் தடை விதிக்கப்பட்டிருந்த இரண்டு நூற்றாண்டிலும், கிறித்தவர்கள் மதவிசுவாசம் சுயேச்சையாகவே ஏற்படுவதென்றும் அதையெவராலுந் திணிக்க முடியாதென்றுங் கூறி இத் துறையில் சகிப்புத் தன்மை காட்டப்பட வேண்டுமென்றனர். அவர்களின் சமயம் வலுப் பெற்று அரசாங்கத்தின் ஆதரவைப் பெற்றவுடன் இந்தக் கொள்கையைக் கைவிட்டனர். பிரபஞ்சத்தின் மர்மங்களைப் பற்றி மனிதனின் அபிப்பிராயங்களைப் பூரணமாக ஒரு முகப்படுத்தும் பணியில் இறங்கியது மட்டுமன்றிச் சிந்தனையைக் கட்டுப்படுத்தும் ஒரு உறுதியான கொள்கையையும் பின்பற்றினர்.''

13ம் நூற்றாண்டிலே வாழ்ந்த ரோமன் கத்தோலிக்க, மத ஞானி அகுவைனஸ் (Aquinas) என்பார், பேதவாதிகளையும், மத விரோதிகளையும், மத விசுவாசிகளையும், மத விசுவாசத்தில் தமது மனச்சாட்சிக்கெதிராக வத்திக்கானுக்குக் கீழ்ப்படிய மறுத்தவர்களையும் அழிப்பதற்குத் திருச்சபைக்கு அதிகாரம் உண்டென்று வற்புறுத்தினர்.

வத்திக்கான் ஐரோப்பாவில் முதன்மை வகித்த ஐந்து நூற்றுண்டுகளுக்கு மேலான காலத்தில், தனதெனக்கருதிய இவ்வுரிமையைச் சொல்லொணுக் கொடூரத்துடன் கையாண்டுவந்தது. ரோமாபுரியிலுள்ள 'கிறெகிறியன் பல்கலைக் கழக'த்தின் (Gregorian University) சமயக் கோட்பாட்டுப் பேராசிரியர் வண. மரியானஸ் டி லூஸா (Fr. Marianus de Luca s. j.) என்பவர் இதே கொள்கையை அண்மையில் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். பாப்பரசர் 13ம் லீயோ அவர்களின் அதிகாரத்துடன், வத்திக்கான் அச்சகத்திலிருந்து வெளியிடப்பட்ட தமது, "பொதுசன மதச்சட்டக்கைந்நூல்" என்னும் நூலிலே கிறிஸ்த சபையைச் சேர்ந்த இந்நல்ல பெரியார் இவ்விதம் கூறுகிறுர்:—

> ............மரணதண்டனை விதிக்குமளவிற்குக் கூடத் திருச்சபைக்கு அதிகாரம் உண்டென்பதை நாம் உறுதிப்படுத்துகிறேம். இரு காரணங்களுக்காகவே ஆரம்பத்தில் இவ்வுரிமைக்காகப் பரிந்து பேசி அதனை நிலைநாட்ட வேண்டியது அவசியமாகிறது. முதலாவதாக நமது தாயாகிய திருச்சபை மதப்பேதவாதிகளுக்கு மரணதண்டனை விதிப்பதும், முக்கியமாகச் சில மதப்பிரிவினைத் தலைவர்களையும், மதத்துரோகிகளையும் கொல்லுதலும் நீதியற்ற கொடுஞ் செயல்களென எதிரிகள் உரத்துக் குற்றஞ் சாட்டுகின்றனர். இரண்டாவதாக மரணதண்டனை விதிக்கும் உரிமையிலிருந்து அதிற்குறைந்த தண்டனைகளை (சித்திரவதை செய்தல், சிறையிடல், பறிமுதல் செய்தல் போன்றவை) விதிக்கும் உரிமையைக் கிரகிப்பதாலுமாகும்."—தொகுதி 1. பக். 142.

இதே நூலின் 2ம் தொகுதியில் 143ம் பக்கத்தில் காணப்படுவதாவது:—

> "திருச்சபை தனது எண்ணங்களை நிறைவேற்றுவதற்கு மரணதண்டனை மிகவும் அவசியமான பயனளிக்கக்கூடிய ஒரு கருவியாகும். தனக்கெதிராகப் புரட்சி செய்வோரையும், தனது ஒற்றுமையைக் குலைப்போரையும், முக்கியமாகப் பிடிவாதஞ் செய்யும் மதபேதவாதிகளையும், மதப்பிரிவினைத் தலைவர்களையும், திருச்சபை ஒழுங்கைக் குலைப்பதையோ அல்லது பிறரைச் சகலவிதமான குற்றங்களைச் செய்ய—முக்கியமாகத் திருச்சபைக்

கெதிராகக் குற்றங்களைச் செய்யத் தூண்டாமலும் வேறு எவ்விதத்தண்டனையாலும் கட்டுப்படுத்த முடியாத பொழுதிலும்............திருச்சபையின் மக்கள் பலரைக் கெடுக்கும் நோக்கத்துடன் ஒருவனோ அல்லது பலரோ தவறான வழிகளைப் பிடிவாதமாகக் கையாளும் பொழுது இவர்களை முற்றிலும் நீக்குவது அவசியம் என்றும், மக்களைப் பாதுகாக்க வேறு வழியில்லை யென்று தோன்றும் பொழுதும் இக் கொடியோரைக் கொல்ல அதிகாரம் உண்டு; கொல்லவும் வேண்டும்."

விசாரணைச் சபைக்காகப்பரிந்து பேசுபவர்கள் மத விரோதிகளைத் திருச்சபை கொல்லவில்லை யென இப்பொழுதெல்லாம் கூறுகின்றனர். திருச்சபை அவர்களை விசாரணை செய்து குற்றவாளிகளெனத் தீர்த்தபின் தண்டனை விதிப்பதற்காக அவர்களை அரசாங்க அதிகாரிகளிடம் ஒப்படைத்த தென இவர்கள் கூறுகின்றனர். முன்னூற் தரப்பட்ட பகுதிகளில் உள்ளது போன்று நேர்மையான முறையில் எடுத்துரைப்பின் வத்திக்கானுக்கும் அரசாங்கத்துக்கும் இடையே வேற்றுமை காண்பதின் பொய்மை வெளிந்து விடும். உண்மை, பொய்யை மதிப்பதில், தனக் கென ஒன்றும், உலகுக்குப் பொதுவாக இன்னென்றுமாக இருவித அளவு கோல்களைக் கையாளும் திருச்சபையின் கொள்கைக்கு இன்னுமொரு உதாரணமாக மட்டுந்தான் இது விளங்குகின்றது. திருச்சபை தனது மத விரோதிகளைக் குற்றஞ்சாட்டித் தண்டனையை நிறைவேற்றியதுடன் நிற்கவில்லை; 'ஒடுேடாவே'யின் (Auto-da-fe) கடைசிக் கைங்கரியமாகக் குற்றவாளிகளை எரிப்பதற்குத், திருச்சபையின் பிரதிநிதிகளான குருமாரும் துறவிகளும் தமது கைகளாலேயே கொள்ளிவைத்தனரெனச் சரித்திரம் தெளிவாகக் கூறுகிறது Dr. காபிரியேல் லெகூ (Dr. Gabriel Legue) செதுக்கிய 'Urbain Grandieur Et Les Possedees' ஐ எரிக்கும் அக்காலச் சித்திரத்தில், உயிருடன் இருப்பவனுக்கு ஒருதுறவி கொள்ளி வைப்பதைக் காணலாம். இத்துறவி கபுசின் (Capuchin) பிரிவைச் சேர்ந்த லக்றன்ஸ் என்பவர் (Fr. Lactance); இவரது சகபாடியாகிய துறவி ஆக்கேஞ்சல் (Fr. Archangel) என்பவர் கொள்ளிவைப்பதில் உதவி புரிந்ததாகச் சாசனங்கள் கூறுகின்றன. திருச்சபையைக் குற்றத்திலிருந்து விடுவிக்க முயல்வதன் பயனின்மையைக் காட்டும் சான்றுகள் பலவற்றுள் இதுவும் ஒன்றாக விளங்குகின்றது.

வத்திக்கானின் செல்வாக்கு உச்ச நிலையில் இருந்த காலத்தில், பெருந்துணிவும் மனோதிடமும் படைத்த மாட்டின் லூதர் என்பவர் தோன்றினார். லூதர் கௌதமரைப் போன்று சிறந்தவமிசத்திற் பிறக்கவுமில்லை: மனித அறிவுக்கப்பாற்பட்டவற்றை அறியும் ஆற்றலைப் பெற்றவருமில்லை. யேசுக்கிறிஸ்துவின் ஆத்மீக சக்தியைப் போன்றது தனக்குண்டெனக் கூறும் நிலையிலும் அவர் இருக்கவில்லை. உரோமா புரியின் பெருமைக்கும்பாசாங்குக்கும் எதிராகப் புரட்சிசெய்த இச்சாதாரண கிறிஸ்தவகுரு, தான் சரியென நம்பிய கொள்கைகளை நிலைநாட்டுவதில் அஞ்சா நெஞ்சம் படைத்தவர். இவரை விசாரணை செய்வதற்காக வோம்ஸ் நகரில், 1521ம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில், 5ம் சாள்ஸ் சக்கரவர்த்தியின் தலைமையின்கீழ் கூடிய சபை முன் இவர் இத்துணிகரமான பதிலைக் கூறினார்;

> "உரோமன் கத்தோலிக்க மதத்திற்கு எதிராக நான் சிலநூல்களை இயற்றியுள்ளேன். பொய்க் கொள்கைகளாலும், ஒழுங்கற்ற வாழ்க்கை முறைகளினாலும், வசைக்கிடமான முன்மாதிரியாலும் கிறிஸ்துவ உலகத்தைப் பாதித்து மக்களின் உடலையும் ஆத்மாவையும் கெடுப்போரை நான் கண்டித்துள்ளேன். இதைக்குறித்துக் கடவுளுக்கு அஞ்சும் எல்லோரினதும் துயரம் இதை உறுதிப்படுத்தவில்லையா? உரோமா புரியின் முடிவில்லாத சுரண்டல்கள் கிறிஸ்தவ உலகத்தின்—முக்கியமாக இப்புகழ்பெற்ற நாட்டின்—காணி, பூமி, செல்வங்களை விழுங்கும் பொழுது, பாப்பரசரின் விதிகளும் மனிதனால் ஆக்கப்பட்ட கொள்கைகளும் விசுவாசிகளின் மனச்சாட்சியைச் சிக்கவைத்துத் தொந்தரவுசெய்து துயரத்திற்குள்ளாக்குவது, தெளிவாக இல்லையா?
>
> நான் எழுதியவற்றை வாபஸ் பெறுவேனாயின் இந்த ஆதிக்கத்தைப் பலப்படுத்தி எத்தனையோ வெட்ட வெளியான துராசாரங்களுக்குக் கதவை இன்னும் அகலத் திறப்பேனேயொழிய வேறு ஒன்றுஞ் செய்யமாட்டேன். பெருமைபிடித்த இவர்கள் புதிய மூர்க்கத்துடன் எல்லா எதிர்ப்பையும் முறியடித்துக் கடல் அலைபோற் பெருகி முன்னையதிலும்பார்க்கக் கூடுதலாகச் சீற்றங்கொண்டு கொந்தளித்தெழுவதைக் காண்போம்."

குண்டு வெடிப்பதினல் ஏற்படும் தொனியைப்போல் இச் சொற்கள் ஐரோப்பாவின் சகலபாகங்களிலும் முழங்கி, எதிரொலித்தன. மற்றையோரும் வத்திக்க ஆதிக்கத்தின் கீழ் அமைதியை இழக்கத் தொடங்கினர். ஆனல் இவ்விதம் அமைதியிழந்த எல்லாரிடமும் லூதரின் பற்றற்றதன்மை காணப்படவில்லை. இங்கிலாந்தின் எட்டாவது ஹென்றியரசன் இன்னுமொரு மனைவியை ஏற்க விரும்பினன்; ஆனல் பாப்பாண்டவர் இதை அநுமதிக்கவில்லை. ஆகவே, ஹென்றி ஒரு புதிய புரொட்டஸ்தாந்து இயக்கத்தைத் தொடங்கி தனது தேசிய திருச்சபையைத்—இங்கிலாந்து திருச்சபை—தாபித்துத் தானே தலைமை வகித்தான். சுவிற்சர்லாந்தில் ஜோன் கல்வின் என்னும் புரட்சிக்காரன் தோன்றினன். இவ்விதம் வெவ்வேறு புரொட்டஸ்தாந்திய இயக்கங்கள் எழுந்து, எங்கெங்கு மக்கள் மனச்சாட்சியையும் சிந்தனு சுதந்திரத்தையும் பெரிதென மதித்தனரோ, அங்கெல்லாம் ஆதரவாளர் சேர்ந்து, விருத்தியடைந்தன.

திருச்சபையின் நோக்கங்களுக்கு இணங்கத்தக்க விதத்தில் கருத்துக்களைத்திரித்துக் கூறும் குருமாரின் உதவியின்றி மக்கள், தாங்களே பிபிலிய நூலை வாசித்து அதன் கருத்துக்களை ஆராயத் தொடங்கினர். இவ்விதம் புரொட்டஸ்தாந்து மதம் தோன்றினதால், குருத்துவத்தினல் விருத்தி பெற்ற, மூடநம்பிகையுடன் சேர்ந்த பயம் குறைந்தது; மக்கள் கண்ணேட்டத்திற் சுதந்திரமும், பேச்சுச் சுதந்திரமும் ஊக்கம் அடைந்தன. தென் கிழக்காசியாவில் பிராமணியம் சுமத்திய சிந்தனைக் கட்டுப்பாட்டிலிருந்து மக்களைப் பௌத்தம் விடுவித்தது. அதே போன்று ஐரோப்பாவில், எண்ணச் சுதந்திரத்தையும் அடிப்படையாக கொண்ட ஒரு புது நாகரிகம் விருத்தியடையத் தொடங்கியது. மீண்டும் விடுதலை பெற்ற சிந்தனை தோன்றியதும், புரொட்டஸ்தாந்து இயக்கம், கிரேக்க ஆதிரோம சனநாயக முறையை இலட்சியமாகக் கொண்டு, அம்முறையைக் கூடுதலாக நாடத்தொடங்கியது. இதன் பயனுகச் சனநாயகக் கொள்கைகளையுடைய சிந்தனையாளர் பலர் தோன்றி, ஐரோப்பிய நாடுகளிற் தமது செல்வாக்கை உணரச்செய்தனர். பாப்பரசரின் ஆதிக்கத்தை மீண்டும் நிலைநாட்ட எத்தனையோ முயற்சிகள் செய்யப்பட்ட பொழுதிலும், இதன் இனத்ததாகிய பாசிச இயக்கம் தோன்றின பொழுதிலும், அழியாது இற்றைவரை நிலைத்து நிற்கும் ஐரோப்பிய சனநாயக மரபின் கர்த்தாக்களாகவும், முன்னேடிகளாகவும் இச்சிந்தனையாளர் விளங்கினர்.

பாசிசம் என்ற இயக்கத்தைத் தாபித்தவன் பெனிற்றோ முசோலினி என்ற ஒரு இத்தாலியன், அபிசீனியருக்கு எதிராக இவன் நடாத்திய போர் நடவடிக்கைகள் பாப் பாண்டவரின் ஆசியைப் பெற்றிருந்தன.

பொருளியல் துறையிலும் சரித்திரம் நன்மைபயக்கும் திசையில் மாற்றப்பட்டது. கொள்கைகளிலும் திணறடிக் கப்படாது, விஞ்ஞானம் ஊக்கம் பெற்றது. பூகோள ஆராய்ச்சிகளின் பயனாக வர்த்தக மார்க்கங்கள் கண்டு பிடிக்கப்பட்டன. மனிதன் தான் வாழும் உலகைப்பற்றி விரிவாக அறியத் தொடங்கினான். 1498ம் ஆண்டில் வஸ்கோடகாமா என்னும் போர்த்துக்கேய மாலுமி, ஆபிரிக்காவிலுள்ள நன்னம்பிக்கை முனையைச் சுற்றிச் சென்றால் தென்கிழக்காசியாவுக்குச் செல்லலாம் என்று கண்டுபிடித்தான். இவன் கண்டுபிடித்த வழியால், அஞ்சாநெஞ்சம் படைத்த மாலுமிகள் வர்த்தகத்திற்காகச் சென்றனர். சமயமாற்றத்தில் ஆர்வம் கொண்ட மத ஊழியர்கள் இம்மாலுமிகளுடன் கூடிச்செல்ல அதிககாலம் கழிய வில்லை.

முதலில் வந்த மத ஊழியர் நல்லெண்ணம் படைத்த வராயிருந்தனர், கிறிஸ்தவ கொள்கையாகிய அன்பைப் போதித்தனர்; பிறரையும் தம்மைப்போல் நேசிப்பதே தங்கள் சமயநெறியென்றனர். சகிப்புத் தன்மையைப் பற்றி மக்களுக்குப் போதித்தனர்—"ஒருவன் உன்னை ஒரு கன்னத்தில் அறைந்தால், மறுகன்னத்தையும் திருப்பிக் கொடு." "உனது இரு அங்கிகளில் ஒன்றையொருவன் கேட்டால், அவனுக்கு மற்ற அங்கியையும்கொடு" என்று அறத்தைப் புகழ்ந்தனர். "அரசன், அடிமை; உயர் குலத்தோன். இழிகுலத்தோன்—சகலரும் பால்,நிற, மத பேதமின்றி ஒரேகடவுளின் மக்கள்" என்னும் கொள்கையினால் மனித சகோதரத்துவத்தை விளம்பரஞ் செய்தனர். இது போன்ற கருத்துக்கள் வாயிலாக சாதி, நிறக் கட்டுப்பாடு அற்ற சர்வதேச சகோதரத்துவம் என்னும் கிறிஸ்தவக் கொள்கையை நிலைநாட்ட முயன்றனர்.

பெரும்பாலும், சாதிக்கட்டுப்பாட்டுக் கொள்கைகள் வேரூன்றியிருந்த இடங்களில், அன்பும் சமத்துவமும் போதித்த இக்கொள்கை, சிலமத மாற்றங்களுக்குக் காலாயிருந்தது. தென்கிழக்காசியாவில், கோவை, பாண்டிச்சேரி, திருவாங்கூர், நீர்கொழும்பு, மன்னார்

யாழ்ப்பாணம், காலி, கொழும்பு ஆகிய இடங்களிற் கூடுதலான மதமாற்றங்கள் ஏற்பட்டன. காலகதியில், இம் மதமாறிஞேரைப்பற்றிய செய்திகள், ஐரோப்பிய மதஊழியரின் வரலாறுகள் மூலமும், ஐரோப்பா திரும்பிய வியாபாரிகள் மூலமும் ஐரோப்பாவிற் சிறிதுசிறிதாகப் பரவின. இவற்றுடன் வேறு செய்திகளும் சென்றன. தென்கிழக்காசியாவிலுள்ள பாதுகாப்பு முறைகளின் பலவீனம், அரசர், இளவரசர் ஆதியோரின் கொடுங்கோன்மையும், துன்மார்க்கமும், அமைச்சர்களது இராஜத்துரோகம், நாட்டுமக்களைக் கூடுதலாக விலைகூறுவோருக்கு விற்கத் தயாராக இருக்கும் அவரது மனப் பான்மையும், ஆசியத் தலைவர்களின் படைகளிடையே எப்பொழுதும் துரோகமும் ஒழுங்கின்மையும் தலைகாட்டத் தயாராயிருத்தல் போன்ற பலவேறு புதினங்கள் ஐரோப்பாவிற் பரவின. திரும்பி வந்த பிரயாணிகளின் இக்கதைகளைப் பேராசை கொண்டவர்கள் செவிசாய்த்தனர். லிஸ்பன், மாட்றிட், பரிஸ், அம்ஸ்டர்டாம், லண்டன் அகிய பெரும் நகரங்களில் தமது செல்வத்தைப் பெருக்குவதற்குப் புது ஊற்றுக்களைக் தேடும் பேராசை படைத்தவர்கள், தென்கிழக்காசியாவை இலகுவில் பறிக்கக்கூடிய ஒரு கனியாகக் கற்பனை செய்தனர். கீழைத்தேசத்து நகரங்களின் நம்பமுடியாத செல்வத்தையும் சுகபோகங்களையும் பற்றிய வரலாறுகளைக் கேட்கும் பொழுது வியாபாரிகளின் கண்கள் அவாவிஞல் பிரகாசித்தன. தமது கீர்த்தி அதிகரிப்பதும், அலெக்சாந்தர் ஈட்டிய வெற்றிகளிற் சிறந்த வெற்றிகளைத்தாம் பெறுவதும், தாம் அடக்கிய மக்களிடம் திறை வாங்குவதும், இம்மக்களின் செல்வம் தமதுகாலடியிற் கிடப்பதும் போன்ற கனவுகளால், ஆட்சியாளரின் தலைகள் கிறுகிறுக்கத் தொடங்கின. ஒவ்வொரு ஐரோப்பிய அரசமன்றத்திலும் தென்கிழக்காசியாவின் தென்பகுதியைத் தத்தமது நாடுகளுடன் இணைப்பதற்குத் திட்டங்கள் வகுக்கப்பட்டன. கொள்ளையிற் கூடிய பங்கைப் பெறுவதற்காக அரசரும், அமைச்சரும், வணிகரும் ஒருவருக்கெதிராக ஒருவர் சதியாலோசனைகளிலும் சூழ்ச்சிகளிலும் ஈடுபட்டனர். ஆஞல், வாஸ்கொடகாமா வர்த்தக மார்க்கத்தைக் கண்டுபிடித்தது போர்த்துக்கலுக்கு அனுகூலமாயிருந்து போர்த்துக்கேயரே முன் எவராலும் ஆராயப்படாத இவ்வளம் பெற்ற பிரதேசத்தில் முதல் முதலாக இடம் பெறஉதவியது.

ஐரோப்பாவிலிருந்து கிறிஸ்தவ போர்வீரரும் மாலுமிகளும் பெருவாரியாகத் தென்கிழக்காசியாவை வந்தடைந்ததும், கிறிஸ்தவ மதத்தையேற்ற ஆசிய மக்கள் இவர்களுக்கு ஆதரவு அளித்ததனுல் ஐந்தாம்படையினராக விளங்கினர். வரப் போகிறதெனக் கூறப்பட்ட கிறிஸ்தவ சர்வதேச சகோதரத்துவமும் தேவனின் இராச்சியமும் நெருங்குகின்றன தென்றும் தென்கிழக்காசியக் கிறிஸ்தவர் உண்மையிலே நம்பி இவர்களைத் தமது இரட்சகரெனக் கருதினர். இவ் அப்பாவிகளின் செயல்கள் பயனுகவே தென்கிழக்காசியா ஐரோப்பிய நாகரிகத்தின் கீழ் நசுக்கப் பட்டது. போலிப் பயிற்சியாற் கொடாத இம்மக்களுக்கு வழிகாட்டியாக அமைய, இதற்கு முன் வெளிநாட்ட வருடன் பழகிய அனுபவம் இருக்கவில்லை. எனவே, புதிதாக வந்தோரின் வசீகரசக்தியும், தொழில் நுட்பத் தேர்ச்சிகளும், கம்பீரமான தோற்றமும் அவர்கள் மேல் வைத்த நம்பிக்கைக்குப் பெரும்பாலும் காலாயிருந்திருத்தல் வேண்டும். முதன் முதலாக கிறிஸ்தவ மதத்தை தழுவிய ஆசியா மக்களுக்கு மேலை நாட்டவருடன் தொடர்பு உண்டானபொழுது, அவர்களுக்கு இருந்த மனப்போக்கை மன்னிப்பதற்கு ஓரளவுக்குக் காரணம் இருந்தது. ஆனுல், இவர்களின் பின்வந்தோர் தமது அரசரைப் போலவே அதிகார மோகத்தினுல் எவ்விதத்தீமையிழைக்கவும் தயங்காதவரிடம் தமது வழிவழி உடைமையை வெட்க மின்றி விற்ருருடைய மனப்போக்கை மன்னிக்க எக்காரணமும் இல்லை.

நாலு நூற்ருண்டுகளாக ஐரோப்பிய ஆதிக்கம் தனது பிரதேசத்தின் பொருளாதாரத்தை முறியடித்துத் தனது மக்களின் பாஷையை உயிரற்றதாக்கி, அவர்களின் பண்பாட்டை அபகரித்துச் சுதந்திரத்தையும் பறித்ததை இன்று தென்கிழக்காசியா உணர்கின்றது. தொடக்கத்தில் சுயேச்சையாக ஏற்பட்ட கிறிஸ்தவ மதமாற்றங்கள் போர்த்துக் கேயரின் கீழ் தீயும் வாளும் உதவியாகக் கொண்டு நடத்தப்பட்டன. அவர்கள் பரவிய இடமெல்லாம், வத்திக்கான் ஆட்சி செலுத்தியது. இவ் ஐரோப்பியர் ''மற்ற அங்கியையும் கொடு'' என்னும் கொள்கைப்படி ஒழுகாதது மட்டுமல்ல; மூலப் பொருள்களும், சந்தைகளும் தேடும் போட்டியில் தென்கிழக்காசியாவைத் துண்டங்களாக்கி மக்களின் சுதந்திரத்தையும் அழித்தனர். தீமை புரியத்தயங்காதோர் சாம்ராச்சியங்களைத் தாபிப்பதற்குக் கிறிஸ்தவம் ஒரு தூண்டிலிரையாக

வமைந்தது. இத்துடன் ஆட்சி புரியும் சாதியினரின் சித்தத்துக்கு மக்களை அடிமைகளாக்கும் நோக்குடன், கிறிஸ்தவ மதத்தைப்பரப்பி, அதனூடாக அதிகாரத்தை நிறுவித் தொடர்ந்த நூற்றுண்டுகளில் அவ்வதிகாரத்தைப் பரிபாலிப்பதற்காகப் பணமும் ஆற்றலும் செலவழிக்கப்பட்டன.

இப்பொழுது ஐரோப்பாவை நோக்குவோமாயின், பிரபுத்துவ முறையும், அக்கண்டத்தில் நிலவிய மற்ற முறைகளும் அற்றுப்போய்க், கைத்தொழிலுக்கும் முதலாளித்துவ பொருளாதாரமுறைக்கும் இடங் கொடுப்பதைக் காண்போம். மானிய முறையின் கீழ்த் தலைமுறை தலை முறையாகக் கஷ்டப்பட்ட கமக்காரர், வேளாண்மையினதும் நிலமானிய முறையினதும் முக்கிய அம்சமாக இருந்தன. முன்னேற்றம் அடைந்த நாடுகளில், இம்முறை படிப்படியாக மறைந்துபோக, இவர்களது வாழ்க்கைமுறையும் தகுந்த விதத்தில் மாற்றம் அடைந்தது. எனினும் பல இடங்களில்,—குறிப்பிடத் தக்கதாக ருஷ்யாவிலும் கிழக்கு ஐரோப்பாவிலும்—ஊழியமுறை முற்றிலும் மறையாது பல நூற்றுண்டுகளாகத் தயங்கி நின்றது. இங்கிலாந்தில் நடைபெற்றது போல் மற்றைய இடங்களிலும், கமக்காரர் பொருளாதார நெருக்கடியால், தொழிற்சாலைகளுக்குத் துரத்தப்பட்டனர். எனினும், தொழிற்சாலைகளிலும் அவர்கள் கஷ்டம் குறைந்தபாடில்லை. இதற்கு மாருக அவை அதிகரிக்கலாயின. ஆசியாவிற் கொள்ளையடித்த மூலப்பொருட்களைக் கைத்தொழிலிற் பாவித்துத் பெருஞ் செல்வத்தை ஈட்டும் கைத்தொழில் முதலாளிகளின் பேராசை தொழிலாளிகளைப்பெரும் கஸ்டங்களுக்குள்ளாக்கியது. விவரிக்க முடியாத அசுத்தம் நிறைந்த சூழலில், நெசவுத்தறிச் சாலைகளிலும் நிலக்கரிச்சுரங்க வாயில்களிலும் மணித்தியாலக் கணக்காக ஆண், பெண், சிறுபிள்ளையாகிய யாபேரையும் ஒரேவிதத்தில் அடிமைகளைப்போல் விரட்டி, இம்முதலாளிகள் வேலை வாங்கினர். இதைத் தொடர்ந்து கைத்தொழில் யுகத்தின் இருள்படிந்த சேரிகள் எழுந்தன. இவை, ஒவ்வொரு பெரும் நகரின் மார்பிலும் துர்நாற்றம் வீசும் சீழ்பிடித்த புண்களைப்போற் காட்சியளித்தன. இங்கு, அழுக்கும் துர்ப்பாக்கியமுமாகிய நச்சுப்புகையின் மத்தியிலே அக்கிரமமும் மிருகத்தன்மையும் செழித்தோங்கின.

இந்நிலை பலரின் மனச்சாட்சியைத் திடுக்கிடச் செய்தது. கூடுதலாக மனிதத் தன்மையும் அறிவும் படைத்த மனிதர் பலர் இச்சூழ்நிலையைத் திருத்தியமைக்கப் பல முறை முயன்றனர். புரொட்டஸ்தாந்து மதப் பிரிவுகளி லொன்றைச் சேர்ந்த குவேக்கர்கள் இத்தகைய சீர்திருத்த இயக்கங்களின் முன்னணியிற் திகழ்ந்தனர். நாளடைவில், சிறைவாசத்திருத்தங்களுட்படப் பல திருத்தங்களைப் புகுத்துவதில் இவர்கள் வெற்றிகண்டனர். ஆனால், இவர்கள் ஒரு சிறு பிரிவினராக விருந்ததனால் மிருகங்களைப்போல் யோசனையும் உணர்ச்சியும் அற்றோருடன் கடும் போர் புரியவேண்டியிருந்தது. அடிக்கடி யிப்போராட்டம் பயனற்றதாகவும் இருந்தது. தம் நாட்டில் வறியோரைக் கொள்ளையடிப்பதைக் கண்டிப்பதுடன் நிற்காது இவர்கள் லாபமளிக்கும் ஆபிரிக்க அடிமை வியாபாரத்தையும் உறுதியுடன் எதிர்த்ததனால், அரைப் பைத்தியங்களெனக் கருதப்பட்டனர். கடவுள் நீகுரோவை வெள்ளையரின் அடிமைகளாக இருக்கவே சிருட்டித்தாரென்றும் இதை நிரூபிப்பதற்கு நோவாவும் அவனது மக்களதும் பிபிலிக்க கதையை மேற் கோளாகக் கூறி நிறுவப்பட்ட திருச்சபை மேற்றிராணிமார் இவர்களை நிந்தித்தனர். அஞ்ஞானிகள், பகுத்தறிவு வாதிகள், புரட்சிக்காரர் ஆதியோரின் வாயிலிருந்தே யேசு கிறிஸ்துவின் உண்மையான போதனையைக் கேட்க வேண்டியகாலம் வந்துவிட்டது.

பிரான்சில், வோல்ரயர், றூசோ போன்றவர் புரட்சியின் முன்னோடிகளாக இருந்தனர். பிரான்சில் வத்திக்கானின் அதிகாரம் முறியடிக்கப்பட்டது. ஆனால் பொது முன்னேற்றத்தைப் பொறுத்த அளவில் புரட்சி தோல்வியடைந்தது. எனினும், கூடுதலாக விஞ்ஞான ரீதியிற் சிந்திப்போருக்கு அதி வழியமைத்தது. கடைசியில் கார்ல் மாக்ஸ், எஞ்சல்ஸ் போன்றவரே பொருளாதரப் பயிற்சி மூலம், அக்கால நிலைமைக்குப் பொறுப்பாயிருந்த சரித்திர உண்மைகளை ஆராய்ந்து, பழைய முறையை நீக்கவும்; முதலாளித்துவ சுரண்டலை அழிக்கவும் வழிவகுத்தனர். உலகத் தொழிலாளர் தங்கள் தளைகளையன்றி வேறு எதையும் இழக்கமாட்டாரெனக் கூறி மாக்ஸ் அவர்களை ஒன்று சேரும்படி கோரினர்.

பிரஷ்யாவிலுள்ள றியர் என்னும் நகரில் கார்ல் மாக்ஸ் பிறந்தார். யூத நியாயாதிவாதியாகிய அவரது தந்தை புரட்டஸ்தாந்து மதத்தினர். ஈஸ்வரஞானத்தைக்கண்டித்

துப் பொருளியல் வாதத்தை ஆதரித்த லுத்விக் வூர்பாக் (Luduing Fuerback) என்பவரின் கொள்கைகளால், இளம் பருவத்திலேயே தூண்டப்பட்டார். 1842ம் ஆண்டில் கொலோன் நகரில் உள்ள 'Rheinische Teiking' என்ற இடது சாரிக் கெகலிய (Hegelian) புதினப்பத்திரிகைக்கு அதிப ராஞர். கெகலிய தத்துவமும் இவரது கொள்கைகளை உருவாக்குவதற்குக் காலாயிருந்தன. ஐரோப்பாக் கண்டத்திலிருந்து இங்கிலாந்துக்கு நாடு கடத்தப்பட்டதஞல் இவரது கொள்கைகள் சர்வதேசமயமானதாயும், எல்லா நாட்டுத் தொழிலாளரையும் இனப் போராட்டத்தில் ஒன்று சேர்க்கும் இலக்கைக் கொண்டதாயும் இருந்தன. இக் கொள்கையை ஆதரித்த, புகழ்பெற்ற கம்யூனிஸ அறிக்கையை 1847ம் ஆண்டில் மாக்சும் எஞ்சல்சும் வெளியிட்டனர். முதலாளித்துவத்தை அழிப்பதற்காகத் தொழிலாளரை ஒன்று சேரும்படி இவ்வறிக்கை அழைத்தது. லண்டனிலேயே 1864ம் ஆண்டில் மாக்ஸ் சர்வதேச தொழிலாளர் சங்கத்தை (முதலாவது சர்வதேச மகாநாடு) நிறுவிஞர். இவரது ''டாஸ் கபிற்ருல்'' என்னும் மகத்தான நூல் நான்கு தொகுதிகளாக வெளிவருமென எதிர்பார்க்கப் பட்டது. முதலாவது தொகுதி 1867ம் ஆண்டில் வெளி வந்தது. இன்னும் இரு தொகுதிகள் பின் வெளியிடப் பட்டன. கடைசித் தொகுதியாகிய நாலாவது தொகுதியை அவரால் முடிக்க இயலாமற் போய் விட்டது. 1883ம் ஆண்டில் தனது 64ம் வயதில் அவர் இறந்தார். இவரது நண்பஞகிய எஞ்சல்ஸ் இவரது மரணத்துக்குப் பின்னர், நாலாவது தொகுதியைப் பூர்த்தியாக்கிஞர்.

மாக்சின் கொள்கைகள் ஒரு மானிட அவதாரம் பெற்ற கடவுளின் கொள்கைகளென மாக்சியவாதிகள் கருதுகின்றனர். டாஸ் கபிற்ருலே இவர்களின் வேதநூலாகும், இவர்களது வணக்கத்தோடும் விசுவாசத்தோடும் கூடிப் பாப்பரசரின் கொள்கைக்குரிய தவருத்தன்மையுடனும் மாக்ஸ்தோற்றம் அளிக்கிருர். ஆயினும், இவர் காலத்திற்குப் பின் இவர் கொள்கைகளின் பல அம்சங்களைப் பிழையானவை யெனச் சரித்திரம் நிரூபித்துவிட்டது. முக்கியமாக வர்த்தகம், கைத்தொழில் ஆகிய முறைகளின் வரையறைக்குள் சோஷலிஸ முறைவளர்ச்சியடையலாம் என்பது பிழையெனச் சரித்திரம் கூறுகிறது. வலோற்காரமாக அதிகாரத்தைக் கைப்பற்றிஞற்தான் தொழிலாளர் தம் உரிமைகளைப் பெறலாமென மாக்ஸ் சாதித்தார். ஆகவே இரத்தம் சிந்தும் புரட்சி முறையை யாதரித்தார். ஆஞல் சர்வசன

வாக்குரிமை இக்கொள்கையைப் பொய்ப்பித்து விட்டது. பிரான்சிய புரட்சி போன்ற இரதத வெறி பிடித்த எழுச்சிகள் தொழிலாளரது உரிமைகளைக் கொடுக்கத்தவறிய போதிலும், ஒரு சமுதாய மனச்சாட்சியின் வளர்ச்சியும், பாராளு மன்றப் பிரதிநிதித்துவம், பத்திரிகைச்சுதந்திரம், வேறும் சனசாயகச் சாதனைகள் மூலம் இந்தச் சமுதாய மனச்சாட்சி யைக் கட்டுப்பாடின்றி வெளியிடுதலும் தொழிலாளர் உரிமைகளைப் பெற உதவியுள்ளன. பொதுமக்களின் கல்வி விருத்தியே இதற்குப் பெருமளவில் காரணமாயிருந்தது கல்வி மூலம் வாக்குரிமையைச் சரியான முறையிற் பாவிக்க மக்கள் தெரிந்து கொண்டனர்; சன நாயக சமுதாயத்தில் தமக்குள்ள பலத்தைப்பற்றியும் கூடுதலாக விளங்கிக் கொண்டனர். மார்க்ஸின் கொள்கைப்படி ஒரு முதலாளித்துவ சமுதாயத்தில் செல்வந்தர் வரவர முன்னையிலும் அதிக செல்வம் படைத்தோராவர், அவர்கள் தொகை குறைந்து கொண்டே போகும். இதேசமயத்தில் ஏழைகளது வறுமை கூடிக் கொண்டேபோகும், அவர்களது தொகையும் அதிகரிக்கும். ஆனல் இந்த நிலைமையைத் தவிர்க்கும் பொருட்டு, ஆக்கப்பட்ட சட்டபூர்வமான பல்வேறு நடவடிக்கைகளையும் இவர் எதிர்பார்க்கவில்லை. மரண வரி இறுத்தல், முதலாளித்துவ ஏகாதிகாரத்தை முறியடித்தல், இலவசக்கல்வி சுகாதாரம், வீடமைப்புப் போன்ற சமூக சேவைகளில் முன்னேறுதல், வாழ்க்கைத் தரம் உயருதல், நன்மை பயக்கும் தொழிற் சட்டங்கள் ஆகியவை இவர் வாக்குவாதத்தை அர்த்தமற்றனவை யாக்கிவிட்டன.

சரித்திரம், மாக்சின் அரசியல், பொருளாதாரக் கொள்கைகளைப் புராதன சின்னங்களாக மாத்திரம் மாற்றி விட்டது. அல்லது மனிதன் விவேகத்துடன் இக் கெடுதியைச் சரியான நேரத்தில் தடுத்திருக்காவிடில் என்ன நடந்திருக்கக்கூடும் என்பதற்குச் சிறந்த அறிகுறியாக விளங்குகின்றது. இப்படியிருந்த போதிலும் புரட்சித் தலைவனுகிய லெனினின் தைலமிடப்பட்ட சடலத்துடன் இக்கொள்கைகளும் கிரெம்ளினில் இற்றைவரை பாதுகாக்கப்பட்டு வருகின்றன. மொறிசியஸின் இறந்தொழிந்த தோடோ (Dodo) பறவையினத்தைப் போன்றும், சரித்திர காலத்துக்கு முற்பட்ட கதைகளையாதார மாகக் கொண்டு எழுந்த சமயக்கொள்கைகளைப் போன்றும், இக்கொள்கைகள் இறந்து அற்றுப்போய் விட்டன; ஆனல் முற்போக்கு, அநித்தியம் என்பனவற்றின் விதிகளுக்கு

முரண்பட்ட செயற்கை வழிகளைக் கையாண்டு இக் கொள்கைகள் சிதையாது பாதுகாக்கப்பட்டு வருகின்றன. வத்திக்கான், கிறிஸ்துவின் போதனைகளிலொன்றையாவது பின்பற்றாது, தனது சாம்ராச்சியத்தை விஸ்தரித்து ஸ்திரப்படுத்தும் ஒரே நோக்குடன், வீரவணக்கத்தையும் கிறிஸ்துவ விசுவாசத்தையும் வளர்ப்பது போன்று, கிரெம்ளினில் உள்ள அரசியற் தலைவர்களும் தாம் உலக ஆதிக்கத்தைப் பெறுவதற்காக உலகத் தொழிலாளரை ஒரு கருவியாகக் கொள்ளும் நோக்கத்துடன் மாக்ஸ் வழிபாட்டையும், அவரது பழைய கொள்கைகளிற் குருட்டு நம்பிக்கையையும் காப்பாற்றி வருகின்றன. இங்கு நாம் முரண்பாட்டில் ஒப்புமையைக் காண்கிறோம். சரித்திரத்தில் இதைப் போன்று பல உதாரணங்களைச் சுட்டிக்காட்டமுடியுமெனினும் இதே போன்று சிறந்த, ஆணித்தரமான உதாரணத்தைக் காணமுடியாது.

மூன்று செமித்திய சமயங்களைப் பற்றியே மாக்ஸ் அறிந்திருந்தார். அவையாவன—தனது தந்தையார் ஏற்காது தள்ளிவிட்ட யூத சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாமிய சமயம். இச்சமயங்களெல்லாம் முதலாளித்துவத்தை வளர்த்ததையவர் கண்டார்; இச்சமயங்கள் தோன்றிய காலந்தொட்டு முதலாளித்துவத்தை வலர்த்தே வந்திருக்கின்றன. மறு உலகிற்தாம் அனுபவிக்கும் பேறுகளை எதிர்பார்த்து, இவ்வுலக துன்பங்களைப் பொறுமையுடனும் பணிவுடனும் மக்கள் சகிக்கச் செய்வதற்கேற்ற கருவியாகச் சமயத்தை ரபிகளும், பாப்பரசரும், காலிபுகளும் பாவித்து வருவதை மாக்ஸ் உணர்ந்தார். மக்கள், விசுவாசமும் கீழ்ப்படிவும் உள்ளவர்களாக இருந்ததால், மத குருமாரின் உபதேசங்களுக்குச் செவிசாய்த்துத் தமக்கு எவ்வித அநீதிகள் இழைக்கப்பட்ட போதிலும், அவற்றைப் பணிவுடன் ஏற்றுக் கொண்டனர்.

வறுமையும் தாழ்மையும் கடவுளுக்கு உகந்தவை; நசுக்கப்படும் மக்கள் இராயனுடையதை இராயனுக்குச் செலுத்த வேண்டும் என்றும் அந்தந்த நாளுக்கு அதினதின் பாடுபோதும் என்பதை நினைவூட்டியும் வத்திக்கான் உபதேசித்த பொழுதிலும், இராயனுக்குரியவற்றிற் கூடிய பகுதியை வத்திக்கானே பெற்றுக் கொள்வதை மாக்ஸ் கண்டார். ஏழைச் செம்படவனை பேதுரு வழிவந்தவரான பாப்பாண்டவர் சீஷர்களின் அரியாசனத்துக்கும் உரிமையாளன் அல்லவா? இதன்

பயனுகை, ஐரோப்பாவிற் செல்வமும் அதிகாரமும் வாய்ந்த ஸ்தாபனங்களுள் வத்திகான் முதன்மை பெற்று விளங்கிய தோடல்லாமல் இன்றும் அப்படியே இருக்கிறது. ''ஐசுவரிய வான் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பதைப்பார்க்கி லும் ஒட்டகமானது ஊசியின் காதிலே நுழைவது எளிதா யிருக்கும்'' என்று யேசு கூறியிருக்கிறார். எனினும், உலகின் கிறிஸ்தவருள் முதல்வரும் தலைசிறந்தவருமான பாப்பாண்ட வரே அதி செல்வந்தரென்பதைக் கார்ல் மாக்ஸ் கண்டார். 'பரலோகம் என்று ஒன்று இருப்பின், அவர் பரலோகத்துட் பிரவேசிக்கமுடியுமா'? என மாக்ஸ் வினவினார். இவற்றைக் கண்ட மாக்ஸ் ஒரேயொரு முடிவுக்குத்தான் வரமுடிந்தது— பாப்பாண்டவர் பரலோகம் உண்டென்பதை நம்பவில்லை, அல்லது பரலோகத்தைப்பற்றிக் கூறுவதற்கு யேசு தகுதிவாய்ந்தவர் என்று நம்பவில்லை. உனக்கு உண்டான வைகளையெல்லாம் தரித்திரருக்குக் கொடுத்துவிட்டு என்னைப்பின்பற்றி வா' என யேசு ஒரு செல்வந்தனை வாலிபனுக்கு கூறினார். இப்படியிருக்கப் பாப்பாண்டவர் விளக்கமாகக் கூறுவதென்ன? 'உன்னிடமிருப்பதெல்லா வற்றையும் எனக்குக் கொடுத்துவிட்டு என்னைப்பின்பற்று.''- ஆம், எல்லாவற்றையும்!— ''உனது காணிக்கையாகச் செல்வங்களையும், உனது குருட்டு நம்பிக்கையையும் உனது அந்தரங்கக் கருத்துகளையும்,- கடவுளின் தனிச் சிருஷ்டியானதும் அழிவற்றதுமென நான் எப்பொழுதும் கூறுகின்ற உனது ஆத்மாவையுமே எனக்குக் கொடு.'' இவையெல்லாவற்றையும் தனது உரித்துக்களாகப் பாப் பாண்டவர் கோரினார்.

இந்நிலையை உணர்ந்த ஆங்கிலேய புரொட்டஸ்தாந்து குருவானவரொருவர் இதைவிவரிப்பதற்குப் பாவித்த சொற் றொடரை மாக்சும் பாவித்து, 'மதம் மக்களின் அபின்' எனக் கூறினார். கிறிஸ்தவ சோஷலிஸ வாதியான சாள்ஸ் கிங்ஸ்லி இக்கூற்றைப் பாவித்த பொழுது ஊழல் களையும் தன்னயத் தேட்டங்களையும் மதம் ஆதரிக்குமாயின், அது மக்களின் அபினுகும் என்ருர். ஆனுல், மாக்ஸ் தவிர்ப்பு இல்லாமல் எல்லாமதங்களுக்கும் இவ்வியாக்கி யானத்தைக் கூட்டினர். தமது கூற்றுக்கு ஒரு கொள்கை யந்தஸ்தையே அளித்து விட்டார்.

இது அவரது நோக்கமாயிருந்திருக்காது. ஏனெனில், வாழ்க்கை, பிரபஞ்சம் ஆகியபிரச்சினைகளை ஆராயும் பொழுது அவர் தற்கால விஞ்ஞானிகளின் முறைகளைக்

கையாண்டார். உண்மையிற் புத்தரின் நோக்கை இவர் நோக்கு ஓரளவுக்கு ஒத்திருந்தது. தெரிந்த உண்மைகளைத் திரட்டி, தெரிந்ததனூடாகத் தெரியாதனவற்றை விளங்கிப் படிப்படியாக அறிவைப் பெறுவதேயவரது முறையாக விருந்தது. அவரது கொள்கையின் பிடிவாதத்தன்மை அவரைப் பின்பற்றினவர்களின் தவறான உற்சாகத்தின் விளைவாகும்; அக்கொள்கையிலிருந் தெழவில்லை. ஏனெனில், மாக்ஸ் விஞ்ஞானரீதியிலமைந்த சிந்தனையாளன் என்ற முறையில் 'மாற்றம்' என்ற விதியை ஏற்றுக் கொண்டார். அவர் பெயருடன் சம்பந்தப்பட்ட 'எல்லாம் அறிந்த ஞானி' என்ற தன்மையை அவர் தனக்குரியதாகக் கொள்ளவில்லை.

அவர் மதத்தைப்பற்றி ஆராயத் தொடங்கிய பொழுது, தானறிந்த மூன்று மதங்களும், அறியாததை யறிந்ததென உறுதியுடன் சாதிப்பதையவர் உணர்ந்தார். கடவுள், ஆத்மா போன்ற தெரியாதனவற்றின் தன்மையைப் பற்றித் தாம் கொண்டிருந்த கொள்கைகளுக்கேற்பத் தெரிந்த உண்மைகளை வற்புறுத்தியமைத்துக் கொண்டதையவர் கண்டார். இந்த முறையிலிருந்த அறிவுடனொவ்வாத பொய்மை உடனே விளங்கிற்று. மேலும், அவர்கள் யூகிக்கும் முடிவுகள் அவர்களது கொள்கைகளைப் பொய்யாக்கினதைக் கண்டதும், மதங்களெல்லாம் ஒரு மோசடியென்றும், வருந்தும் பொதுமக்களைச் சமாதானப்படுத்துவதற்காகச் சிலாக்கியம் படைத்தவர்கள் சமூகத்தின் மீது திணித்த ஒரு அபினியே யென்றுங் கிரகித்துக் கொண்டார்.

தாம் மிகவும் மதித்த தத்துவ ஞானிகள் கூறினவற்றை யிந்தமுடிவுக்கு ஆதாரமாகக் கொண்டார். உள்ளம், பொருள் ஆகிய இரண்டாலும் ஆனதே வாழ்க்கையென்றும், பொருளின் விளைவாகவே உள்ளம் எழுந்ததென்றும் எண்ணத்தை யடிப்படையாகக் கொண்டது லுட்விக் வோர்பாக் (Ludwig Fuerbach) என்பவரின் கொள்கை. சூழல், சமுதாயம் ஆகியவற்றின் செல்வாக்கினால் உள்ளம் உருவாக்கப்பட்டதென்பதை இவ்லோகாயத வாதிகள் பிரபஞ்சத்தை விளக்கியிருப்பதிலிருந்து யூகிக்கலாம். தனக்கே சொந்தமான தன்மைகள் உள்ளத்துக்கு இருக்காவிடின், அது பெற்றிருக்குந் தன்மைகள் அதற்குப் புறத்துள்ளனவற்றின் பயனாகத்தான் தோன்றியிருக்க வேண்டும். மார்க்ஸ் இந் நிலையை ஏற்றுக் கொண்டு, இதிலிருந்து தனது அடிப்படைக் கொள்கையை

அமைக்கத் தொடங்கினர். தத்துவ ஞானம் சூழலை விளங்கினால் மட்டும் போதாது; அதை மாற்றியமைக்கவும் வேண்டும். எனவே, சமூகத்தைப் படிமுறை வளர்ச்சியுறச் செய்தல் மனிதனின் நோக்கமாயிருக்க வேண்டும். வேறு விதமாகக்கூறின் உள்ளம் எச்சூழலில் விருத்தியடைகின்றதோ அச்சூழலைத் திருப்பியமைக்க வேண்டும்.

அது எப்படிப்பட்ட சமூகமாயிருக்க வேண்டும்? பயனீட்டுக் கொள்கையைக் கடைப்பிடித்த பிரித்தானிய தத்துவ ஞானிகள் இதற்கு விடை பகர்ந்தனர். கூடின தொகையினருக்கு அதிக இன்பத்தையளிக்கக் கூடிய சமூகமேயது. உலகத்திற் பாட்டாளி மக்களே கூடுதலான தொகையினராக இருக்கின்றனர்; அவர்கள் ஒதுக்கப்பட்டும் சுரண்டப்பட்டும் வாழுகின்றமையால் அவர்களுக்குச் சந்தோஷம் கிடைக்க முடியாத ஒரு பொருளாகும். இப்பிரச்சினையைத் தீர்க்கும் வழியை மார்க்ஸ் தெளிவாகக் கண்டார். "எல்லாருடைய பொருளாதார தேவைகளையும் பூர்த்தி செய்யும், வகுப்பு பேதமற்ற சமூகத்திற்றான் மனிதன் சந்தோஷமாக வாழமுடியும்" என அவர் நினைத்தார். எனவே, சோஷலிஸ சமூகம் அவரவருக்கு அவரது தொழிலுக்குத் தகுந்தபடி என்ற நிலையிலிருந்து, அவரவருக்கு அவரது தேவைக்கு ஏற்றபடி என்னும் நிலைக்கு முன்னேற வேண்டும்.

மனிதன் தன்னைப் பற்றியும் பிரபஞ்சத்தைப் பற்றியும் கொண்டிருந்த கருத்துக்களை விஞ்ஞானம் புரட்சிகரமாக மாற்றியமைக்கும் யுகத்தில், மாக்சுக்கும் இன்னும் பலருக்கும் இது தர்க்கரீதியில் அமைந்த ஒரு பூரணமான விடையாக இருந்தது. மனிதன் ஒரு பிரத்தியேக நியமம் கொண்ட சீவன் என்றும், இறப்புக்குப் பிறகு வாழ்வு உண்டென்றும், அவன் வாழ்க்கை ஆத்மீக தன்மை பெற்றது, அதற்கு, ஜீவனளிக்க லௌகீக இன்பங்கள் மட்டும் போதாது என்றும் கூறுங்கொள்கைகளை விஞ்ஞானம் பொய்ப்பித்து விட்டால், இந்த வாதம் சரியாக அமையும். இதில் உள்ள அதிசயம் என்ன வென்றால் இதற்கு முன் மக்கள் இந்த வாதத்தைப் பொருட்படுத்தவில்லை. விஞ்ஞானம் பரவுவதற்கு முன் பல லோகாயத வாதங்களும் சூனிய வாதங்களும் உலகிற் தோன்றின பொழுதிலும், ஏதோ காரணங்களால், ஒரு சிலரே அவ்விதக் கொள்கைகளை யாதரித்தனர். மக்களிற் பெருந் தொகையானோர் தீர்க்க தரிசிகளின் வெளிப்படுத்துதல்களையும் தெய்வீகத் தன்மை வாய்ந்தவை எனக் கருதப்படும் பரிசுத்த நூல்களின்

சொற்களையும் மத குருமாரின் வாக்குறுதிகளையும் நம்பி வந்தனர். பொய்யானவை அல்லது நடக்கமுடியாதவை யென விஞ்ஞானம் நிரூபித்த கொள்கைகளை யெல்லாம் உண்மையானவை யென்றுபழைய கோட்பாடுகள் இன்னும் போதித்து வந்தன.

செமித்திய மதங்களான யூத சமயம், கிறிஸ்தவ சமயம், இஸ்லாமிய சமயம் ஆகிய மூன்று மதங்களும், மனிதனுக்கு ஆத்மா என்று ஒன்று உண்டென்றும்; மிருகம், பறவை, மீன், பூச்சி, புழு ஆகிய குறைந்த தரத்தைச் சேர்ந்த ஜீவன்களுக்கு ஆத்மா இல்லை யென்றுங் கூறின. இந்த 'ஆத்மா' கடவுளின் ஒரு பிரத்தியேகமான சிருஷ்டி; மனிதன் மட்டுமே இதைப் பெற்றுள்ளான்; இந்த ஆத்மாவே அழிவில்லாத சிரஞ்சீவித்துவத்தன்மையிற் பங்கு பற்றுகிறது. விஞ்ஞானம் அளித்த அறிகுறிகளைக் கொண்டு 'ஆத்மா' உண்டென்று நம்புவதற்கு கார்ல் மாக்ஸ் எவ்வித நியாயத்தையுங் காணவில்லை. தனக்கெனச் சிறப்பான தோற்றமும் மனிதப்பண்பும் மனிதனுக்குண்டு; இதைவிட அழிந்து போகும் உடலையும் எப்பொழுதும் மாறிக் கொண்டிருக்கும் உள்ளத்தையுந் தவிர மனிதனிடம் மாறுதலில்லாது நீடித்து நிலைபெறும் வேறெதுவும் இல்லை. கடவுளுடையது அல்ல; ஆனல் மனிதனின் இறுமாப்பு மிக்க அகங்காரம், பகட்டு ஆகிய வற்றின் விளைவாகிய கற்பனைச் சிருஷ்டியே தவிர ஆத்மா வேறெதுவுமில்லை. மனிதனுக்கும் மிருகத்துக்கும் இடையில் அடிப்படையான வேறுபாடு இல்லை யென்பது தெளிவாக விளங்கிற்று, வித்தியாசம் இருப்பின் அது தரத்தில் வித்தியாசமேயொழிய இனவித்தியாசம் இல்லை. மனிதனுக்குக் கூடிய புத்தியுண்டு; தன்னைச் சூழ்ந்திருக்கும் உலகத்தைத் தனது வசதிக்கும் தேவைக்கும் ஏற்றபடி அமைத்துக் கொள்வதில் கூடிய வல்லமையுள்ளவனயிருந் தாலும், அவன் மற்றெல்லாவிதத்திலும் மிருகந்தான். அவனது நரம்பு அமைப்பு முறை மிருகத்தின் நரம்பு முறையைப் போன்றதுதான்; உணவு ஜீரணமுறை, இனப் பெருக்க முறை இன்னும் மற்றும் முறைகளும் மிருகங்களுடைய முறைகளைப் போன்றதே; ஒரே அடிப்படையிலேயே அவையெல்லாம் இயங்கின. மனித மூளையின் பொது அமைப்பும் மிருக மூளையின் பொது

அமைப்பைப் போன்றேயிருந்தது, பருமனிலும், வடிவத்திலும், மடிப்புக்களிலுமே வித்தியாசம் இருந்தது. மிருகங்களுக்கு அழிவற்ற ஆத்மா இல்லையென்றால், மனிதனுக்கு அத்தகைய தொன்றுண்டு எனக்கொள்வதற்கு ஒரு காரணமும் இல்லை.

மாக்ஸ் அதை அறிந்திருக்கவில்லைப் போலும்; ஆனால் புத்தர் இதேமுடிவை இருபத்தைந்து நூற்றாண்டுகளுக்கு முன் கண்டார். அக உள்நோக்கு வல்லமை புத்தருக்கு இருந்தது; செயலறிவு சார்ந்த விஞ்ஞானத்தைப் பின் பற்றிய மாக்ஸ் இந்த வல்லமையைப் பெறவில்லை. எனவே புத்தர் இறுதியிற் கண்ட முடிவு, பத்தொன்பதாம் நூற்றாண்டு லோகாயத வாதியான மாக்ஸ் கண்டமுடிவிலும் முற்றாக வேறுபட்டிருந்தது. மரணமே முடிவு; அதற்கப்பால் வாழ்வில் எவ்வித தொடர்ச்சியுமில்லை. மனிதனின் சிந்தனைக் கருத்துக்களே அழிவின்றி அவன் இறந்த பின்னும் சமுதாயத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் என மாக்ஸ் கருதினார்.

லோகாயத வாதிகளின் தருக்க முறையும் மாகஸின் முடிவைத் தெளிவற்றதாக்கியிருக்கலாம். பொருளின் விளைவாகிய உள்ளம் திருகு சுருளைப் போல் படிப்படியாக விரிந்ததென லோகாயதவாதியான வோர்பாக் (Fuerbach) நம்பினார். உள்ளம் இவ்விதத்தில் சதா படிப்படியாக விரிந்து கொண்டேயிருக்கிறதென்றும், இப்படிப்படி வளர்ச்சி மாறிமாறி எழுச்சியும் வீழ்ச்சியுங் கொண்ட திருகு சுருள் வடிவமானதென்றுங் கொண்டார். இவ்விதம் வீழ்ச்சி எப்பொழுதும் முன்னைய எழுச்சிகளிலும் உயர்ந்த இடத்தில் ஏற்பட்டு, மேல் நோக்கிச் செல்லும் செய்கையை இவ்வளர்ச்சிக்கு அளிக்கின்றது.

எனவே, கடவுள், ஆத்மா, மது ஆகிய மூன்றிலும் ஊறிக்கிடந்த ஐரோப்பாவில், மாக்சிய வாதிகள் தாம் ஒரு அதிசயத்தைக் கண்டு பிடித்துவிட்டதாக கருதினர். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டுகளில் தாம் முற்போக்கு வாதிகளென்று இறுமாப்புக் கொண்டு மற்றவர்கள் பிற்போக்கு வாதிகளென்று அவர்களைக் கண்டித்தனர்.

எல்லையற்ற ஆகாய வெளியினுலும் கணக்கிடமுடியாத அணுக்காளாலும் ஆக்கப்பட்டதே பிரபஞ்சம் என்று சிறப்பாகத் தென் கிழக்காசியாவுக்கும் பொதுவாக மனித சமுதாயத்துக்கும் ஆரும் நூற்றாண்டிற் புத்தர் போதித்தார்

அணுக்கள் பெயர்ந்து கொண்டேயிருக்கின்றன; அவற்றைத் திடப் பொருள், திரவப் பொருள், வாயு, வெப்பம் என நான்கு பெரும் பகுதிகளாகப் பிரிக்கலாம். அணுக்கள் ஒன்றோடொன்று சேர்ந்தாலும் மோதுதலினாலும் சக்தி பிறக்கிறது. இச்சக்தியின் ஒரு வடிவமே உள்ளம்.

அவ்வுள்ளம் அவாவின் ஒரு கூறாகியதும் காலத்திலும் இடத்திலும் சதா தொடர்ந்து வாழும் திடப்பொருள், திரவப் பொருள், வாயுப் பொருள் வெப்பப் பொருள் என்பன வற்றையுபயோகித்து, மாறி மாறிப் பிறப்புகளில் அவாவின் வெவ் வேறு கூறுகளாகச் சதா இயங்கும். உள்ளமும் ஏனைய சக்திகளைப் போன்று சில விதிகளால் ஆளப்பட்டு வருகின்றது.

காலம், இடம், அணு, சக்திகள் எல்லாவற்றைப் பற்றிய அறிவையும் உள்ளமே ஆராய்ந்து அளந்து, ஒதுக்கிப் பதிந்து கொள்கிறது. வட கோளத்துக் குளிர்ப்பிரதேசங்களில் வாழும் மேற்கத்திய மனிதன் அதிக அறிவு பெறுவதிற் கஷ்டம் காணவில்லை. எல்லாத்துறைகளிலும் அவன் அதிக முன்னேற்றம் அடைந்திருக்கிறான், அவன் பெற்ற அறிவு மனிதவர்க்கம் முழுவதற்குமே அதிக நன்மை பயந்திருக்கிறது. அவனுடைய உள்ளம் என்னும் சக்தி தான் இந்த அறிவைக் கண்டுபிடிக்கிறது. பூதக்கண்ணாடி, தூரதிருஷ்டிக்கண்ணாடி, ரசாயன ஆய்கூடம், ஒலி அலைகள் கணிதம் போன்ற பல சாதனங்களையும் அறிவியல்களையும் உபயோகிக்கிறான். ஆனால், உள்ளத்தைப்பற்றி ஆராய்வதற்கு உள்ளம் என்ற ஒரேயொரு கருவியைத்தான் பாவிக்கலாம். இது தன்னைப்பற்றி யாராயும் பொருட்டு ஒரு கத்தி தன்னைத் தானே வெட்டுவதை யொக்கும்.

உள்ளத்தை விளங்குவதற்கு உள்ளம் தூய்மைப்படுத்தப்படல்வேண்டும். இந்தவழியைப் புத்தர் காட்டியிருக்கிறார். பொதுவாக, மதுபான நாகரீகத்தில் வாழும் மக்கள் இப்படியான உள்ளத்தைத் தூய்மைப் படுத்தும் முறையைக் கடைப்பிடிக்க முடியாது. இதனாற்றான் மேலைத்தேய மனிதனது உள்ளம் பலதுறைகளிற் சிறந்துவிளங்கிய போதிலும், தன்னைப் பொறுத்தளவிற் தெளிவற்றதாய் இருக்கின்றது.

உடலையும் உள்ளத்தையும் பற்றிய பூரண விளக்கம் அளிக்கும் சதிபட்டானுவைப் பின்பற்றி, அட்டசீல ஒழுக் கத்தை யுணர்ந்தவருக்குக் கார்ல் மாக்ஸின் கருத்துக்களும், உள்ளத்தைப்பற்றி மற்றைய ஐரோப்பியருடைய கருத்துக் களும் முக்கியத்துவம் வாய்ந்தவையாகத் தோற்று.

மாக்ஸ் இறந்தது முதல், அவர் நூலாகிய 'டாஸ் கப்பிற்றல்' (Das Kapital) தொழிலாளர் வகுப்பினரின் பிபிலியவேதமாக அமைந்தது. தம்முடைய உழைப்பினுல் பெற்ற மேலதிக லாபத்தைச் சிலாக்கியம் பெற்ற வர்க்கத்தி னர் தான் அனுபவிக்கின்றன ரென்பதைத் துன்பத்தில் உழன்ற தொழிலாளர் உணர்ந்தனர். இந்தப் போராட்டம் ஒரு விஞ்ஞானரீதியில் ஒன்றுபட்டுவிட்டது. மாக்சும், எஞ்சல்சும், மற்றும் பல எழுத்தாளர்களும் எதிர்நோக்கின கம்யூனிஸ அரசை நிலைநாட்டுவதே இலட்சியமாகிவிட்டது. 'உலகத் தொழிலாளரே, ஒன்று சேருங்கள், நீங்கள் இழக்க இருப்பது உங்கள் தளைகள் மட்டுமே' என்ற குரல் உலகத் தொழிலாளரின் யுத்த கோஷமாக அன்று இருந்தது. தொழிலாளரின் சர்வதேச சகோதரத்துவத்தின் சின்ன மாகச் சம்மட்டியும் அரிவாளும் விளங்கின.

சாதி, மத, நிற பேதமின்றி யுலகின் எல்லாப் பாகங்களிலு முள்ள தொழிலாளர்களை இரக்கமற்ற முதலாளித்துவ யந்திரம் நசுக்கி வந்தது. கடவுளின் சித்தத்தை நிலை நாட்டுவதாகச் சாற்றும் தாபிக்கப்பட்ட மதச் சக்திகள் இதையாதரித்து வந்தன; இன்னும் இன்னும் குடி யேற்ற நாடுகள், கூடுதலான அடிமை மக்கள், வியாபார ஸ்தலங்கள் என்பனவற்றை நாடி ஏகதேச்சதிகாரம், சர்வதேச முதலாளித்துவம், திறமையுடன் அமைக்கப்பட்ட திருச் சபை ஆகிய மூன்றும் கைகோர்த்துச் சென்றன. 1914-18ம் ஆண்டுகளில் ஐரோப்பிய வல்லரசுகளுக்கிடை யில் ஏற்பட்ட மோதுதல் பொருளாதார விஸ்தரிப்பின் பொருட்டு ஏற்பட்டதாகும்; பேராசையே இந்த அழிவுக் குத் தூண்டுகோலாயிருந்தது; ஜேர்மானியக் கைத்தொழி லதிபருக்குக் கூடிய வியாபாரச்சந்தைகள் தேவைப்பட்டன, ஏதேச்சதிகார அதிபதியின் பகட்டிற்காகக் குடியேற்றப் பிரதேசங்கள் தேவைப்பட்டன.

இந்தக் கலவரத்தின் நடுவில் 1917ம் ஆண்டில் முதலாவது மாக்சிய அரசு தோன்றிற்று. ரூஷ்யப் புரட்சிக்கு வ்லடிமிர்லியச் உலனவ் என்பவர் தலைமை தாங்கினுர். சரித்திரம் இவரை லெனின் என்று அழைத்தது. 1901ம் ஆண்டில் இந்தப் புனைபெயரைச் சூட்டினுர். மாக்சிய வாதத்திற் கைதேர்ந்தவரான லெனின் ஆட்சிக்கு வந்ததும் இராணுவச் சர்வதிகாரத்தை அமுலுக்குக் கொண்டுவர நேர்ந்தது. ஏனெனில், லெனினும் அவனது கட்சியும் மூன்று முனைகளில் யுத்தம் புரிந்தனர்; வடக்கில் ஜேர்மனியுடனும், பின்பு பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளுடனும்; கிழக்கில் யப்பானுடனும், அமெரிக்காவுடனும் யுத்தம் புரிந்ததுடன் உள்நாட்டுக் கலகத்தையுஞ் சமாளிக்க வேண்டியிருந்தது. அதுவரையும் தனிக் கொள்கையாகவேயிருந்த மாக்சிய வாதத்தை நடைமுறையிற் கொண்டு வருவதிலேயே லெனினதும் அவனது நண்பனுன ரொட்ஸ்கியினதும் திறமை தங்கியிருந்தது. இராணுவச் சர்வாதிகாரியாக ஆட்சி நடத்துவது இலகுவெனக்கண்டு, 'தொழிலாளரின் சர்வாதிகாரம்' என்ற சொற்றெடரைப் புகுத்தி அதிகாரம் எல்லாவற்றையும் தன் கைக்குள்ளடக்குவதற்கு ஒழுக்க ஆசார அனுமதியையும் பெற்றுக் கொண்டான். இரண்டு வருடச் சர்வாதிகார ஆட்சிக்குப்பின் லெனின் இறக்க, ஸ்டாலின் பதவியேற்முன்.

ஜோசப் விசாறியனேவிச் ஜூகாஸ்வில்லி என்ற பெயருடன் பிறந்த ஸ்டாலினது கதை, ஜோர்ஜிய ஒதொடக்ஸ் திருச்சபையின் மதக்கல்விச் சாலையில் சீவியத்தையரம்பித்த ஒரு இளைஞனது கதையாகும். ஆனுல் அவன் மதகுருவாகவில்லை; ஏனெனில் அவன் கொண்டிருந்த தீவிர கருத்துக்கள் காலாகக் கல்விச்சாலையிலிருந்து வெளியேற்றப் பட்டான். அப்பொழுது அவன் புரட்சியியக்கத்தைச் சேர்ந்து, காலகதியில் லெனினது தலைமையின் கீழிருந்த கம்யூனிஸ்ட் கட்சி மத்திய சபையின் காரியதரிசியானுன். லெனின் இறந்தபின் லெனினுல் சிருஷ்டிக்கப்பட்ட சோவியத் குடியரசின் சர்வாதிகாரப் பதவியை ஏற்றுக் கொண்டான். இப்படியே 'தொழிளாலரின்' சர்வாதிகாரம் நிலைநாட்டப்பட்டது.

அதிகாரத்துக்காக அவனேடு போட்டியிட்டோருள் முக்கியம் வாய்ந்தவரான ரொட்ஸ்கி ரூஷ்யாவிலிருந்து துரத்தப்பட்டு மெக்சிக்கோவில் சரண் அடைந்தான்; பின்பு அவன் அங்கே கொலை செய்யப்பட்டான். கட்சியிலிருந்து காலத்துக்குக் காலம் நீக்கப் படுதலுக்கு ஸ்டாலினது ஆட்டிசி பெயர் பெற்றிருந்தது. லெனின் 18 கோடி ரூஷ்ய மக்களைத் தனது அதிகாரத்துக்குள் அடக்கிய பொழுதிலும், ஒரு மாக்சிய அரசில் மக்கள் ஆட்சியை நிறுவி, மாக்ஸ்—லெனின் கொள்கையை நடைமுறைக்கு கொண்டுவர அவனுல் முடியவில்லை. ''தொழிலாளரின் சர்வாதிகாரம்'' ஆரம்பித்த மாதிரியே—ஒரு தனி மனிதனின் சர்வாதிகாரமாக—இருந்துவந்தது.

நடைமுறையிற் கொண்டுவருவது கஷ்டமெனக் கண்ட இலட்சியமான மாக்சிய அரசுக்குப்பதிலாகப் பன்னிரெண்டு அம்ச அமைப்பை அடிப்படையாகக் கொண்ட ஒரு மாக்சிய சமுதாயத்தை ஸ்டாலின் நிறுவினுன். இதற்கும் ரோமன் கத்தோலிக்க ஆட்சி பீட அமைப்புக்கு மிடையில் வியக்கத்தக்க ஒற்றுமைப்பாடு இருக்கிறது. கத்தோலிக்க ஆட்சி பீட அமைப்பு முறையை அடிப்படையாகக் கொண்டே ஸ்டாலின் தன் அரசியலை அமைத்தானென்பது தெளிவாகிறது. மற்றைய தேசங்களின் மாக்சிய வாதிகளும் ஸ்டாலினைப் பின்பற்றித் தமது கம்யூனிஸ அரசாங்கங்களை நிறுவினர். இந்த முறை மாக்சிய அரசின் உயர்தர முறையென்றும் தாம் முற்றிலும் புதிதானதும் முன்னேற்றமுள்ளது மான முறையை அமைக்கிருர்களென்றும் இந் நாடுகள் எண்ணின.

ரோமன் கத்தோலிக்க திருச்சபை ஆதிகாலந் தொட்டுப் பின்பற்றி வந்த முறைக்கும் ஸ்டாலினது அரசியல் அமைப்பு முறைக்கும் உள்ள ஒற்றுமைப்பாட்டை மேலேகாணலாம்:—

ஆதிக்கமுறை

| | |
|---|---|
| வத்திக்கான் | கிரெம்ளின் |
| பாப்பரசர் ரோமன் குயிரியாயி | சர்வாதிகாரி பொலிற் பூரோ (இப்போது பிறெசிடியம்) |
| கர்தினல் குழு | மத்திய குழு |
| கர்தினல் | கொமிசார் |
| அதிமேற்றிராணியார் | வட்டாரக் கட்சிக்காரியதரிசி |
| மேற்றிராணி மொன்சிஞேர் | கிராமக்கட்சிக்காரியதரிசி |
| குருமார் | கிராமக் குழு |

(அ) வத்திக்கானது முறை.

கிராமத்துக்குரு பாவசங்கீர்த்தன முறை வாயிலாகக் கிராமத்திலும் வட்டாரத்திலும் நடப்பனவெல்லாவற்றையுமறிவார். அவருக்கும் வட்டாரத் தலைவரான மேற்றிராணியாருக்கு மிடையில் மொன்சிஞேர் என்பவர் இணைப்பு அதிகாரியாகக் கடமையாற்றுவார். கிராமத்துக் குருவிலிருந்து மொன்சிஞருக்குச் செய்திகள் போகின்றன, அவரிலிருந்து மேற்றிராணியாருக்கும், மேற்றிராணியாரிலிருந்து கர்த்திஞலுக்குஞ் செல்கின்றன. கர்திஞல் 'பரிசுத்தகுழு'வுடனும் ரோமன் குயிரியாயுடனும் பாப்பரசருடனும் நேரடித் தொடர்பு கொண்டுள்ளார்.

இந்தப்பரந்த ஒற்றர் முறை உலகில் மிகவும் திறமையுடன் தாபிக்கப்பட்ட முறையாகும். நூற்ருண்டுகளாகப் பாப்பரசர் கையாண்டு வரும் அதிகாரத்துக்கு இந்த ஒற்றர் முறையே காலாயிருக்கின்றது. வத்திக்கானின் தூதுவராக இலங்கைக்குச் சமீபத்தில் விஜயம் செய்த மொன்சிஞர் லூக்காஸ் என்பவர் சர்வதேச விஷயங்களைப் பற்றிய செய்திகளையறிய வத்திக்கானே திறமான இடமென்றும், முக்கியத்துவம் வாய்ந்தவர்கள் தமக்குத் தேவையானவற்றை யறிவதற்காக வர்த்திக்கானின் ஆயப்புரைச்சாலைக்கு செல்லும் வழக்கம் உண்டென்றும் பகிரங்கமாகப் புழுகிஞர். சொசையிற்ரு கோப்பெறேற்றிவ் ஒப்பெறெய்யா எடிற்றிஸ் (லூகானே) Societa Cooperative Operaia Editvice (Lugano) என்ற இத்தாலியக் கம்பெனி பிரசுரித்த இரண்டு தொகுதிகளிலிருந்து இதன் உண்மை மேலும் விளங்கிற்று. இத்தொகுதிகளில் வத்திக்கானிடமிருந்த இரகசியமான ஸ்தாவேஜுகள் இடம் பெற்றன. இந்த இரகசியத்தன்மை வாய்ந்த செய்திகளை வத்திக்கான் தனது தூதுவருக் கூடாகப் பெற்றது. இத் தூதுவர்களில் அநேகர் வல்லரசு நாடுகளின் அரசாங்க சேவையில் கடமையாற்றுபவராவர், ('புடிஸ்ற் ஒபினியன்-ஒக்டோ' 60)

(ஆ) கம்யூனிஸ முறை.

ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு கம்யூனிஸ்டுக் கட்சிக் காரியதரிசி கடமையாற்றுவார். கிராமக் கட்சிக் குழுக் கூடாக மக்களின் வாழ்க்கை, செய்கைகள், சிந்தனைகளுடன் தொடர்பு வைத்திருப்பது இவரது கடமையாகும். இவருக்கு மேலுள்ள வட்டாரக் கட்சிக் காரியதரிசிக்கு இச் செய்திகளையிவர் அறிவிப்பார். வட்டாரக் கட்சிக்

காரியதரிசி கொமிசாருக்கு அறிவிக்க, அவர் அவற்றை நிர்வாக சபைக்குச் சமர்ப்பிப்பார். அவை அங்கே ஆராயப்பட்டு, மற்றச் செய்திகளுடன் இணைக்கப்பட்டு ஒருமுகப் படுத்தப்படும். அங்கிருந்து, பிறெசிடியத்துக் கூடாக இச்செய்திகள் சர்வாதிகாரியையடையும். இந்த வழிகளுடன் மிகவும் திறமை வாய்ந்ததும் இரக்கமற்றது மான ஒரு இரகசியப் பொலிஸ் படையும் உண்டு. இந்தப் பொலிஸ்படை தமக்கு வேண்டிய செய்திகளையறிவதற்காக எவ்வித மிரட்டல் வழிகளையும் கையாள அதிகாரம் பெற்றிருந்தது. ரோமன் கத்தோலிக்க திருச்சபையைப் போன்று சர்வதேச கம்யூனிஸமும் நம்பிக்கைக்குரிய கையாட்களைப் பாவிக்கின்றது. இவர்கள் பெரும்பாலும் நல்லெண்ணங் கொண்டவர்களே. தாம் மேன்மை பொருந்தியதெனக் கருதும் ஒரு நோக்கத்திற்காகத் தமது நாட்டையும் மக்களையும் காட்டிக் கொடுக்கத் தயாராயிருக்கிறார்கள். மிரட்டல்களுக்குப் பயந்து அரசியல் இரகசியங்களை வெளியிடக் கூடியவர்களை எவ்வளவு தூரத்துக்குக் கம்யூனிஸம் பாவித்திருக்கிறது என்பதற்குப் பல உதாரணங்கள் வெளிவந்திருக்கின்றன. இவை யெல்லாவற்றுடனும், கம்யூனிஸ சர்வதேச ஒற்றர்படை முறை இப்பொழுது வத்திக்கான் முறைக்குப் போட்டியாக அமைந்துள்ளதில் ஆச்சரியம் இல்லை. வத்திக்கான் பல நூற்றாண்டுகளிக்கு முன்பு இந்த முறையை ஆரம்பித்து விட்டதென்பது தான் இவையிரண்டிற்குமுள்ள உண்மையான வித்தியாசம் ஆகும்.

(2) கட்டளைகள்.

மதக்கோட்பாடுகளையும் திட்டங்களையும் பொறுத்தளவில் பாப்பரசர் தவறு செய்யாதவர். 'திருத்தந்தை' மேற்றிராணிமாருக்கு அனுப்பும் சுற்றறிக்கைகள் மூலம் அவர் வெளியிடும் கட்டளைகளை ரோமன் கத்தோலிக்க மதத்தினர் கடவுள் வாக்கெனக் கொள்கின்றனர். அவர் எதைக் கட்டளையிட்டாலும் அதையவர்கள் செய்தே தீர வேண்டும்; அல்லாவிடின் நித்திய நரகதண்டனையே கிடைக்கும். அவர்களது பற்று எல்லாம் திருச்சபைக்கேயுரியது—நாடு, மக்கள், உண்மை என்பவற்றிற்கல்ல. ரோமன் கத்தோலிக்க திருச்சபையே அவர்களது சத்தியம்; அதன் சேவையில் பொய் சொன்னாலும், அது பொய்யாகாது.

கம்யூனிஸ முறையிலும், பாப்பரசர் ஆணைகளைப் போன்று கிரெம்ளினது கட்டளைகள் உச்சியிலிருந்து கீழ்ப்படி வரைக்கும், படிப்படியாகச் செல்கின்றன. அரசியலில் அக்கட்டளைகளும் தவறற்றவை; அதேபோன்ற கீழ்ப்படிவையும் கட்டளையிட்டுப் பெறுகின்றன. எனவே ஒரு கம்யூனிஸ்டு, தனது நாட்டின் பிரஜையல்ல. அவன் பெயரளவில் மட்டுந்தான் தன் நாட்டுப்பிரஜை; மற்று எல்லா வகைகளிலும் ருஷ்ய நாட்டுப் பிரஜையாவான். அவனுடைய விசுவாசத்தையும் கீழ்ப்படிவையும் கிரெம்ளின் முழுதாகப் பெற்றுக்கொள்கிறது; வேறு காரியங்கள் இடம் பெற மாட்டா.

(3) போதனை முறை.

வத்திக்கான், கிரெம்ளின் இரண்டும் இளைஞருக்குப் போதனை செய்யும் முறைக்கு அதிக முக்கியத்துவம் அளிக்கின்றன. ஆட்சி பீடத்தினரால் ஆமோதிக்கப்பட்ட ஒரே தரமான முறைக்கேற்ப இளைஞரின் உள்ளங்கள் உருவாக்கப்பட வேண்டும். இதைச் சாதிக்க, மிகவும் நுண்ணிய மனோதத்துவ முறைகள் கையாளப்படுகின்றன. திரைப்படங்கள், புத்தகங்கள், கலாச்சாரக் கூட்டங்கள், ஒரு குழந்தை முதன் முதலாக வாசிக்கும் கற்பனைக் கதைகள் கூட இந்தத் திட்டத்திற்கு ஏற்பப் பயன்படுத்தப் படுகின்றன. "ஏழு வயது வரை ஒரு குழந்தையை என்னிடம் ஒப்புவித்துவிட்டால், அவன் எப்பொழுதும் ரோமன் கத்தோலிக்கனாகவேயிருப்பான்"—கிறிஸ்தவ சபையினரின் இந்தப் புழுகு அத்திவாரம் அற்றதன்று. இப்படியுருவாக்கப்பட்ட மனிதன் உண்மையில் பிற்காலத்தில் கத்தோலிக்க மதத்தைத் தள்ளிவிடக்கூடும்; ஆனால் அவன் எப்பொழுதும் வாழ்க்கையை, ரோமன் கத்தோலிக்க மனப்பான்மையுடனேயே நோக்குவான். 1540ம் ஆண்டில் யேசு திருச்சபையின் தாபகரான இக்னேஷியஸ் லோயலா 'இளமையிற் பிடி' யென்ற கொள்கையைத் தாம்யாத்த அத்திருச்சபையின் அமைப்பு விதிகளிற் கூறியிருக்கின்றார்:—"இச்சபையின் அங்கத்தவர் யேசுவின் சேவையிலும், யேசுவின் பிரதிநிதியான ரோமன் திருத்தந்தையின் சேவையிலும் படைக்கலம் தாங்கவேண்டும்; இவ்விருவருக்கும் கீழ்ப்படிவோம் எனப் பிரத்தியேக சத்தியப் பிரமாணமுஞ் செய்யவேண்டும். . . . . .மனச்

சாட்சியின் உபதேசிகளும் வழிகாட்டிகளுமென்ற முறையில் மதத்தைப் பரப்புவதற்காக ஊழியஞ் செய்யவேண்டும்; இதை இளைஞரின் கல்வி மூலம் அடைய வேண்டும்.''

(கேம்பிரிட்ஜ் தற்கால சரித்திரம்–தொகுதி 2 பக்.654).

கம்யூனிஸத்தினர் இந்த முறையை அங்கீகரித்து இதனை நன்ருகப் பயன்படுத்துகின்றனர். அவர்களுக்குக் 'கல்வி' யென்பது போதனு முறைக்கு ஒரு மங்கல வழக்காகும். மற்றக் கருத்துக்கள் விலக்கப்பட்டும் அல்லது ஏளனத்துக்குள்ளாக்கப்பட்டும் மிகவும் கவனமாக ஆக்கப்பட்ட சூழலின் உதவியைக் கொண்டு கம்யூனிஸக் கல்வி முறை "பெருவாரியாக உள்ளங்களை" உருவாக்க முயலுகின்றது. இத்துடன் அது நிற்பதில்லை. தேவையென்று கண்ட இடத்தில் 'மூளை கழுவுவதற்கு' அண்மையில் கண்டு பிடிக்கப்பட்ட முறைகளை—மருந்துகள் உபயோகிப்பது உட்பட—வயது முதிர்ந்ததோர் மீது பாவிக்கின்றனர். 'கட்சிக் கோட்பாட்டிலிருந்து விலகுதல்'—சர்வாதிகாரியின் மாக்சியவாத விளக்கத்திலிருந்து சற்றேனும் வேறுபடுதல்—பெரும் பாதகமாகக் கணிக்கப்பட்டு, முன்பு மத விசாரணைச் சபை எப்படி சமயமறுப்பை நசுக்கியதோ அப்படியே இதையும் அகற்றவேண்டும் என்று கருதப்பட்டது. கீழ்ப்படிதலே அடிமையுள்ளத்தின் தனி ஒழுக்கமாகும். வேறுபாடு காணமுடியாத விதத்தில், உள்ளத்தைச் சக்தியறச் செய்தலே அவர்களின் இலட்சியமாகும்.

(4) பூட்டிவைக்கப்பட்ட உள்ளம்.

வத்திக்கானும் கிரெம்ளினும் தீர்த்தனவற்றையே முறையே நல்லகத்தோலிக்கனும், நல்ல கம்யூனிஸ்டும் வாசிக்க வேண்டும். ஒருவன் தானுகவே பிபிலிய நூலை வாசிப்பதைத் தடுப்பதிலிருந்து வத்திக்கான் இக்கொள்கையைக் கடைசிவரைக்கும் அமுலுக்குக் கொண்டுவருகிறதென்று முன்பு கூறப்பட்டது. இது வியக்கத்தக்க காரியமல்ல. ஏனெனில், கிறிஸ்தவ போதனையின் தொடக்க கால நூல்களை வாசித்ததிலிருந்து, பாப்பரசர் முறை கிறிஸ்தவ முறையிலிருந்து எப்படி வேறுபட்டிருந்தது என்று கண்டதால் புரொட்டஸ்தாந்து புரட்சி யெழுந்தது. பிபிலிய நூலைக் கிரேக்க, எபிரேய, லத்தின் மொழிகளில் மட்டும் வைத்திருப்பதால், இந்த நிலையைத் தடுக்க வத்திக்கான் அதிககாலம் தெண்டித்தது. இதை இப்படித்தடுக்க முடியா

தென்பதைக் கண்டதும் தனது பதிப்பு ஒன்றை வெளியிட்டு, ஒரு குருவின் மேற்பார்வையின் கீழ்த்தான் வாசிக்கவேண்டும் என்றும் நிபந்தனையிட்டது—இடைஞ்சலான பந்திகளுக்குக் குருவிளக்கம் கொடுப்பார்.

தனது பரிசுத்த நூலாகிய 'டாஸ் கபிற்றலை' வாசிக்கப் படாதென்று கிரெம்ளின் விதிக்கவில்லை; ஆனால் இப்படியான கஷ்டமான நூலைத் தேர்ந்தோர் உதவியின்றிச் சரியாக விளங்குவது கடினமென்று கூறியுள்ளது. சாதாரண மனிதனுக்கு இந்த நூல் விளங்கப்படுத்தப் படவேண்டும். உத்தியோக தோரணையில் விளக்கங் கொடுக்கவல்ல கம்யூனிஸ கட்சித்தலைவர்கள், கிரெம்ளின் சொற்படியே தமது அறிவை விருத்தி செய்தவராவர். இந்த முறையினால் விசுவாசிகள் என்ன சிந்திக்க வேண்டும் என்பதைப்போதிக்கின்றார்கள், எப்படிச் சிந்திக்கவேண்டும் என்பது போதிக்கப் படுவதில்லை. இந்த இரு முறைகளுக்கும், வேதங்களைப் பயில்வதைத் தடுத்துவைத்த பிராமணர் முறைக்குமிடையிலுள்ள குறிப்பிடத்தக்க ஒற்றுமைப் பாட்டை முன்பு கவனித்துள்ளோம்.

(5) இரகசியம்.

வத்திக்கான் சாம்ராச்சியத்தின் சரித்திரம், இரகசியத் திட்டத்தினதும், கீழுலகராஜ தந்திரீகத்தினதும் சரித்திரமாகும். ஏனெனில், பாப்பரசர் அரண்மனையின் மூடப்பட்ட கதவுகளுக்குப் பின்னிருந்து விரிக்கப்பட்ட இரகசியச்சதி நிறைந்தவலைக்குள், அரசர்களும், அரசாங்க மந்திரிகளும், ராஜபரம்பரைகளும் அகப்பட்டிருக்கின்றனர். தனது தாழ்மையானமீன்பிடிகாரச் சீஷருக்கு யேசு கிறிஸ்து சொன்னதாவது "நான் உங்களை மனிதரின் செம்படவராக்குவேன்." உலகத்தின் முடிவு நிச்சயம் என்று நம்பின அவர், தன்னுடைய சொற்கள் எவ்வகையில் உண்மையாகும் என்பதை அறிந்திருப்பாரா? செம்படவன் தனது தொழிலைப் பட்டப்பகலில் எல்லார் முன்னிலையிலும் செய்கிறான். ஆனால் வத்திக்கானின் வல்லமை வாய்ந்த தொழில்களெல்லாம் இருளிலும் வஞ்சகத்திலும் பிறக்கின்றன. வத்திக்கான் தனக்குள் அடக்கிவைத்திருப்போரும், தாம் எவ்விதம் இவ்வலைக்குள் விழுந்தார்கள் என்பதையும் அறிய மாட்டார்கள்.

''பகிரங்கத்தை வெறுத்து இரகசியத்தை விரும்புகிற மூன்று வகைப்பட்டவர் உள்ளர்'' என்று புத்தர் கூறினர். ''இந்த மூன்று வகையினரும் யார்? மந்திரிகள், சமயகுரு மார், பெண்கள் ஆகிய மூவினமுமே. தாதகாதை இரகசியத் தை அனுஷ்டிப்பதில்லை; அது இரகசியத்தைப் புகழ்வது மில்லை. தாதகாதை பகிரங்கத்தை யனுஷ்டித்து அதைப் புகழ்கிறது.''

புத்தரின் இந்த மொழிகள் காலவரையறையின்றி உண்மையானவை. உலகிற் பெருங் குறும்புச் செயல்க ளெல்லாம் இன்னும் மூடுகதவுக்குப் பின் இரகசியமாகவே செய்யப்படுகின்றன. கிரெம்ளின் அரசியற் திட்டக்காரர் வத்திக்கான் அரசியற் திட்டக்காரரைப்போன்று அந்தரங்க மாகவே யிருக்கின்றனர். மற்றவர் மீது கம்யூனிஸத்தைத் திணிப்பது தங்கள் நோக்கமல்ல வென்று கூறும் பொழுதி லும், ஹங்கேரி, செக்கோ சிலவக்கியா, திபெத்து, இன்னும் வேறு இடங்களிலும் அவர்களது செய்கை இரகசியத்தில் ஆக்கப்பட்டுத் துரோகம், பலவந்தம் ஆகியவற்றால் அமுலுக்குக் கொண்டுவரப்பட்ட திட்டங்களின் உண்மை யான தன்மையை விளக்குகின்றன. இத்துறையிலும், மறு துறைகளிற் போலக் கிரெம்ளினும் வத்திக்கானும் ஒரே வித ஆயுதங்களுடன் ஒன்றொடொன்று போட்டியிடு கின்றன. ஒரு சாரானரையுஞ் சேராத நாடுகளே அவர்க ளால் வருங்காலத்தில் வஞ்சிக்கப்படுவார்.

இரண்டு சாம்ராச்சியங்களினதும் வழிகாட்டுதல், திட்ட மிடுதல், கட்டுப்படுத்தல், பணச் செலவிடுதல், சுலோகங்களை யுண்டாக்குதல், பிரசாரம், அரசியல்யுக்திகளை யுருவாக்கல் போன்ற கருமங்களை ஒரு கரையிற் பாப்பரசரும், கர்தினல் நிர்வாகக்குழுவான ரோமன் குயிரியாயும் கவனித்து வர, மறுகரையில் கிரெம்ளின் சர்வாதிகாரியும், பொலிற்பூரோ அங்கத்தவர் பதினலு பெரும் கவனித்து வருகின்றனர். வத்திக்கான் ராச்சியத்தில் 35 கோடி மக்களும் கிரெம்ளினில் 90 கோடிமக்களும் உளர். இந்த இருபரந்த சாம்ராச்சியங் களினதும் மக்கள், இந்த இரு சபைகளினதும் இராகத்திற்கு ஏற்ப நடனமிடும் பாவைகளாகும். இச்சபைகளின் கூட்டங்களும் தீர்மானங்களும் உலகத்தினருக்கும், அவர் களின் விசுவாசிகளுக்குமே தெரியாதபடி அதி அந்தரங்க மாகவே நடைபெறுகின்றன.

(6) மனோதத்துவ யுத்திகள்.

பாவசங்கீர்த்தன மூலம் ரோமன் கத்தோலிக்க குருமார் செய்திகளையறிவது மட்டுமல்ல; மக்களின் வாழ்க்கை, எண்ணங்கள் ஆகியவை மேல் ஒரு தனியதிகாரத்தைச் செலுத்தவும் உதவுகிறது. தனி மனிதனின் அந்தரங்க உள்ளத்துக்கூடாக சமூக வாழ்க்கை உள்ளூரப்பாதிக்கும் அதிகாரத்தைப் பாவ சங்கீர்த்தனம் மூலம் குருகையாளுகிறார். திருச்சபை தான் இரகசியமாகத் திட்டமிட்டு வேலைகள் புரிந்த போதிலும், குருமாரிலிருந்து எதையும் மறைத்து வைத்திருக்கக் கூடாதென்று திருச்சபையோரை வற்புறுத்துகிறது. விமோசனம் அளிக்கவும், அளிக்காமல் விடவும் தம்மால் முடியும் என்று அவர்கள் சாதிப்பது, அவர்களுக்கு ஒருதெய்வீக அதிகாரத்தைக் கொடுக்கிறது. இவ்வுரிமை சென்ற காலத்தில் எவ்வளவு சக்திவாய்ந்த கருவியாயிருந்ததோ? இன்னும் பெரும்பான்மைக் கத்தோலிக்கரைப் பொறுத்தளவில் அவ்வளவு சக்தி வாய்ந்ததாக இருக்கின்றது.

கிரெம்ளின் எவ்வகைப்பட்ட தெய்வீக அதிகாரத்தையும் தமக்குரியதெனக் கொள்ளவில்லை. ''என்னுடைய இராச்சியம் இவ்வுலகத்தது அல்ல'' என்று கூறிய யேசுவின் இராச்சியத்தைப் போன்றதல்ல அவர்களது இராச்சியம்; பரலோக இராச்சியமும் இவ்வுலகராச்சியமும் தமதெனக் கூறும் பாப்பரசரின் இராச்சியத்தைப் போன்றதுமல்ல. கம்யூனிஸத்தினருக்கு ஒரே ஒரு உலகம் தானுண்டு; அதுதான் நாம் வாழும் உலகு. எனவே, மக்களிடமிருந்து அவர்கள் கூறவிரும்பாத உண்மைகளைப் பிடுங்குகிறது. தனது பிரஜைகளின் சிந்தனைகளை நுட்பமாகக் கவனித்து வருவதால், மக்களுக்குள் சுதந்திரம், 'வழிவிலகுதல்' ஆகியவற்றை விரைவிற் கண்டு பிடிக்கிறது. இதன் பின், ''பிற் போக்கான சிந்தனை'' யென்ற குற்றச் சாட்டுத் தொடர்கிறது. கட்சியின் கொள்கையையே பின்பற்ற வேண்டும் என்று குற்றவாளி ஞாபகமூட்டப்படுகிறான். இதை யேற்க அவன் மறுத்தால், 'புரட்சித்தனமான செயல்கள்' புரிந்ததற்கென விசாரிக்கப் படுகிறான். அவன் நடாத்தப்படும் விதத்தின் பயனாக, அவன் தனது குற்றத்தை ஒப்புக்கொள்வது வழக்கம். வத்திக்கான் இப்பொழுது பாவிக்கும் முறைகளிலும் பார்க்க கிரெம்ளினின்

முறைகள் செப்பம் செய்யப்படாத, சீர்திருத்தமற்றனவையாயிருக்கலாம்; ஆனால் வத்திக்கான் கையாளும் முறைகளைப் போல், அவையும் பயன்தரக் கூடியவையே.

(7) 'மூளைகழுவுதல்'

இது முன்னே கூறப்பட்ட செய் முறையிற் பாவிக்கப்படும் பலமுறைகளையுங் குறிக்கும் ஒரு பொதுச் சொற்றொடர். ஒரு மனிதனின் கருத்துக்களை—அவனது தனிப்பண்பையுங் கூட—மாற்றுவதற்காகப் பாவிக்கப்படும் பல செய் முறைகளில் எதுவொன்றையும் இச் சொல் குறிக்கும். முற்காலத்தில் இது சித்திரவதை யென்னும் பண்பற்ற பெயரால் அழைக்கப்பட்டது. சூரியனைச் சுற்றிப் பூமி செல்கிறதென்று சொன்ன பொழுது கலிலேயோவுக்கு நடந்ததும், ஸ்பானிய விசாரணைச் சபையின் தீர்ப்புகளும், மதவிரோதிகள் எரிக்கப்பட்டதும், யூதர்களையும் பிற சமயத்தவர்களையும் துன்பப்படுத்தியதுமான இச் செயல்களைத், தாம் அடக்கிய நாடுகளில் கம்யூனிஸத்தினர் புரிந்த செயல்களோடு ஒப்பிட்டால், இருசாராரும் எதிர்ப்பையழிப்பதற்கு இம் முறைகளைக் கையாளல் சரியென நம்புகின்றனரென்பதைக் காட்டலாம். இருசாராரும் இம்முறைகளைத்தாம் கையாளுவதை மறுத்த போதிலும், இவற்றைப் பாவிப்பதற்குத் தமக்கு எங்கே யதிகாரம் இருக்கிறதோ, அங்கெல்லாம் பாவிக்கின்றனர்.

(8) இரக்கமின்மை.

எவ்வித முறைகளைக் கையாண்டும் நல்ல நோக்கத்தைச் சாதித்தல் சரியென்னும் கொள்கையை வத்திக்கான் கடைப்பிடித்ததென்பதற்கு, இலங்கையிற் போர்த்துக்கேயரும் தென் அமெரிக்க இங்காஸ் சாதியினருக்கெதிராக ஸ்பானியரும் மதமாற்ற ஊக்கத்தால் புரிந்த இரக்கமற்ற செயல்கள் சான்று பகர்கின்றன. தமது மதத்தைப் பின்பற்றுவோர் குறைந்த தொகையினராய்ப் பெலம் அற்ற நிலையிலிருக்குமிடங்களில் ஒழுக்க நெறிகள் பின்பற்றப்பட வேண்டுமென வத்திக்கான் கூறின பொழுதிலும் தன்னைப் பொறுத்தளவில் சன்மார்க்க நெறியெனக் கொள்வது தருணத்திற்கேற்ற நெறிகளேயாம், முதலாளிகள், கிளர்ச்சி செய்யும் அறிஞர், கொள்கைகளைக் கடைப்பிடிப்போர் ஆதியோரையழிப்பதற்கும், கிளர்ச்சிகளையும், மக்கள் செல்வாக்குப் பெற்ற இயக்கங்களையும் நசுக்குவதற்கும் இதே மாதிரியான முறைகளை இன்றும் கம்யூனிஸ்டுகள் கையாளுகின்றனர்.

தங்களுடைய பெயரைக் கூறி, மானிடவர்க்கத்திற்கு இழைக்கப்படும் அக்கிரமங்களைக் கண்டால் கார்ல் மாக்ஸோ அல்லது யேசு கிறிஸ்துவோ கூடுதலான ஆச்சரியமும் விசனமும் அடைவார்களென்பது விடை பகரமுடியாத ஒரு வினா.

ஒரு நாட்டுக்குள் முதன் முதல் பகிரங்கமாகவோ சிறிது சிறிதாகவோ நுழையும் போது இரு சாராரும் சிநேகிதர் போற் பாசாங்கு செய்வார்கள்; ஆனல் உள்ளிருந்து கொண்டு அந்நாட்டின் அழிவுக்கேற்ற திட்டங்களை உருவாக்கிக் கொண்டிருப்பார்கள், இருசாராரும் தங்களுடைய இராச்சியத்திற் சேர்ப்பதற்கு விரும்பும் மக்களினதும் நாட்டினதும் முக்கியமான ஸ்தானங்களில் மெல்ல, மெல்ல மறைமுகமான விதத்திற் புகுந்து கொள்வார்கள். சிறிது சிறிதாக நாட்டினுட் சென்று சமயமாற்றங்கள் செய்து, நாட்டுமக்களையே பாவித்து அவர்களையடிமைகளாக்குகிருர்கள். இதையெப்படிச் சாதிக்கின்றனரென்பதை இரு ராச்சியங்களினதும் சரித்திரத்திலிருந்தும் அறியலாம். ஒரு காலத்தில் வத்திக்கான் ஆதிக்கத்திற்குள் அடங்கியது போல இப்போது சோவியத்தின் விரிவுத் திட்டங்களுக்குள் மனிதவர்க்கம் அடங்கும் என்ற அபாயம் தோன்றுகிறது. முன்பு மாக்ஸின் கனவாகிய சமத்துவ சமுதாயத்தை நிலைநாட்ட எவ்வித நடவடிக்கைகள் எடுக்கப்பட்ட போதிலும் இப்பொழுது அவற்றையெல்லாங் கைவிட்டுவிட்டு, கழித்துவிடப்பட்ட கொள்கைகளை யொட்டிய, கேட்டுக் கேட்டுப் புளித்துப்போன சொற்ருெடர்களை முகமூடியாக வைத்துக்கொண்டு தேசிய ஆக்கிரமிப்பில் இறங்கிவிட்டார்களென்று சமீபகாலத்துச் சம்பவங்கள் தெளிவாக அத்தாட்சி அளிக்கின்றன.

(9) *பொய்ப் பிரசாரம்.*

ஒரு பொய்யைத் திருப்பித் திருப்பிச் சொன்ஞல் அது உண்மையாகிவிடும் என்ற கொள்கையை வத்திக்கானும் கிரெம்ளினும் தங்கள் பிரசாரத்தில் கடைப்பிடிக்கிருர்கள். மக்கள் உள்ளத்தைத் தன்வசப் படுத்துவதற்காக அடொல்வ் ஹிட்லரும் இக்கொள்கையைத் தனது முறையின் பிரதான கருவியாகப் பாவித்தான். ஆனல் வத்திக்கானையும் கிரெம்ளினையும் போல் அன்றி, ஹிட்லர் தான் அப்படிச் செய்ததை ஏற்றுக் கொள்ளும் அளவுக்கு

நேர்மை வாய்ந்தவனாயிருந்தான். எத்தனை பாப்பரசர் தமது திருச்சபையின் கொள்கைகளை விசுவாசித்திருக்கிறார்கள்?— மிகக்குறைந்த தொகையினரே யென்று சரித்திரம் கூறும். எனினும், போர்கிஸ் பாப்பரசர் 6-ம் அலெக்சாந்தர், அல்லது அண்மையில் பாதுகாப்பற்ற அபிசீனியா மீது முசோலினி குண்டு வீசியதை ஆசீர்வதித்த 12-ம் பயஸ் போன்ற பாப்பரசர் மூலம் கடவுள் பேசுகிறாரென்று இன்னும் ரோமன் கத்தோலிக்கர் நம்புகிறார்கள். தாம் விரும்பும் எந்தப் புதிய கொள்கையையும், கிறிஸ்தவ மதத்துக்குள் கொண்டு வந்து, விசுவாசிகள் மீது அதைத் திணிக்கப் பாப்பரசருக்கு அதிகாரம் உண்டு. இத்தகைய அதிகாரங் கொண்ட பாப்பரசர் மதக் கோட்பாடுகளைப் பொருட்படுத்துவார்களென்று எதிர்பார்க்க முடியாது. 1950-ம் ஆண்டு 12-ம் பயஸ் அவர்களால் உண்டாக்கப்பட்ட, கன்னிமரியாள் உடலுடன் சென்ற புதிய கொள்கைக்கு வேத நூல்களில் எவ்வித ஆதாரமும் இல்லை. கிறிஸ்தவ மதத்தை மரியாள் வழிபாட்டாக மாற்றுவதில் இதுவும் ஒரு படியெனக் கண்டதும் புரட்டஸ்தாந்து மதத்தினருக்கும் வத்திக்கானுக்கு மிடையிலிருந்த பிளவு இன்னும் அகன்றது. இத்தகைய புதிய கொள்கைகளை யுண்டாக்கும் பாப்பரசர் கடவுளில் விசுவாசம் வைத்திருப்பதாயின் கடவுளையும் மாற்றத் தமக்கதிகாரம் உண்டென்பதையும் விசுவாசிக்க வேண்டும்.

கிரெம்ளினின் போலி வாக்குறுதிகளும், தாம் ஆக்கிய கொள்கைகளைப் பின்பற்றுகிறோம் என்ற நடிப்பும் இத்தகைய பிரசாரத்தைச் சேர்ந்தவை. 40 வருடக் கிரெம்ளின் சர்வதிகாரத்திற்குப் பின்னும், சோவியத் நாட்டெல்லைக்குள் திறம்வாய்ந்த மாக்சிய இலட்சிய அரசை நிலை நாட்டமுடியாமற் போய்விட்டது. தொழிற்துறைகளிலும், வேறு பல துறைகளிலும் கம்யூனிஸ்டு ருஷ்யா சிறந்த முன்னேற்ற மடைந்திருக்கிறது. தனிமனித சுதந்திரத்தைக் குறைத்தும், கலைஞர், சங்கீத வித்வான்கள், எழுத்தாளர் முதலியோர் கருத்துக்களை வெளியிடும் சுதந்திரத்தை இரக்கமற்ற முறையிற் பறித்தும் இப்படியான முன்னேற்றம் அடைந்திருக்கிறது. விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பனவும் மாக்சின் போலி விஞ்ஞானக் கொள்கைகளுக்கு அமைய இருக்கவேண்டுமென்றும் விதித்தனர்.

ஆனல் மனித நன்மையை விரும்பின மாக்ஸ் பிரதானமாகக் கொண்ட வகுப்பு பேதமற்ற சமுதாயத்தையோ அல்லது யாவரும் செல்வாக்குடனிருப்பதையோ அது இன்னும் சாதிக்கவில்லை. ஆயினும் வேறு நாடுகளிலுள்ள சலுகை குறைந்தோருக்கு இவற்றையெல்லாம் கொடுப்போமெனக் கம்யூனிஸ்டுப் பிரசாரம் இன்னும் வாக்குறுதியளிக்கிறது. வத்திக்கானைப் போலவே கிரெம்ளினும் ஒரு மோட்சத்தைத் தருவதாக வாக்குறுதியளிக்கிறது—ஆனல் பூமியிலேயே சாதிக்க முடியும் எனத்தான் இனிமேல் நம்பாத மோட்சம்.

(10) கொள்கை பக்தி.

எச்சாதியையோ தேசத்தையோ சேர்ந்தவனுயிருந்தாலும்—பர்மா தேசத்தவன், இலங்கையன், இந்தியன், அயர்லாந்துவாசி அல்லது ஆங்கிலேயனுயிருந்தாலும்—சரி முதலாவதாகக் கடவுள் பிரதிநிதியாகிய பாப்பரசர் பக்திக் கூடாகக் கடவுள் பக்தியிருக்க வேண்டுமென்று வத்திக்கான் தனது ஆட்சிக் குட்பட்டோருக்குக் கூறுகிறது. வேறெந்தப் பக்தி யிருந்தாலும் அது இரண்டாவது இடமே பெற வேண்டும். ஒருவன் தனது தேசத்தில் பற்று உடையவனுயிருந்தாலும், அப்பற்று வத்திக்கான் மீதுள்ள விசுவாசத்துடன் ஒத்திருக்கவேண்டும். தேசப்பக்தியும், வத்திக்கான் பக்தியும் முரண்படும் வேளைகளில், வத்திக்கான் பக்தியே முதன்மை பெறவேண்டும். தேசப்பற்றுப் பாப்பரசர் பற்றுக்கு இடங்கொடுக்க வேண்டும்.

இப்படியாக வத்திகானையும் கடவுளையும் ஒன்றென மதிப்பதைக் கிரெம்ளினையும் உலகத் தொழிலாளரையும் ஒன்றென மதிப்பதுடன் ஒப்பிடலாம். கம்யூனிஸத்தில், கம்யூனிஸ சர்வதிகாரத்துக்குக் கீழ்ப்படியாமை, உலகத் தொழிலாளருக்கு எதிராகச் செய்யும் குற்றமாகக் கருதப்படுகிறது. 'கடவுளுக்கு எதிரான பாவம்', 'தொழிலாளருக்கு எதிரான குற்றம்' என்ற சொற்றொடர்கள் வரும் இடங்களிலெல்லாம் 'வத்திக்கான்', 'கிரெம்ளின்' என்ற சொற்களைக்கருத்து வேறுபாடின்றி முறையே மாற்றியமைக்கலாம். எவ்வித உரிமையாலும்—மனித உரிமையாலோ, தெய்வீக உரிமையாலோ—தமக்கு உரித்தில்லாத தலைவர்ப்பற்றை இந்த இரு நிலையங்களும் தமதெனக்

கோருகின்றன. தாம் எவற்றின் பிரதிநிதிகள் என்று இவை கூறுகின்றனவோ அவற்ருற்தான் இந்த உரிமையைப் பெறுகிருர்கள். எனவே, 'மனச்சாட்சியின் சுதந்திரம்' என வத்திக்கான் கூறும் பொழுது, அது கருதுவது வத்திக்கான் சொற்படி சிந்திக்கும் சுதந்திரத்தையே. சுதந்திரத்தைப்பற்றிக் கம்யூனிஸக் கருத்தும் இத்தன்மையதே. பிரஜையின் தனி மனித வாழ்க்கையிலும், அவன் சரி, பிழையெனக் கொள்ளும் தீர்ப்புக்களிலும் பல உரிமைகளையும், மற்றெல்லாவற்றையும் புறக்கணிக்கும் தலைவர் பற்றையும் தமதுரிமையெனக் கோருகின்றன. ஒவ்வொன்றும் தனித்தனி ஒழுக்க நெறிகளைப் பின்பற்றுகின்றது. அவ்வொழுக்க நெறிகளைப்பறிற்த் தாம் தான் தீர்ப்புக் கூறமுடியுமென்றும் கோருகின்றன.

தேசீயம் நடுத்தர வகுப்பினரின் ஒரு கொள்கையெனக் கிரெம்ளின் தன் சார்பாளருக்கு நம்பத்தக்க விதத்திற் போதிக்கின்றது. தமக்குத் தலைமை தாங்குவதற்காக உலகத் தொழிலாளர் கிரெம்ளினையே நோக்குகின்றனர்.— உலகத் தொழிலாளருக்கு எது நல்லதென்று கம்யூனிஸத் தலைவருக்கு மட்டுந்தான் தெரியும். தொழிலாளர் உலகத்துத் தலைசிறந்த பிராமணர் அவர்களே.

எனினும், சந்தர்ப்பம் வாய்ப்பாயிருக்கும் இடங்களிலெல்லாம் தேசீய உணர்ச்சிகளைக் கம்யூனிஸம் கிளறிவிடுகிறது. தனது நோக்கங்களையடைவதற்காகத் தேசீயத்திற்கு ஊக்கமளிப்பதாகக் காட்டிக் கொள்கிறது. ஆசியாவில் நடப்பது இதுவே. வல்லரசுகளைத் தாக்கும் எதிர்படையை மிகவும் பயனளிக்கத்தக்கதாகக் கம்யூனிஸத் திட்டங்களை வகுப்போர், பாவித்து வருகின்றனர். தனது வல்லரசு நோக்கங்களை மறைத்துக் கொண்டு மக்கள் செல்வாக்குப் பெற்ற கருத்துக்களையும் மக்களின் அந்நேர நிலையையும், வத்திக்கானைப் போலவே உண்மையைச் சற்றேனும் பொருட்படுத்தாது, கிரெம்ளினும் தன்னயத்திற்காகப் பயன்படுத்திக் கொள்கிறது. இப்படித்தவருன வழியிற் செலுத்தப்பட்டதனுல், பலநாடுகள் இப்பொறியில் அகப்பட்டுவிட்டன; தமது மோசமான பிழையைக் காலம் பிந்தியே இந்நாடுகள் உணர்கின்றன.

(11) பிறப்புக் கட்டுப்பாடு, விவாகம், அடக்கஞ் செய்தல்.

ஒரு தனி மனிதனின் அந்தரங்க வாழ்க்கையைப் பற்றி யிந்த இரண்டு சாராரினதும் அபிப்பிராயம் யாது? எண்ணுக் கணக்கில் கூடியதொகை யென்பதிற்றுன் அது தங்கியுள்ளது. வரையறையற்ற சனப் பெருக்கத்தை யேசு கிறிஸ்து ஆமோதிக்கவில்லை. ஆனுல் குடும்பத்தைக் கட்டுப்படுத்தல் கொடிய பாவமென வத்திக்கான் போதிக்கிறது. இதற்கு ஆதாரமாக வத்திக்கான் கூறும் வேதாசார நியாயங்களுக்கு மறைவில், 'தொகையிற்றுன் அதிகாரம் தங்கியிருக்கிறது' என்ற உண்மை உண்டு. யார் எப்பாடு பட்டாலும் தனது சாம்ராச்சியத்தையும் செல்வாக்கையும் பரப்பிப் பெலப்படுத்துவது வத்திக்கானின் விருப்பம் ஆகும். போர்களை வெல்லுவதற்கு 'இயன்ற அளவு வீரரைப் போர்க்களத்துக்கனுப்பு' என்று நெப்போலியன் சாரமாகக் கூறிய ஒளஷதத்தையே வத்திக்கான் பாவிக்கின்றது. இந்தக் கூற்றுத் தற்கால யுத்த முறைக்கு ஏற்காததாயிருக்கலாம். ஆனுல் உலகச் செல்வாக்கைப் பொறுத்தளவில் இன்னும் பயனளிக்கத்தக்கதே. பொது சனங்களின் வாழ்க்கைத்தரம் குறைதல், தொழிலாளர் முதலாளி வர்க்கத்தினரால் அவர்கள் நன்மைக்காக ஈவிரக்கமின்றி நசுக்கப்படுதல், பொருளாதாரக் கஷ்டம் போன்றன, சனத்தொகை அளவு மீறி யதிகரித்தலால் ஏற்படுவன வென்பதை வத்திக்கான் பரவாய் படுத்துவதில்லை. இக் கொள்கையின் பயனுக ஐரோப்பாவிலும் தென் அமெரிக்காவிலும், மேற்கத்திய உலகிலுள்ள கல்வியறிவற்ற, வறுமையில் வாடும் கேவலமான கமக்காரர் குழுவிற் கூடின தொகையினரைத் தனது ஆணைக்குள் வைத்திருப்பதாக வத்திக்கான் புழுகக் கூடியதாயிருக்கிறது. இயலுமான அளவு பிள்ளைகளைப் பெறுதலே சமய ஆசாரத்துக்கேற்றது எனப் பிராமணர் வற்புறுத்தியதும் இதனுல் இந்தியாவில் ஏற்பட்ட கொடிய பலா பலன்களும் ஞாபகத்துக்கு வருகின்றன.

ஒருகாலத்திற் கிரெம்ளின் குடும்பக் கட்டுப்பாட்டை யாதரித்தது. ஆனுல், தனது கொள்கையை யதேச்சதிகாரப் பெருக்கப் பாதையிற் திருப்பியதால், பெரிய குடும்பங்கள் வேண்டுமெனத் தூண்டத் தொடங்கினர். வத்திக்கானைப் போலவல்லாது, கிரெம்ளின் பிள்ளைகளை யரசாங்கம் பராமரிப்பதற்கு வழி வகுக்கிறது. இதனுல்' சிறு பராயத்திலேயே பிள்ளைகள் கம்யூனிஸ போதனைக்குள்ளாகி

ளுர்கள் என்பதை நிச்சயப்படுத்திக் கொள்கிறது. ஆனல் கிரெம்ளினின் நோக்கமும் வத்திக்கானின் நோக்கமும் ஒன்றே. கிரெம்ளினுக்குப் பிரமாண்டமான தொழிலாளர் படை தேவைப்படுகிறது. அதே நேரத்தில் மாக்சிய வாதத்தில் நன்ருகப் பயிற்றப்பட்ட கம்யூனிஸப் பிரஜைகளே யெதிர் காலத்தைக் கண்காணிப்பார்களென்பதையும் நிச்சயப்படுத்திக் கொள்ள விரும்புகிறது.

கத்தோலிக்கர் கத்தோலிக்கரல்லாதாரை விவாகஞ் செய்வதை வத்திக்கான் கண்டிக்கிறது. இத்தகைய விவாகம் நிகழ்வதைத் தடுக்கக் குருமார் இயன்றளவு முயல்வார்கள். தடுக்க முடியாது விடின், விவாகம் தங்களைப் பொறுத்தளவு முறையான சட்டத்துக் கமைந்ததல்ல வெனவும் பிள்ளைகள் சட்டப்படி பிறந்தவர்களாகக் கருதப்படமாட்டாரெனவும் கூறி விவாகத்தைக் குழப்பத் தெண்டிப்பார்கள். இந்தப் பலாத்கார முறைகளில் ஒன்ருகிலும் பலிக்காவிடின், இத்தகைய விவாகத்திஞற் பிறக்கும் பிள்ளைகள் ரோமன் கத்தோலிக்க மதத்தினராக வளர்க்கப்பட வேண்டுமெனக் கட்டாயப் படுத்தி ஓரளவுக்கு விட்டுக் கொடுப்பார். இந்த நிபந்தனையின் பின்பே தமக்கு மனமில்லாத சம்மதத்தைக் கூறுவார்கள்.

கம்யூனிஸ்டுகள் கம்யூனிஸ்டுகளல்லாதாரை விவாகஞ் செய்வதைக் கிரெம்ளினும் ஆதரிப்பதில்லை. ஒரு கட்சியங்கத்தவர் இன்னெரு கட்சியங்கத்தவரையே விவாகஞ் செய்வாரென எதிர்பார்க்கப்படுகின்றது. கட்சியங்கத்தவரல்லாதாரை விவாகஞ் செய்தால், அவ்விவாகம் பெரிய அவநம்பிக்கையுடன் கருதப்பட்டுக் குற்றவாளியின் தொழில் முறையையும் பாதிக்கும். அது ஒருவகையான பற்றுறுதி மாறிய தன்மையோடு சம்சயப்படத்தக்க தலைவர்ப்பற்றையுங் குறிக்கும். இந்த ஒழுங்குக்கு மாக்ஸ்-லெனின் கொள்கைகளிலிருந்து எவ்வித காரணமுங் காட்ட முடியாது. எனவே, இது எழுதப்படாத ஒரு சட்டமாக விருக்கின்றது; ஆனல் எழுத்திலில்லாத சட்டங்கள் பல வேளைகளில் மிகப் பலம் வாய்ந்தவையாயிருக்கின்றன. கம்யூனிஸ்டுக் கட்சி ஒழுங்கு நிரலிலுள்ள எல்லா இரகசிய முறைகளாலும் இந்தச் சட்டம் ஆதரிக்கப்படுகிறது. இக்குற்றத்துக்கு என்ன தண்டனை கிடைக்கும் என்றும் எவராலும் திட்டமாகக் கூறமுடியாது. இப்படியான விவாகங்களைப்பார்க்குமிடத்து, தமக்குத் தாம் விரும்பிய வாழ்க்கைத்துணையைத் தேர்ந்தெடுத்துத் தாம் விரும்பிய

படி வாழும் உரிமை இக் கொடிய விதத்தில் மறுக்கப் படுதலால், அநேக இளஞ் சோடிகள் மனவேதனையடைந் திருக்கிறார்களென்பது உண்மைச் சம்பவங்களின் வரலாற் றிலிருந்து தெரியவருகின்றது.

அந்தியக்கிரியை மறுத்தலும், ஆசிர்வதிக்கப்பட்ட இடத்தில் அடக்கஞ் செய்ய மறுத்தலும் ஆகிய இரண்டும் குருமாருக் கூடாக வத்திக்கான் மக்கள் மீது பிரயோகிக்கும் கடைசிப் பயமுறுத்தலாகும். பழைய கொள்கைகளில் விசுவாசம் உள்ளவர்கள் இதற்கு அஞ்சுகிறார்கள்; குரு தனது சபையோரை அடக்கும் அதிகாரத்தைப் பெறுவதற்கு இம் மிரட்டலினால் உண்டாகும் மூடத்தனமான பயமும் அடிமைத்தனமும் குறிப்பிடத்தக்க உதவிபுரிகின்றன.

இறப்பவர்களைப்பற்றியோ அல்லது இறந்தவர்களைப் பற்றியோ கிரேம்ளின் கரிசனை கொள்வதில்லை; சீவிப்பவர்களைப் பற்றியே கவனஞ் செலுத்துகிறது. சீவிக்கின்ற ஆணோ பெண்ணோ, தண்டனையாகச் சைபீரியாவுக்கு அல்லது அடைய முடியாத தூர இடத்துக்கு நாடு கடத்தப்படு கின்றனர். ஒன்றின்படி, மறு உலகிற் கிடைக்கும் தண்டனைக்குப் பயம்; மற்றதின்படி, இவ்வாழ்விலேயே உண்மையான தண்டனை—இதுவே இரண்டிற்குமுள்ள வித்தியாசம்.

(12) *பெரிய எஜமான் தெரிவு.*

இத்தாலிய திருச்சபைக் குடும்பத்திலிருந்தே பாப்பரசர் எப்போதும் தெரிவு செய்யப்படுகிறார். எப்போழு தும் கர்தினால்களில் மூன்றிலொரு பங்கினர் இத்தாலியராக இருக்கத்தக்கதாக வத்திக்கான் கவனித்துக் கொள்வதினால், கம்பெனிகளில் மூன்றிலொரு பங்குகளையுடையவர்கள் முழுக் கம்பெனியின் அதிகாரத்தையும் பெறுவது போன்ற முறையை நிலைநாட்ட உதவுகின்றது. தங்கள் பாது காப்பிற்காகவும் தம்முடைய சௌகரியங்களைக் கவனிப்ப தற்காகவும் இந்த இத்தாலிய கர்தினால் குடும்பங்கள் ஏவலாட்களை நியமித்திருக்கிறார்கள். கிரெம்ளின் ஆட்சி பீடத்துக் கம்யூனிஸ எஜமான்களும் அவர்களது குடும்பங் களும்—200 குடும்பங்களைக் கொண்ட ஒர் சிறுகுழு—இதே போன்ற முறையைக் கையாளுகின்றனர். அவர்களாலே தெரிந் தெடுக்கப்பட்ட 16,000 ஆண்களும் பெண்களும் இக்குடும்பங்களுக்குத் தேவையான வற்றைச் செய்து

வருகின்றனர். ஆதிகாலயப்பானில், மானிய காலப் பிரபுகளைப் பாதுகாப்பதற்காகச் 'சமுறை' மக்கள் பயிற்றப்பட்டது போன்று இந்த ஏவலாட்களும் பயிற்றப்படுகின்றனர்.

## புரியமுடியாத 'பொலிற் பூரோ'

இப்பொழுது 'பிறெசிடியம்' என்றழைக்கப்படும் இந்தப் புரிய முடியாத கம்யூனிஸ அமைப்பைப் பற்றிச் சொல்லப்பட்டுள்ளதாவது:-''பாடசாலைகள், தொழிற்சாலைகள், சுரங்கங்கள், கிராமங்கள், ஐக்கிய சங்கங்கள், இராணுவம் ஆகியவற்றில் அரசியற் குழுக்களைத் தாபித்து ருஷ்ய வாழ்வின் கீழ்ப்படியிலேயே கம்யூனிஸக் கட்சி யாரம்பித்தாலும், இந்த மர்மமான பரிசுத்தமான பொலிற் பூரோவின் ஆதிக்கபீடத்தில், தற்கால உலகில் அதிவல்லமை வாய்ந்த அரசியற் தலைவர்கள் வீற்றிருக்கிறார்கள். இந்தக் கம்யூனிஸ அதிகார அமைப்பில் கவனிக்கத்தக்க முக்கியமான காரியம் யாதெனில், இது ஒரு பிரத்தியேகமான கட்சிப் பொறுப்பு முறையினால் தனது ஆதிக்கத்தைச் செலுத்தி வருகிறது. கிரெம்ளினது கட்சிப் பொறுப்பு முறை சனநாயகக் கட்சிப் பொறுப்பு முறையிலிருந்து வேறுபட்டது. ஒரு சனநாயகத்திலுள்ள கட்சிகள் மக்களுக்குப் பொறுப்புடையவராக இருக்கின்றனர். கூடின தொகையினரின் பிரதிநிதிகளால் ஆக்கப்பட்ட சட்டங்களுக்கு அவையடைங்கி நடக்க வேண்டும். கிரெம்ளின் அரசியல் முறைப்படி கட்சியங்கத்தவர் மக்களுக்கல்ல; கட்சியின் தலைவருக்கே பொறுப்புடையவர்கள். உள் அரசாங்கமே அதிமுக்கியமானது; வெளியரசாங்கம் காட்சிப் பொருளாயிருக்கிறது. அதற்கு எதிராக எவ்வளவு தொகையினரிருந்த போதிலும் உள் அரசாங்கம் விட்டுக்கொடுக்க கூடாது. அதனுடைய ஆணையே பெரிது—'மத்திய' சனநாயகம் என்று கட்சி கருதுவது இதைத்தான். முதற் கருமங்கள் முதல் வர வேண்டும்; கட்சியே முதன்மை வாய்ந்தது. சட்ட சபையங்கத்தவரோ அரசங்க உத்தியோகத்தரோ இக்கூற்றை மறுக்க முற்பட்டால் கட்சியிலிருந்தும் பதவியிலிருந்தும் நிச்சயமாக நீக்கப்படுவார். பிடிவாதமாகத் தொடர்ந்து மறுப்பாராயின் இரகசியப் பொலிஸ் அவரை வேவுபார்க்கும்; மக்கள் நீதி மன்றம் தண்டனை விதிக்கும். சோவியத் புகையிரதம் (4-ம் வகுப்பு) அவரை சைபீரியாவுக்குக் கொண்டு செல்லும். உயர்ந்த இலட்சிய முடையதென சோவியத் வெளிப்படக் கூறிக் கொண்டாலும் இம்

முறைகளைக் கையாளுவதால் அது ஒரு பொலிஸ் அரசாகிறது. "கொள்கையளவில் நாம் கொடுங் கோன்மையைப் புறக்கணித்ததில்லை, புறக்கணிக்கவும் முடியாது" என லெனின் 1901-ம் ஆண்டிற் கூறினர். உருப்படுத்த அவர் உதவிய புதிய தேசம் அவர் கூற்றைச் சொல்லளவிற் பின்பற்றி வருகிறது.

சர்வதேச தலைமைக் காரியாலயம்.

கொமின்போமுக்கூடாக உலககம்யூனிஸத்தின் மீது கிரெம்ளின் ஆதிக்கம் செலுத்துவது அரசாங்கத்துக்குள் அரசாங்கம் ஆட்சி நடத்தல் என்ற கொள்கையை அடிப்படையாகக் கொண்டது. சாதாரணமாக, உலகக் கம்யூனிஸ இயக்கம் தானுகவே தீர்மானிக்கும் வல்லமையுடையது. கம்யூனிஸ்டுக் கட்சியுள்ள ஒவ்வொரு நாடும் மத்திய கம்யூனிஸ்த் தலைமைக் காரியாலயத்துக்குப் பிரதிநிதிகளையனுப்புகிறது. அங்கே உலகப் புரட்சியைக் கொண்டு நடத்துவதற் கேற்ற திட்டங்களை இயக்கத்தின் 'அறிஞர்' உருவாக்குகின்றனர் எனக் கருதப்படுகிறது. நடைமுறையில், பெருமளவிற் பணத்தையும் மக்களையுங் கொண்ட சோவியத் கம்யூனிஸ்டுக்கட்சி, மற்றைய கம்யூனிஸ்டுக் கட்சிகளைத் தனக்குக் கீழ்ப்படியச் செய்கிறது. ஆகவே அது உலகக் கம்யூனிஸத்தின் "தாய்ச் சபையும்" நாணயசாலையும் திறைச்சேரியுமாம். 1949 ஜனவரியில் பிராவ்டா கூறிற்று:—"சோவியத் கம்யூனிஸ்டுகட்சியையும் சோவியத் நாட்டையும் நிபந்தனையெதுவுமில்லாமல் ஆதரித்துக் காப்பாற்றுவதனுலேயே, எங்கள் காலத்தில் ஒருவர் உண்மையான புரட்சி வீரனுகவும் சர்வதேசவாதியாகவும் இருக்க முடியும். உலக கம்யூனிஸம், ருஷ்ய ஆட்சிக்கு அடங்கியிருக்கும் முறை, கடந்த 25 வருடங்களாகப் படிப்படியே விருத்தியடைந்து வந்திருக்கிறது." ("கம்யூனிஸம், சர்வநாயகம், கத்தோலிக்க அதிகாரம்"— போல் பிளாஞ்சாட்).

சிந்தனைக் கட்டுப்பாடு.

விஞ்ஞானத்தின் சாதனைகளையும், நியாயத்தையும் எதிர்த்துக் கடைசிவரையும் போட்டியிட்டு, வத்திக்கான் வாழ்க்கையைப் பற்றியொரு தெய்வீகத்தன்மை வாய்ந்த விளக்கம் கொடுப்பதற்கு எல்லாவழிகளையுங் கையாண்டு வந்திருக்கிறது. எனவே, பிரபஞ்சத்தின் மத்தியிற் பூமியுள்ளது என்ற கொள்கை பிழையென்றும் பூமி

சூரியனைச் சுற்றி வருகிறதென்றும் பெயர் பெற்ற உண்மையைக் கலிலேயோ கண்டுபிடித்து வெளியிட்டதும், ரோமன் கத்தோலிக்க திருச்சபை தான் அவரை வதைத்து வாபஸ் பெற வற்புறுத்தியது. பின் மண்ணூலின் உதவியோடு பழம் பொருளாராய்ச்சி, பிபிலிய வேதத்திற் சொல்லியிருப்பதிலும் பூமியின் வயது மிகவும் கூடியது என்றதை நிரூபித்ததும், இவ்வழியில் வேறு ஆராயச்சி நடக்கவிடாது, தடுப்பதற்குத் திருச்சபை தன்னாலானவற்றையெல்லாம் செய்தது. தம் முயற்சிகள் வெற்றியடையாத போது, பிபிலிய நூலில் மிகவும் விளக்கமாக உள்ள பகுதிகளையுமே திரித்துக் கூறி வேறு கருத்துப் பகன்றனர். கடவுளின் ஏழு நாட் சிருஷ்டியையும் ஏழு புவியியல் வளர்ச்சிப் பகுதிகளென்றனர். இவ்விதக் கருத்தை வேறு எவரேனும் முன்னே கூறியிருந்தால் அவ்வதிர்ஷ்டமற்றவர் கழுவிலேற வேண்டி வந்திருக்கும்.

இப்படியே வத்திக்கானின் சிந்தனைக் கட்டுப்பாடு இற்றைவரைக்கும் வந்திருக்கிறது, புரொட்டஸ்தாந்துத் திருத்தங்களும் பகுத்தறிவு வாதிகளின் அடங்காத் துணிவும் மட்டுமே இதைத் தடுத்துவந்தன. டார்வினின் படிமுறை வளர்ச்சிக் கொள்கை வெளிவந்த பொழுதும் அதற்குப்பின் நீண்ட காலம் வரைக்கும் அது ஒரு பொல்லாத சமயமறுப்புக் கொள்கையென்றும் ரோமன் கத்தோலிக்கர் அதை நம்பப்படாது என்றுங் கூறினர். வத்திக்கானுமே எதிர்க்க முடியாத அளவுக்கு விஞ்ஞான ஆதரவு கூடிக்கொண்டே போனது. தனது பிரஜைகள் விரும்பினால் படிமுறை வளர்ச்சிக் கொள்கையை நம்பலாம் எனப் பாப்பரசர் கூற நேரிட்டது. ஆனால், அது உடல் வளர்ச்சியையே குறிக்கிறது; "தெய்வத்தாற் சிருஷ்டிக்கப்பட்ட ஆத்மா"வுக்கும் அதற்கும் தொடர்பில்லையென்று புறவிதியுங் கூறினர். இப்படியான போலி வாதங்களாலும் சாக்குப் போக்குகளாலும், ஒவ்வொரு திருப்பத்திலும், தனது நிலையை யிழக்கத் தொடங்கின வத்திக்கான் அறிவு வளர்ச்சியின் முன், பின் வாங்க நேரிட்டது. பாப்பரசர் கொள்கையளவிற் தவறு அற்றவர்கள் என்பது தான் வரையறை—அதாவது, வாழ்க்கையைப்பற்றிய உண்மை, வாழ்க்கையின் அர்த்தம், அதன் நோக்கம், மனிதனின் இயற்கை ஆகியவற்றைப் பற்றித் தவறற்றவர். ஆனால், தமக்கு முந்திய பாப்பரசர் பிழைவிட்டிருக்கிறார்களெனச் சமீப காலத்துப் பாப்பரசர் திரும்பவும் திரும்பவும் சொல்லவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருக்கிறது.

உண்மையைப் பற்றிய வெளிப்படுத்துதல்கள் கடவுளிலிருந்து நேரடியாகப் பாப்பரசருக்குக் கிடைப்பதால், கடவுள் பிழைவிடுவதாக வத்திக்கான் குற்றஞ்சாட்டுவது போல் தோன்றும். ஒரு சிக்கலான நிலைதான்! ஒரு காலம் வத்திக்கானுக்கு இருந்த அதிகாரம் இப்பொழுது இருந்தால், கட்டாயத்தினாலும் பயமுறுத்துதலினாலும் அறிவுவளர்ச்சியைத்தடுப்பதையின்றும் செய்து கொண்டிருக்கும், தெய்வீகத் தன்மை வாய்ந்த புதிர்கள் என்ற இருண்டகாலச் சிறைக்குள் இன்னும் மனித உள்ளத்தை வைத்திருக்கும்.

மேற்பார்வைக்கு இதற்குச் சரிமாறான கிரெம்ளின் கொள்கை அறிவுள்ள மக்களுக்குக் கூடிய கவர்ச்சி கரமானதாகத் தோன்றும். ரோமன் கத்தோலிக்க திருச்சபையின் தெய்வீகத்துக்கு எதிராகப் பிரபஞ்சத்தின் நியதிகளெல்லாம் லௌகீகமானவை யென்றும், அவற்றை யிறுதியில் விஞ்ஞான ஆராய்ச்சிக் கூடாகவே நாம் அறியலாமென்றும் மார்க்சியம் கூறுகிறது. உடலியல் நியதிகள் அல்லாத் வேறு ஏதேனும்—தெரிந்த உடலியல் நியதிகளையிவை மறுக்காத போதிலும்—இருக்கக் கூடும் என்ற சிந்தனைப் போக்குக்கு எதிராக உள்ளது இது. எனவே, சாவுக்குப் பின் வாழ்வு உண்டென்பதை நிரூபிக்கவோ மறுக்கவோ முடியாத நிலையில் விஞ்ஞானம் இருக்க, மார்க்சியம் அது எவ்விதத்திலும் இல்லையென்று திட்டவட்டமாகக் கூறி லோகாயதவாதக் கொள்கையைத்திடப் படுத்துமுகமாக விஞ்ஞான அறிவை விளக்கத் தெண்டிக்கிறது. வத்திக்கான் தெய்வீகத்தைக் கொள்கையாக அமைத்தது போல மார்க்சியம் விஞ்ஞானத்தை ஒரு கொள்கையாக அமைக்கிறது.

மேலும், படிமுறை வளர்ச்சியில், சூழல் பிரதானமான இடம் வகிக்கிறது என்றது போன்ற, மார்க்சியத்துக்குத் தேவையான பிரமாணக் கொள்கைகளை விஞ்ஞானம் ஆதரிக்க வேண்டும். மார்க்சியத்துக்கு இக்கொள்கை மிகவும் முக்கியமானது. சூழலை மாற்றியமைப்பதால், சரித்திர நிகழ்ச்சிகளை மாற்றியமைக்கலாம் என்பது, இதிற்தங்கியுள்ளது. இதன் நேரடி விளைவாக, 'லைசென் கோ' கொள்கைகளைத் தவிர்த்து மற்றப் பிறப்புமரபியற் கொள்கைகளை கிரெம்ளின் 48-ம் ஆண்டிற் புறக்கணித்தது. ஏற்றுக்கொள்ளப்பட்ட எல்லாப் பிறப்புமரபியற் கொள்கைகளையும் புறக்கணித்துச் சூழலின்

ஆதிக்கத்தை யாதரிக்கும் கொள்கைகளை யேற்றுக் கொண்டனர். இக்கொள்கைகள் "இயற்கையைத் திருப்பியமைக்கும்" கம்யூனிஸ முயற்சிக்கு உகந்தனவையாம். [illegible] முக்கியத்துவம் வாய்ந்த வேறு காரணங்க[illegible] கூறும் விஞ்ஞா[illegible]கள் மத்திய வகுப்பினரின் [illegible] வாதிகளைப் பின்பற்றுவோர் எனப்புற[illegible]டுகின்றனர். புகழ்பெற்ற பல சோவியத் [illegible]னிகள் 'வழிவிலகுதல்' என்ற குற்றஞ் சாட்டப்பட்டு, '[illegible]கழுவுதல்' என்[illegible] முறை அவர்களின் மேற் பிரயோகிக்கப்பட்ட[illegible]வே. கிரெம்ளின் முறைப்படி விஞ்ஞானமும் கட்சிக் [illegible]யைப் பின்பற்ற வேண்டியிருக்கிறது.

கிரெம்ளினின் [illegible]பான பார்வையின் கீழ் எல்லா விஞ்ஞான ஆராய்ச்சியும் நடைபெறுகிறது. மாக்சிய லோகாயதவாதிக் கொள்கைக்கு எதிரான பயன்களையளிக்கும் ஆராய்ச்சிகளைக் கிரெம்ளின் அனுமதிக்கமாட்டாது. அதேநேரத்தில் லோகாயதவாதத்துக் கேற்ற முறையிலமையாத பொழுது தனிப்பட்ட விஞ்ஞானிகளை ஏளனஞ் செய்யும்படி சோவியத் விஞ்ஞானிகள் வற்புறுத்தப் படுகிறார்கள். தொ[illegible]யுணர்வு, தொலைவில் இயக்கத்தையுண்டாக்கல், தொலைவிடக் காட்சி ஆகியவை உட்பட அசாதாரண மனோதத்துவம் போன்ற சற்றேனும் ஈய்ந்து கொடுக்காத லோகாயதவாதச் சட்டத்துள் அமையாத, குறிப்பிடத்தக்க நிகழ்ச்சிகளின் பக்கமாக ஐரோப்பிய அமெரிக்க விஞ்ஞானிகள் இப்போது திரும்புகிறார். இவையெல்லாம் விஞ்ஞான உரிமையுடன் ஆராயக் கூடிய துறைகளே. ஆனால், சோவியத் விஞ்ஞானியைப் பொறுத்தளவில் இவை விலக்கப்பட்டவையே. அவர், மாக்சிய சொல்லியல் லோகாயதவாதத்தின் உண்மையை நிரூபிப்பதில் மட்டுமே தனது கவனத்தைச் செலுத்தவேண்டும்.

ஆனால், இதன் முடிவு யாது? 1952-ம் ஆண்டில் கிரெம்ளினின் ஆதரவோடு லைசென்கோ, படிமுறை வளர்ச்சியில் ஒரு புதிய கொள்கையை வெளியிட்டார். சூழலின் சில கூறுகள் உகந்தனவையாய் இல்லாமையினால் ஒரு இனத்திலுள்ளவை வேறு இனத்துக்குச் சடுதியாக மாறுகின்றனவென்று அவர் கூறினார். கோதுமையிலிருந்து சடுதியாகக் கம்புத்தானியங்கள் கிடைத்ததைத் தனது பரிசோதனைகளிற் கண்டதாகவுமவர் கூறினார். சோவியத் நாட்டிலும், வெளிநாடுகளிலும் அவரது முறைகளைப் பின்பற்றி, யவர் கண்ட முடிவுகளைப்

பெறப் பல விஞ்ஞானிகள் தெண்டித்தனர், ஆனால் இயல வில்லை. லைசென்கோ தகுதிவாய்ந்தவரல்ல வெனக்கருதப் பட்டு, இன்னும் சில ஏமாற்றங்களுக்குப் பின் 1956ம் ஆண்டிற் பதவிநீக்கம் செய்யப்பட்டார். அவருக்குக் கட்டளையிடப்பட்ட முடிவுகளை யவர் பெறவில்லை; கிரெம்ளினுக்கு அவரால் எவ்விதப்பயனுமில்லை. படிமுறைவளர்ச்சியைப் பற்றிய மாக்சிய கொள்கைக்கு மிகவும் உதவிய அவரது கொள்கைகள், பிறப்பு மரபியலில் இப்பொழுது கணிக்கப் படுவதில்லை.

Dr. T. H. E. சென் எழுதிய 'சீன அறிஞரின் சிந்தனைச் சீர்திருத்தம்' என்ற நூலிலுள்ளபடி யிதே நிலை கம்யூனிஸ்டு சீனாவிலும் உள்ளது. ''மக்களின் சிந்தனையைக் கட்டுப் படுத்தி வழிகாட்டும் வகையில், முன்பு சந்தேகிக்காத, கடின எதிர்ப்பை யாட்சியினர் கண்டனர். கடந்த எட்டு வருட காலமாகச் சீன அறிஞர் பல நெருக்குதல்களுக்குட் பட்டார்கள். கட்சிக் குழுவினரால் ஊக்கமளிக்கப்பட்டு நடாத்தப்பட்ட கொதித்தெழுந்த, ஓய்வில்லாத எதிர்ப்பு களுக்குள்ளாகினர். அறிஞர் 'சிந்தனைப் போராட்டங்கள்' நடத்தவேண்டிய கட்டாயத்துக்குள்ளாகிப் பெருமை பிடித்த அறிவற்ற கட்சி ஊழியரது கொள்கையைப் புனருத்தாரணத்துக்கு விட்டுக்கொடுக்க வேண்டியிருந்தது. கம்யூனிஸ்டு எண்ணப்படி சிந்தனைச் சீர்திருத்தம் என்றால் இடைவிடாத சுயசோதனை, கண்டனம், சுயகண்டனம், ஒப்புக்கொள்ளுதல், இன்னும் மிக இழிவான முறைகளில் ஒப்புக்கொள்ளுதல், குழுவின் கட்டாயத்தினால் புதிய உறுதிப்பாடுகள் செய்தல் ஆகியவற்றைக் கொண்டதாகும். அறிஞரை நன்றாக 'மூளை கழுவி', அவர்கள் மனத்தில் 'விறைப்பு' அல்லது 'வெற்றுத்தன்மை' ஏற்படத்தக்கதாக அவரது மனத்தையமைப்பதே சிந்தனைச் சீர்திருத்தத்தின் நோக்கமாகும். இந்த 'வெறுமை'யான இடத்தில் அக்காலத்துக் கொள்கையை அல்லது ஆட்சியினரின் அப் போதைய கட்டளைகளைத் திணிப்பது இலகுவாக இருக்கும். (Thought, டெல்லி நவம். 12.60.)

தொகுத்துக் கூறல்.

பிரபஞ்சத்திலுள்ள எல்லாத் தோற்றங்களினதும் அழிவின் 'மூலம்' அவற்றிலேயே உண்டு எனப் புத்தர் கூறினார். முற்கூறிய வற்றிலிருந்து, வத்திக்கானிலிருந்து கிரெம்ளின் பிறந்ததென்றும், இந்த இரு முறைகளும் தமது

அழிவின் மூலங்களைத் தமக்குள்ளேயே கொண்டுள்ளன வென்பதையுங் காணக்கூடும். 1940 வருடங்களாக உருவாக்கப்பட்டு வந்த வத்திக்கான் சாம்ராச்சியம் இன்று உலகின் எல்லாப் பாகங்களிலுமுள்ள பல சாதியினரைக் கொண்ட 35 கோடி மக்களைப் பிரஜைகளாகக் கொண்டுள்ளது. மறுகரையில், 40 வருட காலம் மட்டுமேயிருந்து வரும் கிரெம்ளின் கம்யூனிஸ ராச்சியம் இதற்கிடையில் 90 கோடி மக்களைத் தனது கொள்கைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுள்ளது. இத்தொகையிற் சீனவும் கம்யூனிஸ துணை நாடுகளும் சேரும். நாம் கண்டபடி இத்துணை நாடுகள், 'சோவியத் நாட்டையும் சோவியத் நாட்டின் கம்யூனிஸக் கட்சியையும்' பாதுகாத்து, ஆதரவளிக்கக் கடமைப்பட்டிருக்கின்றன.

கம்யூனிஸம் பரவிய விதம் எங்கள் யுகத்தின் குறிப்பிடத்தக்க ஒரு காரியமாகும். எனினும், அதன் பருமன் காரணமாகப் பொருளாதார நெருக்கடி, யல்லது அதிகாரக் குழப்பம் ஏற்படக்கூடிய இடங்களில், கடைசியில் பிளவுக்கேற்ற தன்மைகள் தோன்ற வேண்டும். மேற்கத்திய துணை நாடுகளைக் கூடின தொகையின் காரணமாகக் கிரெம்ளின் அடக்கக் கூடியதாயிருந்தது. கிரெம்ளின் தனது கூடின தொகையினுல் மேற்கத்திய நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தவும், இத்துணை நாடுகளின் கம்யூனிஸ்டுக் கட்சிகளுக்கு அதன் ஆதரவு தேவைப்படும் வரைக்கும், கிரெம்ளின் சாம்ராச்சியம் ஒரு மத்திய உறுப்பின் உறுதி பெற்றிருந்தது. ஆனுல், கிழக்கில் ஒரு மத்திய ஸ்தானம் தோன்றுகிறது. தொழில் நுண்ணியல், அமைப்பு, விஞ்ஞானம் ஆகியவற்றில் எவ்வளவு முடியுமோ அவ்வளவை ருஷ்யாவிலிருந்து அறிந்துகொள்வதில் பீக்கிங் அதிக சிரத்தையாய் இருக்கிறது. உற்பத்தியிலும், அணு ஆயுதபலத்திலும் ருஷ்யா, ஐரோப்பா, அமெரிக்க நாடுகளுடன் தாம் சமனை நிலையை யடைந்து விட்டதாகச் சீனக் கம்யூனிஸ்டு எஜமானர் நினைக்கும் நாளில், கிரெம்ளினிலிருந்து விடுதலை பெற்று விடுவார்கள். அந்த நேரத்தில் உலக ஆதிக்கத்துக்கு ருஷ்யாவுடன் போட்டி போடக் கூடிய நிலையிலிருக்கும். பர்மாவிலும், இந்தோசீன நாடுகளிலும் கண்வைத்துக் கொண்டு, மங்கோலிய சாதியினருக்குள் ஒரு சிறு சாம்ராச்சியத்தைச் சீன படிப்படியாகக் குடைந்துகொண்டே வருகிறது. இது ஒரு இளம் நாம்பன், தனது கூட்டத் தலைவனேடு மோதுதற்கு முன் தனது கொம்புகளைப் பலம்பார்ப்பதையொக்கும். ஐரோப்

பாவில் கிரெம்ளின் செய்தது போலப் பீக்கிங்கும் ஏன் தன்னைச் சூழ்ந்து துணைநாடுகளை ஆசியாவிற் சேகரிக்கக் கூடாது? ஒரு நாட்டுக்குள் படிப்படியாகச் செல்லும் வகைகள், கெடுக்கும் பிரசாரம், அரசியற்பற்றைத் தங்களுக்கு மாற்றும் முறைகள் நுண்மையான தேசீய ஆக்கிரமிப்புகள் போன்றன வற்றைக் கிரெம்ளின் தலைவரிலிருந்து சீனக் கம்யூனிஸ்டு எஜமானர் பயின்றுவிட்டனர். தங்களைச் சூழ்ந்திருக்கும் சிறிய நாடுகளை 'விடுதலை' செய்வதிற் தகுந்த மாணவரென நிருபித்துவிட்டனர்; சன்மார்க்கம், தயாள சிந்தை போன்ற முகமூடி களணிவதிலும் தாம் சிறந்தவரென்பதையுங் காட்டி விட்டனர்.

இப்படியான பெரிய எதிராளிகளுக்கிடையில் நசுங்கிக் கொண்டு, பொய், சூது, நியாயமின்மை, திட்டமிடப்பட்ட வல்லமை போன்றவற்றினுதவியோடு தென் கிழக்காசியாவில் தமது இரக்கமற்ற கொடிய ஆட்சிகளை நிறுவமுற்படும் அதிகார வெறிபிடித்த மனிதருள்ள உலகில், தென்கிழக்காசியா மக்கள் என்ன செய்ய வேண்டும்? சென்ற காலத்தில் இரட்சகர் போல்வந்த அடிமை வியாபாரிக்குக் கதவைத் திறந்து விட்டதுபோல, இன்றுஞ்செய்வதா?

நாலு நூற்றுண்டுகட்கு முன்பு ஐரோப்பியருடைய கிறித்தவச் சகோதரத்துவக் கதையை நம்பி மதம் மாறினவர்களைப் போன்று இப்பொழுது தென் கிழக்காசியாவில் மாக்சியத்தைச் சேர்வோரும் எளிய மனமும் எல்லாரையும் நம்பும் தன்மையையும் உடையவரல்லவா?

''சாதி, நிற வேறுபாடின்றி உலகத் தொழிலாளரே ஒன்று சேருங்கள்'' என்ற சுலோகம், மேற்கத்திய யதேச்சதிகாரத்துக்குக் கீழ் தென் கிழக்காசியாவை முன்பு கொணர்ந்த தூண்டிலிரையின் ஒரு பிரதியே. இந்தக் கவர்ச்சிகரமான இரையைக் கடித்தவர்கள் தெறியில் மயக்கமடைகிறுர்கள்; கிரெம்ளினில் ஆக்கப்பட்ட சுலோகங்களைக் கிளியைப் போன்று திருப்பிச் சொல்கிறுர்கள்; ரோமின் சுலோகங்களை வத்திக்கான் பிரஜைகளும் இப்படியே சொல்கிறுர்கள். கசப்பான அனுபவத்திலிருந்து தாம் ஒன்றும் படியாதவர் போன்று, போதனை மாற்றத்துக்கு விரும்பியுட்பட்டவர், சரித்திரத்தின் கொடிய பகுதிகளைத் திருப்பியமைக்கிறுர்கள். தென் கிழக்காசிய மக்கள் தங்களுக்காகத் தாமே சிந்திக்கப் பயில மாட்டார்களா?

எப்பொழுதும் மற்றவர்களின் சிந்தனைக்கு அடிமைகளாக இருக்க வேண்டுமா? உள்ளம் அடிமைப்பட்டவரின் உடலும் காலகதியில் அடிமைப்பட வேண்டுமென்பதை அவர்கள் விளங்க மாட்டார்களா?

ஐரோப்பிய சாதியினரிற் பலர் காட்டு மிராண்டி நிலையிலிருந்த காலத்துக்கே செல்லக்கூடிய மரபும் பண்பாடும் ஒவ்வொரு ஆசிய நாட்டுக்கும் உண்டு. அவர்களின் பண்பாடும், அது எழக்காரணமாயிருந்த ஆத்மீகக் கொள்கைகளும் சீரழிந்துவிட்டன. அடிமைகளைப் போல் வெளி நாட்டாரின் சிந்தனை முறைகளைப் பின்பற்றியதன் பயனேயிது. வெளி நாட்டாரின் நெருக்குதலும் கூடுதலாகத்தான் இருந்தது. எனினும் தென் கிழக்காசிய மக்களிற் சிலரும் தமது குற்றத்தை ஒப்புக்கொள்ளவேண்டும். என்னெனில், அவர்களிற் பலர் இலகுவாயுங் கெதியாயும் வெளிநாட்டு ஆதிக்கத்திற்கு அடிமைகளாகினர். இப்படி ஆகின பொழுது, மேற்கத்திய நாகரிகத்தின் நல்ல அம்சங்களைப் பின்பற்றுது, கெட்டதும், வெளிப் பகட்டானதுமான எல்லாவற்றையும் பின்பற்றினார். நீண்ட கால அனுபவத்தினாலும் கஷ்டமான போராட்டத்தினாலும் எழுந்த ஐரோப்பிய சனநாயகஸ்தாபனங்களிலிருந்து அதிகமானவற்றை ஆசிய மக்கள் கைப்பிடித்துத் தமது உயர்ந்த ஆத்மீகப் பண்புகளை இழக்காது இருந்திருக்கலாம். பௌத்த நாடுகளைப் பொறுத்த வரையில் இது ஏற்கும். ஏனெனில், பௌத்தமும் சனநாயகத்தன்மை வாய்ந்தது. சமூக நீதியிலும், சனநாயகப் பிரதிநிதித்துவத்திலும் அமைந்த முறைகளுக்குத் தகுந்த பின்னணியாகப் பௌத்தம் இருந்தது. ஆனால், சனநாயகத்தின் அம்சங்களில்லாது, சனநாயக அமைப்பை மட்டும் வைத்திருப்பது உண்மையைக் கேலி செய்வதாகும்.

ஆத்மீக ஞானமும் அனுபவ ஞானமும் முன்னேரளித்த அருஞ்செல்வமாகக் கொண்டுள்ள தென் கிழக்காசிய நாடுகள் கொள்கைகளைப் பொறுத்தளவில், வெளி நாடுகளின் வழிகாட்டலை நாடவேண்டிய அவசியமில்லை. இந் நாடுகளே அளக்க முடியாத பெறுமதிவாய்ந்ததொன்றை மேற்கத்திய உலகுக்குக் கொடுக்கத்தக்க நிலையிலிருக்கின்றன. இவை மேற்கத்திய உள்ளத்தின் தற்போதைய குறைபாடுகளான ஒருவாழ்க்கைமுறையும், வாழ்க்கையின் நோக்கத்தைப் பற்றிய மேலான எண்ணமுமே. இதையறிந்த பல குறிப்பிடத்தக்க சிந்தனையாளர் இப்போது கீழைத் தேச

நாடுகள்—பழங்காலக் சீழைத் தேசம்.—பக்கம் ஊக்கம் பெறுவதற்காகத் திரும்புகையில் தென்கிழக்காசியர் அடிமை மனப்பான்மையுடன் இன்னும் பிறரைப் பார்த்து நடிப்பது வியக்கத்தக்கது. இப்பிறரின் சிந்தனை முறைகளும் ஸ்தாபனங்களும் முற்றிலும் தொடர்பற்றவையாயும் தேவையற்றனவையாயும் இருந்தபொழுதிலும் அவ்விதம் செய்கின்றனர். இரவல் உடைகளாலும், முன்பாவிக்கப்பட்ட உடைகளாலும் தங்கள் உள்ளங்களை யுடுத்திக்கொண்டு, தாங்கள் எண்பது, நூறு ஆண்டுகளுக்கு முன்னே வழக்கிலிருந்த ஆடைகளை அணிந்திருக்கின்றன ரென்பதை உணராதிருக்கின்றனர். ஆனால், இதுதான் உண்மை. ஏனெனில் அவர்கள் அச்சிலிருந்து இப்பொழுது தான் வெளி வந்த நவீனக் கொள்கைகள் எனக் கருதுவன ஐரோப்பாவிற் பாவித்துக் கழித்து விடப்பட்டனவையாகும். மாக்சிய சொல்லியல் லோகாயதவாதம் இவற்றிலொன்று. அதன் போலி விஞ்ஞானக் கொள்கைகள் ஒரு ஈடாடும் சூத்திரமாகவேயிருக்கின்றன. நேர்மையற்ற அறிவாற்றலாலும் வேதனை அளிக்கும் விதத்தில் விஞ்ஞான உண்மைகளைத் திரித்தலாலும் வத்திக்கானின் ஈசுவரஞானத்தைச் சிதையாது வைத்திருப்பதைப் போல, இந்த ஈடாடும் சூத்திரத்தையும் சிதையாது வைத்திருக்கலாம். தன் அரசியற் கொள்கைகளைப் பொறுத்தளவில், கிரெம்ளின் நாம் கண்டபடி, அதை நடைமுறையிற் கொண்டுவர ஒருபோதும் எத்தனிக்கவுமில்லை.

தென்கிழக்காசியப் பண்பாடு பாரதூரமான அளவுக்கு மறைக்கப்பட்டிருந்தது. ஆனால், இன்னும் அது முற்றிலும் மறையவில்லை. நேர்மையும் பரந்த நோக்கும் கொண்டவர்கள் அதற்கு இன்னும் புத்துயிரளிக்கலாம். இத்தகைய மனிதரின் தலைமையின் கீழ் தென்கிழக்காசிய மக்கள், தங்கள் பண்பாட்டுக்கும் மரபுக்குமேற்ற பொருளாதாரக் கொள்கையையும், வாழ்க்கை முறையையும் உருவாக்க முயல வேண்டும். இந்த வழியிற்றான் அவர்கள் தங்கள் சுதந்திரத்தைப் பாதுகாத்து, தங்கள் கடந்தகால வாழ்க்கையைச் செறிவுறச் செய்த சமய, ஆத்மீகக் கொள்கைகளிலிருந்து வழுவாதிருக்கலாம். இப்படியவர்கள் முயலாவிடின், மனித வர்க்கத்திற்கு உண்மையான பெறுமதிவாய்ந்தனவெல்லாம் அழிந்து போகும்.—மனிதன் சுயாதீனமாகச் சிந்தித்துத் தனக்குத் தானே தீர்மானிக்கும் சுதந்திரத்தையிழப்பதுடன் அழிந்து போகும்,

சிந்தனைக் கட்டுப்பாடே ஏகாதிபத்தியத்தின் முதற்படி. மக்களிடையே சிந்தனையின்னுமொரு முறை முற்றிலும் அடிமையாகத் தோன்றுவதா? சிந்தனையை விடுதலை செய்வதற்காகப் புத்தர், யேசு கிறிஸ்து போன்ற ஆத்மீகத் தலைவர்களும் தெமஸ்தெனசு, பிளாட்டோ, சொகிறற்றிசு, ஆபிரகாம் லிங்கன், ஜோர்ஜ் வாசிங்டன், ஜோன் ஸ்டிவாட் மில், மகாத்மா காந்தி போன்ற பெரிய மேதைகளும், வேறும் எண்ணுக்கணக்கற்ற பலரும் செய்த முயற்சிகளெல்லாம் வீணு?.

பாப்பரசரும் வத்திக்கானிலுள்ள அவரது இருபது கர்தினல்கள், அல்லது பீக்கிங்கில் உள்ள 18 மாக்சிய ஆட்சிக்குழுவினர், அல்லது கிரெம்ளினிலுள்ள பதினைவர்—ஆகியோரின் மனம் போனபடியெல்லாம் மனிதசித்தம் அமைக்கப்படவேண்டுமா? வேறுவிதத்திற் கூறின், உலகில் வேறெந்த முறையைப்பார்க்கிலும் முற்றுகவும் ஒழுங்காகவும் மனிதத்தன்மையை நீக்கும் முறையினுல், மனிதவர்க்கமே ஈக்கள், எறும்புகளது நிலைக்குத் தாழ்த்தப் படுவதோ? இந்தப் பேரழிவை விட வேறு வழியேயில்லையா?

தென்கிழக்காசிய சிந்தனையில் இருக்கும் உயிர்ச்சக்தியிலும், தலைவருக்குத் தென்கிழக்காசியா அளிக்கும் உற்சாகத்திலுமே இவ்வினுவின் விடைதங்கியிருக்கிறது. ஏனெனில், மனித உள்ளத்தைக் கைப்பற்றும் அதிமுக்கியமான போராட்டத்துக்கு, அரங்கு இங்கேதான் தயாராகின்றது.

காலசக்கரம் சுழன்று கொண்டே போகிறது. தென்கிழக்காசிய மக்களின் ஒரு முகப்பட்ட நோக்கமும், செயலும் தேவைப்படுகின்றன. சுதந்திரத்தை நாடும், வீரம் வாய்ந்த ஒவ்வொரு ஆணும் பெண்ணும், மனிதவர்க்கத்தைப் பீடிக்கும் இக் கொள்ளை நோயை வேருடன் அகற்றுவதற்காகச் சாதி, மத, நிற பேதமின்றிப் புதிதாக ஒன்று சேர வேண்டிய அவசியம் ஏற்படவில்லையா?

நவ நாகரிகம்.

கார்ல் மாக்ஸ் காலந் தொட்டு உலகம் பொதுவாக இரு திசைகளில் விருத்தியடைந்து வந்திருக்கிறது; ஒன்று மாக்ஸிய வழி, மற்றது முதலாளித்துவ வழி. தற்போதைய கம்யூனிஸ அரசு எப்படி வளர்ந்ததென்றும், அதன் இன்றைய நிலையைப் பற்றியும் முன்னைய பக்கங்களிலிருந்து அறிந்தோம்.

எனவே, கார்ல் மாக்ஸ் காலந் தொட்டு முதலாளித்துவ உலகம் எப்படி விருத்தியடைந்திருக்கிற தென்பதை ஆராய்தலே தகுதியானது. கார்ல் மாக்ஸ் காலத்தில் தொழிலாளர் முயற்சியின் பயனாகிய மிதமிஞ்சிய லாபத்தை முதலாளித்துவ சமூகம் அனுபவித்த தென்பது சரித்திர உண்மை. தொழிலாளர் சுரண்டப்பட்டு வந்தனரென்பதும் அது போன்று உண்மையே. ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் சாம்ராச்சியங்களை நிறுவிய முதலாளித்துவ முறையிப்போது உலகத் தொழிலாளரைப் பயமுறுத்தத் தொடங்கிவிட்டது.

முதலாளித்துவ நாடுகளிற் பின்பு நடந்த சம்பவங்களை யாராயுமுன் கம்யூனிஸ நாடுகளில் மிதமிஞ்சிய லாபக் கொள்கையெப்படி நடைமுறையில் இருந்தது என்பதை யாராய்தல் சுவைபயக்கும்.

மிதமிஞ்சிய லாபத்தைப் பற்றிக் கூறிய போது கார்ல் மாக்ஸ் திட்டவட்டமாக எதைக்கருதினார்? தொழிலாளியின் வாழ்க்கைச் செலவைத் தள்ளியதற்கு மேல் வரும் லாபமே மிதமிஞ்சிய லாபம் என்பது மாக்ஸின் அபிப்பிராயம். இந்த மிதமிஞ்சிய லாபத்திலேதான் முழு சமுதாயமும் வாழ்கிறது. உதாரணமாக, ஒரு தொழிலாளியின் நாளாந்த வாழ்க்கைச் செலவு 5 ரூபா வாயிருக்க, அவன் 6 ரூபா பெறுமதியான தொழில் புரிந்தால், கூடுதலான அந்த 1 ரூபா மிதமிஞ்சிய லாபமாகும். இதன்படி, ஒருவனின் நாளாந்த வாழ்க்கைச் செலவு 5 ரூபா வாயிருக்கும் பொழுது 10 தொழிலாளர் நாளொன்றுக்கு ஒருவன் 6 ரூ. பெறுமதியான தொழில் செய்தால், 10 தொழிலாளரினதும் செலவு 50 ரூ. ஆகும்; மிதமிஞ்சிய லாபம் 10 ரூ. ஆகும்,

முதலாளித்துவ சமுதாயத்திலிருந்து மிதமிஞ்சிய லாபம் முழுவதையும் முதலாளிகள் தமதாக்கிக் கொள்கின்றனரென மாக்ஸ் கூறினார். எனவே, தொழிலாளர் தமது நிலையைச் சீர்படுத்த விரும்பினால், தாங்களே உருவாக்கியதால் முறைப்படி தமக்கு உரித்தான இந்த மிதமிஞ்சிய லாபத்தைத் தமது நலனுக்காகப் பாவிக்க அனுமதிக்கும் தொழிலாளர் அரசை நிறுவ வேண்டுமென அவர் புத்தி கூறினார். மேலும், முதலாளிகள் ஒரு கைப்பிடியளவினராயிருக்கத் தொழிலாளரே கூடின தொகையினராவர்.

கருத்தைப் பொறுத்தளவில் இக்கொள்கைதான் மாக்ஸியத்தின் உண்மைக் கொள்கையாகும். மிகுதியெல்லாம், சொல்லியல் லோகாயதவாதம், இணைப்பு, எதிர்முரண், சரித்திர அவசியம், வழிவிலக்கல், உள்ளம், பொருள் போன்றன வற்றைப் போல் மக்களின் கண்ணில் மண்ணைத் தூவுவதற்காகப் பாவிக்கப்படும் மாக்ஸியப் பிதற்றலாகும். விளக்கமாக ஆராய்ந்தால் இவற்றில் ஒரு பொருளும் காணமுடியாது. உலகத்தில் அறிவாளிகளும் முன்னேற்ற வாதிகளும் தாங்களே என்று மாக்ஸிய வாதிகள் பறை சாற்றுவதற்குப் பாவித்த முழக்கச் சொற்களும் பேரொலிகளும், கோல்ட் சிமித் என்னும் புலவர் கிராமத்துப் பள்ளி ஆசிரியரை விவரித்த சொற்களை ஞாபகமூட்டுகின்றன.

> ''படித்ததை விளம்பும் நீளமும், முழங்கும்
> சப்தமும் கொண்ட கிளவிகளால்
>
> வளைத்திரு நாட்டுப்புறத்தோரை வியக்க வைத்தார்
> இன்னும் பார்த்தனர், இன்னும் வியந்தனர்;
>
> இத்துணை யறிவையும் ஒரு சிறு தலை
> சுமக்கின்றதே!''

இத்தகைய வெற்றுப் பகட்டுரைகள் படிப்பறிவற்ற மக்களைப் பெரிதும் ஏமாற்றி விட்டன. கார்ல் மாக்ஸ் பகன்ற ஒரேயுண்மையைச்—மிதமிஞ்சிய லாபக் கொள்கையைச்—சிறிது ஆராய்வோம். இரண்டு பெரிய மாக்ஸிய அரசுகளில் இக்கொள்கை என்ன வாயிற்று? மேலே கூறப்பட்ட 10 தொழிலாளரின் உதாரணத்தை யெடுத்துக் கொள்ளுவோம். 10-வது தொழிலாளி மற்ற ஒன்பதின் மரையும் மேற்பார்வை செய்வதற்காக நியமிக்கப்பட்டு அவனுக்கு 15 ரூபா கொடுக்கப்படுகிற தெனவைத்துக் கொள்வோம். அப்பொழுது என்ன நடக்கிறது? நாளாந்த 5 ரூ. ஆக 9 தொழிலாளருக்கும் 45 ரூ. வாழ்க்கைச் செலவாக முடிகிறது. ஒருவர் 6 ரூ. பெறுமதியான தொழில் புரிவதால் 9 பேரும் 54 ரூ. பெறுமதியான தொழிலைச் செய்கின்றார்கள். எனவே, மிகமிஞ்சிய லாபம் 9 ரூ. ஆனல் அந்தக் கடைசித் தொழிலாளிக்கு—பத்தாவது தொழிலாளிக்கு—மேற்பார்வை செய்வதற்காக 15 ரூ. கொடுக்கப்படுகிறது. எனவே ஒரு நாளுக்கு 6 ரூ. நட்டம் ஆகிறது.

தனது தொழிலாளரின் உற்பத்தியால் லாபம் கிடைக்க வேண்டுமானால் இந்த மேற்பார்வையாளன் என்ன செய்ய வேண்டும்? அவன் கடைப்பிடிக்கக் கூடிய மூன்று வழிகள் உள்ளன :- (1) நாளொன்றுக்கு 7 ரூ. பெறுமதியான தொழிலைச் செய்யும்படி 9 பேரையும் கட்டாயபப்படுத்தல்; (2) ஒவ்வொருவரின் நாளாந்த வாழ்க்கைச் செலவைக் குறைத்து 4 ரூ. ஆக்கல்; (3) இரண்டும்—தொழிலாளரைக் கட்டாயப் படுத்துதலும், வாழ்க்கைச் செலவைக் குறைத்தலும்.

இந்த மூன்ருவது முறையேயின்று ரூஷ்யாவில் நடைமுறையிலிருந்து வருகிறது.

சர்வாதிகாரியும், பிறெசிடியம் என்றழைக்கப்படும் பழைய பொலிற் பூரோவும் மனிதராயிருப்பதனால், இயற்கையாகவே அதிகார தாகங் கொண்டு அதை மென்மேலும் பெருக்கிக் கொள்ளத் தவிக்கிருர்கள். ''அதிகாரம் கெடுக்கும், அதிகாரம் முற்றிலும் கெடுக்கும்'' என்று சொல்லப் படுகிறது. மரணத்துக்குப் பின் தீர்ப்புக் கூறுகிற கடவுள் இருக்கக் கூடும் என்ற பயம் என்ருலும் பாப்பரசருக்கும் ரோம் குரியாயி சபைக்கும் உண்டு. அழிவு என்னும் சூனியவாதக் கொள்கையில் கிரெம்ளினுக்கு விசுவாசம் உண்டு; எனவே, வத்திக்கானுக்குள்ள மனச் சாட்சியென்பது கிரெம்ளினுக்கு கிடையாது. தீவினை செய்யத் தயங்காமையே இத்தகைய உள்ளங்களின் முக்கிய குணதிசயமாகும்.

அவர்களுக்குக் கட்சியே முதலிடம் பெறும். இவர்களை யன்றிக் கட்கியென்று யார்? 'அரசுயாது? நாமே யரசு' எனக் கூறிய பிரெஞ்சு மன்னனைப் போன்று அவர்களே கட்சியாவர். அதிகாரத்திலிருந்து சொகுசு பிறக்குமென மனிதசரித்திரம் காட்டியுள்ளது. தன்னைப் பின்பற்றுகிறவர்களிலும் பார்க்கக் கூடிய சொகுசையே யொவ்வொரு அதிகாரியும் முதற்கோருகிருன். காலஞ் செல்ல, அதிகாரத்தின் பயனுகக் கூடுதலான சொகுசும் இறுதியில் பகட்டும் சுகபோகமும் கிடைக்கின்றன. தொழிலாளர் சமூகம் என்றழைக்கப்படும் ஒன்றைப்பற்றிப் பேசும் பொழுது, முதலாளிகளைப்போல் தாமும் சொகுசில் வாழ்கிருர்களென்பதைக் காட்டத் துணியமாட்டார்கள். முதலாளித்துவ புதினப்பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் முதலாளிகளின் சொகுசான மாளிகைகளைப் பற்றியும், பூங்காக்களைப்பற்றியும் நேரப்போக்குச் களியாட்டங்களைப் பற்றியும்

எப்பொழுதும் கூறிக்கொண்டே யிருக்கின்றன. மாக்ஸிய சமுதாயத்தில், கிரெம்ளின் பிரபுகள் பகட்டும் அதிகாரமும் வாய்ந்தவர்களாய் வாழ்ந்தபோதிலும், எவ்வித விளம்பரப் படுத்துதலையும் வெறுக்கிருர்கள். எனவே, நன்ருகக் காவல் செய்யப்பட்ட பிரதேசங்களில், எவராலும் இவரது வாழ்க்கை முறைகளையறிய முடியாதவகையில், வாழ்கின்றனர். இரகசியமே யவரது வாழ்க்கை நெறியாகும்.

ஏழையின் நண்பன் என்ற முறையில் ஒரு வெளிவேடம் பூண்ட சீவியத்தை நடாத்த வேண்டியிருக்கிறது. பொது மக்கள் முன்னிலையில், தொழிலாளர் நலனுக்காகச் சேவை செய்யும் ஏழைத் தொழிலாளர் போல் நடிக்கவேண்டும். அந்தரங்கத்தில் அதியுன்னத சொகுசில் வாழ்கின்ருர்கள். உச்சியிலிருக்கும் கிரெம்ளின் எஜமயனர் பெறும் சம்பளம், அமெரிக்க லட்சாதிபதிகள் வரிகொடுத்தபின் பெறும் வருமானத்திலும் எவ்வளவோ மடங்கு கூடின தொகையாகும். இப்படியான, இருமுறைச் சீவியம் உள்ளத்தையே நேர்மையற்றதாக்குகிறது. இது, மக்களின் அறியாமையைத் தன்னயத்துக்காகப் பயன்படுத்துதலே யொழிய வேறெதுவுமில்லை. தமக்குக்கிடைத்த அதிகாரத்தையிப் பொழுது இழந்து விடாதிருக்கக் கட்சி யின்றியமையாதது. ருஷ்யாவில் 60 லட்சத்தினர் கம்யூனிஸக் கட்சியிலுள்ளனர், எனக் கணக்கிடப்படுகிறது. தங்களுடைய கீழ்ப்படிவுக்கும் உழைப்புக்கும், கட்சியதிபதிகளின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்குத்தாம் காண்பிக்கும் ஆர்வத்துக்கும் பதிலாக ஒரு அளவு கணிப்பைக் கட்சியங்கத்தினர் எதிர்பார்க்கின்றனர். எனவே, அவர்களுக்குரிய ஊதியம், சலுகைகள், உரிமைகள், செலவுகளெல்லாம் தொழிலாளர் முயற்சியினுல் கிடைக்கும் மிதமிஞ்சிய லாபத்திலிருந்தே கொடுக்கபடவேண்டும்.

கட்சியங்கத்தினர், பொதுமக்கள், சுற்றிவர நடைபெறுவன, எல்லாவற்றிலுமே ஒரு கட்டுப்பாடு இருத்தல் வேண்டும். எனவே, கிரெம்ளின் பிரபுகள் தமது இரகசிய ஒற்றர் முறையை ஏற்படுத்தியிருக் கின்றனர்.— அதுதான் எல்லாராலும் அஞ்சப்படுகிற இரகசியப் பொலிஸ். அவர்களைப் பற்றிய தெல்லாம் இரகசியமாக இருத்தலால் யார் ஒற்றன் என்பது எவர்க்கும் தெரியாது. ஒரு ஒற்றனுக்கு மற்ற ஒற்றன் யார் என்பதுமே தெரியாது. எண்களைக் கொண்டே யிரகசியப் பொலிசாரை யறிந்துகொள்வார்கள். இரகசியப் பொலிஸில் 10 லட்சத்துக்கு மேற்பட்டோர்

கடமையாற்றுகிறார்க ளெனக்கணக்கிடப் பட்டது. இதனு லேற்படும் செலவுப் பணமும் மிதமிஞ்சிய லாபத்திலிருந்தே எடுக்கப்படுகின்றது.

நாகரிகமடைந்த மற்றைய நாடுகளிலுள்ளது போன்று, வாகனப்போக்கு வரத்தைக் கட்டுப்படுத்தவும் பெரிய எஜமானரைக் கௌரவிக்கவும், சமூகத்தில் அமைதியை நிலைநாட்டவும், நாகரிகமடைந்த பிறநாடுகளிற் பொலிஸ் படையினர் செய்யும் மற்றக்கடமைகளை யாற்றுவதற்காக வும் ஒரு பொலிஸ் படையினர் உண்டு. இப்படை யேறக் குறைய 5 லட்சத்தினரைக் கொண்டது. இதுவும் மித மிஞ்சிய லாபத்திலிருந்தே பணத்தைப் பெறுகின்றது.

முதலாளிகள் தமது அரசையழிக்க முற்பட்டிருக்கிறார்க ளெனக் கிரெம்ளின் பிரபுகள் தொழிலாளருக்கு எப்பொழு தும் கூறிக்கொண்டே யிருக்கின்றனர். அது உண்மையா யிருக்கலாம். எனவே தம்மையும் தம்மைச் சார்ந்தோரையும் காப்பாற்றுவதற்காக ஒரு இராணுவப்படை, கடற்படை, ஆகாயப்படையாகியன அத்தியாவசியமானவை. மேலும், ரூஷ்யாவிலும் அதைச் சார்ந்த நாடுகளிலும் உள்நாட்டுப் புரட்சியையடக்குவதற்கு ஒரு பெரிய இராணுவத்தை வைத்திருக்க வேண்டும். ரூஷ்யாவின் கம்யூனிஸ இராணுவத்தில் 1 கோடிக்கும் $1\frac{1}{2}$ கோடிக்குமிடையே யுத்த வீரர் உண்டெனக் கணிக்கப்பட்டது.

அதிகாரத்திலுள்ளவர்கள் தங்கள் முக்கியத்துவத்தை மற்றவர்களுக்குப் பறைசாற்றுதல் மனித இயற்கை. இக் குணத்தைப் பொறுத்தளவில், 'பிரமிட்' கோபுரங்களைக் கட்டியெழுப்பிய ஆதிகால எகிப்திய அரசர், தாஜ்மகாலைக் கட்டிய இந்திய முகம்மதிய அரசர், மாபெரும் கட்டிடங் களை யெழுப்பிய ஆதிகாலத்துத் தற்பெருமை பிடித்த அரசர், ஆகியோரைப் போன்றவரே கிரெம்ளின் பிரபுக்கள்.

ஆகாய வெளியினுள் மனிதனை முதன் முதல் அனுப்புவ தற்காகக் கிரெம்ளின் பிரபுகள் பிரமாண்டமான அளவு பணத்தைச் செலவழித்தனர். ஜலவாயுக் குண்டு, அணு குண்டு, ஏவாயுதம் ஆகியவற்றிலும் மிகுதியாகப் பணத் தைச் செலவழித்தனர். இந்தப் பரிசோதனைகளுக்கெல் லாம் மிதமிஞ்சிய லாபத்திலிருந்தே பணத்தைப் பெற்றனர்.

ருஷ்யாவில் இன்னுமொரு பொருளாதாரப் பிரச்சினை யெழுந்திருக்கிறது. பெரிய இயந்திரங்களை உற்பத்தி செய்வதற்காக நிறுவப்பட்ட தொழிற்சாலைகள், ருஷ்யா வின் இயந்திர தேவைகள் பூர்த்தியாக்கப் பட்டபிறகும், நடாத்தப்பட வேண்டியிருக்கிறது. விற்கப்பட்ட இயந்திரங்கள் பழுதடைந்ததும் புதிய இயந்திரங்கள் தேவையானதால் தொழிற்சாலைகளை மூட முடியாது. எனவே, போதிய இயந்திரங்கள் இருந்தபோதிலும், தொழிற்சாலைகள் உற்பத்தி செய்துகொண்டேயிருக்க வேண்டும். இதனால், ருஷ்யாவுக்கு வெளியே சந்தைகளைத் தேடவேண்டும். முதலாளித்துவமுறையில் ஒரு பொருள் கிடைக்கும் அளவு, அதற்கு உள்ள கிராக்கி, வேறு பொருளி னால் ஏற்படும் போட்டி முதலியன அப் பொருளின் விலையைத் தீர்மானிப்பதில் முக்கிய இடம் பெறுவனவாகும். மாக்ஸிய சமுதாயத்தில், பொருட்களை உற்பத்தி செய்வ தால் ஏற்படும் செலவு முக்கியமானதல்ல. தேவையான தையுற்பத்தி செய்தலே முக்கியமானது. தர்க்கரீதியில் இப் பிரமாணத்தைக் கொண்டு சென்றால், "தாய்த் தொழிற் சாலை" உற்பத்தி செய்தலை நிறுத்தவேண்டும். இப்படிச் செய்யின், தொழிலாளர் வேலையிலிருந்து நீக்கப்படுவார்; அவர்கள் புதிய தொழில் தேடவேண்டும். அதோடு, முன்னைய தொழிற்சாலைக்குத் தேவைப்பட்ட தொழில் நுட்பங்களை மறந்து, தொழிற்சாலை திரும்ப ஆரம்பிக்கும் பொழுது, அவற்றைத் திரும்பவும் பயிலவேண்டி வரும்.

ஆகவே, வெளிநாடுகளில் சந்தைகளைத் தேடுவ தெனக் கிரெம்ளின் பிரபுகள் தீர்மானித்தனர். முதலாளித்துவ நாடுகளில் இருந்துவரும் பொருள்கள் மிகமலிவாயும் நல்லதாயுமிருப்பதால், தனது பொருள்களை இன்னும் மலிவாக விற்றாற்தான் ருஷ்யா பொருள்களை விற்கமுடியும். உற்பத்திச் செலவு எப்படியிருந்தாலும், தொழிற்சாலைகளில் வேலை நடக்கவேண்டும் என்பதற்காக, உற்பத்தி செய்யப்பட்ட பொருள்கள், வெளி நாடுகளிற் குறைந்த விலைக்கு விற்கப் படுகின்றன. இதனாலேற்படும் பெரும் நட்டமும் அரசாங்கத்தின் மேல் போடப் பட்டு, ருஷ்ய தொழிலாளரின் மிதமிஞ்சிய லாபம் இதையுந்தாங்குகிறது.

ருஷ்யாவின் சனத் தொகை 20 கோடியெனக் கொண்டு, கட்சியங்கத்தினர், இரகசியப் பொலிஸ், சாதாரண பொலிஸ், இராணுவம், கடற்படை, ஆகாயப்படை முதலியன 2 கோடியெனக் கொண்டால் 1 மனிதன் 10

தொழிலாளரின் மிதமிஞ்சிய லாபத்திற் சீவிக்கிறன் என்ற விகிதத்தைப் பெறலாம். பொய்ப் புழுகு என்ற குற்றச் சாட்டிலிருந்து தப்புமுகமாக 1: 20 என்ற விகிதத்தைக் கொள்வோம். இப்படிக் கொண்டாலும், முதலாளித்துவ சமூகத்தில் தொழிலாளருக்குள்ள கஷ்டத்திலும், இங்கே கூடுதலான கஷ்டம் உண்டு.

இலங்கை போன்ற தெ. கி. ஆசிய நாடொன்றை எடுத்துக் கொள்வோம். இலங்கை 10 வருடங்களுக்கு முன்பு பாதி சுதந்திரமும், பாதி குடியேற்ற நாட்டுப் பொருளாதாரமும் நிலவிய முதலாளித்துவ நாடாயிருந்தது. சுமார் 20,000 பேர் வருமான வரி செலுத்தும் முதலாளிகளாயிருந்தனர். அப்பொழுது சனத்தொகை 80 லட்சம். கடற்படை, ஆகாயப்படை, இராணுவப் படை, பொலிஸ் முதலியன 10,000 பேரைக் கொண்டிருந்தன. இந்த 30,000 பேரும் 7,970,000 பேரின் மிதமிஞ்சிய லாபத்திற் சீவித்தனர். இதன் விகிதம் 1 க்கு 265 ஆகும். வேறு விதமாகக் கூறின் 265 பேரின் மிதமிஞ்சிய லாபத்தை ஒருவர் அனுபவிக்கிறர். எனவே தொழிலாளர் மீதுள்ள பாரம் குறைவாக இருக்கிறது. இத்தகைய சமுதாயத்தில் வாழும் தொழிலாளர், மிதமிஞ்சிய லாபத்தை நம்பிப்பலர் வாழும் சமுதாயத்தில் வாழ்பவரிலும் பார்க்க எவ்வளவோ கூடிய சந்தோஷமாக வாழ்கிறர்கள்.

முன்பு கூறப்பட்ட 10 தொழிலாளரின் உதாரணத்தை யின்னுமொரு முறை கவனிப்போம். மற்ற 9 தொழிலாளரினதும் வேலையைத்திட்டமிட்டு மேற்பார்வையிடும் 10வது தொழிலாளி, அவர்களை 7 ரூ. பெறுமதியான தொழிலைச் செய்யுமாறு நெருக்குகிறன். இந்தப் பத்தாவது தொழிலாளி வகுப்பு 11,12 ஆகப் பெருகிக் கொண்டே போகிறது. எனவே, 9 தொழிலாளரும் நுகரும் பொருள்களை 10, 11, 12 ஆகிய மேற்பார்வையாளர் வகுப்பு விழுங்குவதைத் தடுக்கமுடியாது; தொழிலாளர் நாளொன்றுக்குத் தாம் பெறும் 4 ரூபாவில்தான் சீவிக்க வேண்டி நேரிடுகிறது. இந்தப் பத்தாவது மேற்பார்வையாளர் வகுப்புத் தமக்கு இன்னும் இன்னும் உயர்ந்த வாழ்க்கைத் தரத்தைக் கோரும் கொள்ளைக்காரர் கூட்டமாகும்.

உலகின் முதலாவது மாக்ஸிய அரசான ரூஷ்யாவில் நடந்தது இதுவே. மாக்ஸிய அரசைச் சனநாயக ஆட்சி முறையாக அமைக்க முடியாத காரியமென்று ஸ்டாலின் கண்டான். எனவே, மத்திய காலத்து வத்திக்கான் முறையைப் பின்பற்றினன். தொழிலாளரைக் கொண்டு நாளொன்றுக்கு 7 ரூ. பெறுமதியான தொழிலைச் செய்விப்பதற்காக ஸ்டாலின் மக்களை வதை செய்யும் மறியல் முகாம்களை யமைத்தான். அவனது காலத்தில் 140 லட்சம் தொழிலாளர் சம்பளம் எதுவுமின்றித் தவிட்டுப்பாணையும் வெந்நீரையும் அருந்திக் கொண்டு காலையிருந்து மாலைவரை தொழில் செய்தனரெனக் கூறப்படுகிறது. இந்தத் தொழில் முகாம்களிலிருந்த மறியற்காரர்களின் கண்ணீர், வியர்வை, உழைப்பு ஆகியவற்றின் மேலே, ரூஷ்ய முன்னேற்றத்தின் அத்திவாரம் கூட்டப்பட்டது. ஒவ்வொரு பெரிய நகருக் கருகாமையிலும் கடினமான வேலைகளெல்லாவற்றையும் செய்வதற்காக ஒரு முகாம் அமைக்கப்பட்டது. ரூஷ்ய மறியல் முகாம்களுக்கு வெளியேயிருக்கும் தொழிலாளர் சரிவர வேலை செய்வதைக் கணிப்பதற்காக, தொழிற்சாலைகளிலும், வயல்களிலும் ஆயுதந்தாங்கிய காவலர் நின்று மேற்பாவையிட்டனர். வரவரக் கூடுதலாக வேலை செய்யும்படி தொழிலாளரைக் கட்டாயப்படுத்துவதற்காக ஸ்டாக்ஞேவ் முறை புகுத்தப் பட்டது. ஒரு தொழிலாளி சரியான நேரத்துக்கு வேலைக்குப் போகாவிட்டால் அல்லது நன்ருகா வேலை செய்யாது விட்டால், அவனது உணவுப் பங்கீடு குறைக்கப்படும்; சிலர் பட்டினியால் இறந்துமிருக்கின்றனர். எல்லாராலும் அஞ்சப்படும் இரகசியப் பொலிஸை ஸ்டாலின் உண்டாக்கினுர். தொழிற்குறைவு வெகுமதிகளைப் பெற்றுப் புதினப்பத்திரிகைகளில் வீரஞகத் திகழ்வதற்காகப் பிள்ளைகள் பெற்ருரைக் காட்டிக் கொடுத்தனர். மக்கள் செய்வன எல்லாவற்றையும் வேவுபார்த்துக் கட்டுப்படுத்தினர். தாம் பாடுபட்டுத் தேடிய தானியங்களை ஒழித்துவைத்ததற்காக மட்டுமே 60 லட்சம் 'குலாக்' மக்களை ஸ்டாலின் அழித்தான். மக்கள் புரட்சி செய்யாமலிருப்பதற்காக, லட்சக்கணக்கான மக்களை தமது வீடுகளிலிருந்து அகற்றி வேறு இடங்களுக்கு அனுப்பினுன். இரண்டாவது உலகயுத்தத்தின் பிறகு, நாடுகளைத் தனக்குச் சார்ந்த நாடுகளெனத் தன்னேடு இணைக்க ரூஷ்யாவுக்கு முடிந்தது. மனித சரித்திரத்தில், யதேச்சதிகார அரசர் செய்தது போலவே, அவர்களையவன் ஈவிரக்கமின்றித் தன்னயத்துக்காகப் பாவித்தான்.

முகம்மதிய அரசன் ஜெங்கிஸ்கான் அல்லாவின் பெயரில் லட்சக்கணக்கான இந்துக்களைக் கொன்முன்; யேசு இரட்சகரின் பேரில் போர்த்துக்கேயரும் ஸ்பானியரும் முறையே தென் கிழக்கு ஆசியரையும் 'இங்காஸ்' சாதியினரையும் கொன்றனர்; ஆனுல், சோஷலிஸத்தை நிலைநாட்டும் சரித்திர தேவைக்காக ஸ்டாலின் கொலைகள் புரிந்தான். ஐரோப்பாவிலிருந்து யூதரைக்கலைப்பதையே இலட்சியமாகக் கொண்ட ஹிட்லர் என்னும் பித்தன் கிட்டத்தட்ட இவர்களை ஒத்திருந்தான்.

ஸ்டாலின் தனது கட்சியங்கத்தவர் மீதும் தன் கொடிய கவனத்தைச் செலுத்தினுன். புரட்சி காலத்திற் தனது சகாக்களாயிருந்தவர்களில் 75 சத விகிதத்தினரை அவன் தீர்த்துக்கட்டினுன். தனது காலடியில் நடுங்கி நின்று முகஸ்துதி செலுத்துவோரை மட்டுமே சீவிப்பதற்கு அனுமதித்தான்.

எனவே யின்று, கிரெம்ளினில் அதிகாரிகளாயிருப்போர், ஸ்டாலினுல் சீவிப்பதற்கு அனுமதிக்கப்பட்டவர்களே. ஸ்டாலின் இறந்தபின் முதலாவதாக அவனைப்பற்றிய உண்மையை வெளிப்படுத்தியவன் குருஷேவ் என்ற தற்போதைய அதிபனே. இன்று ஸ்டாலின் என்ற பெயர் ருஷ்யாவிலிருந்து அகற்றப்பட்டு விட்டது. ஆனுல் ஸ்டாலின் அமைத்த முறை இன்னும் நிலவுகிறது; பொருளாதார முறை காரணமாக அதை மாற்றமுடியாது. தனது உரிமைகளில் ஏதும் குறைவதைக் கட்சி பொறுக்க மாட்டாது. கட்சியின் சிலாக்கியங்கள், உரிமைகள், வருமானம் முதலியவற்றைக் குறைக்க முற்படும் எத்தலைவனும் நீக்கப்படுவான். எனவே, ஆக்கியவனையே யழிக்கும் கொரூரபிராணியாக ருஷ்யாவின் மாக்ஸிய கட்சியிருக்கிறது. அதன் நியமத்திலிருந்து எவனும் விலகமுடியாது. விலகினுல், எக்கஷ்டம் ஏற்பட்டபோதிலும் அவன் அழிக்கப்படுவான். கட்சி ஒழுங்கையேயெல்லாரும் பின்பற்றவேண்டும். வத்திக்கானைப்போல் தாம் உண்டாக்கிய பொய்களையுண்மைப் படுத்தும்படி சீவிக்க நேரிடுகிறது.

கட்சி, இரகசியப் பொலிஸ், சாதாரண பொலிஸ், இராணுவப் படைகள் ஆகியவற்றை இன்றைய கிரெம்ளின் திருப்திப்படுத்திவிட்டது; ருஷ்யத் தொழிலாளியைத் திருப்திப்

படுத்த வேண்டிய பிரச்சினையிருக்கிறது. கிரெம்ளின் எஜமானர் ஜோதியொன்றைக் கண்டனர்—தாங்களால் வெறுக்கப்பட்ட ஸ்டாலினே மூட்டிவைத்த ஜோதி—சார்புநாடுகள்.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் முன்னைய நூற்றுண்டுகளில் தென்கிழக்காசியாவிலும் ஆபிரிக்காவிலும் தாபித்த முதலாளித்துவ சாம்ராச்சிய முறையை ஏன் பின்பற்றக் கூடாது? மேற்கத்திய நாடுகள் தமது வாழ்க்கைத்தரத்தை எவ்விதம் உயர்த்தின? மேற்கத்திய தொழிலாளர் தமது வாழ்க்கை நிலைபரத்தை எப்படித் திருத்திஞர்கள்? தென் கிழக்காசியாவிலும் ஆபிரிக்காவிலும் குடியேற்ற நாடுகள் அமைத்துத்தான் இவற்றையெல்லாம் சாதித்தனர்.

எனவே எங்கள் தொழிலாளருக்குத் தேவையான நுகர்வுப் பொருட்களை வெளிநாட்டுத் தொழிலாளரைக் கொண்டு மலிவாகச் செய்வித்தால், எங்கள் பிரச்சினை தீர்ந்துவிடும் என்கு கிரெம்ளின் சிந்தித்தது. கிரெம்ளினது கண்கள் தென்கிழக் காசியாவையும் ஆபிரிக்காவையும் நோக்கின. அவர்களது சகாவான சீஞ இடைஞ்சலாக இருக்கத் தொடங்கியது. எனவே தற்காலீக ஏற்பாடாகத் திபெத்துத் தொடக்கம் இந்தோனீசியாவரை சீஞவின் பொறுப்பில் விடப்பட்டது.

மேற்கத்திய நாடுகள் எப்படித் தென் கிழக்காசிய, ஆபிரிக்க நாடுகளைக் கைப்பற்றினவென்று கிரெம்ளின் சிந்திக்கத் தொடங்கியது. அவர்களது ஐந்தாம் படையினர் யார்? மதம் மாறிய கிறித்தவர்களும் பிபிலிய வேதமுமே. ஐரோப்பியருக்கு ஆபிரிக்கன் ஒருவன் கூறினது உண்மையன்றே! ''எஜமானே, நீங்கள் முதல் முறை எங்கள் தேசத்துக்கு வந்த பொழுது, நீங்கள் பிபிலிய வேதத்தையும் நான் நிலத்தையும் வைத்திருந்தோம்; இப்பொழுதோ எஜமானே, நான் வேதத்தையும் நீங்கள் நிலத்தையும் வைத்திருக்கிறீர்கள்'' என அந்த ஆபிரிக்கன் கூறினன்.

இது மிகச் சுலபம் எனக் கிரெம்ளின் எண்ணியது. தாஸ் கபிற்றலேயும் மாக்ஸியத்தையும் ஏன் விற்கக் கூடாது? ஆபிரிக்கரது சுதந்திரத்தை வற்புறுத்தி மேற்கத்திய நாடுகளைத் துரத்தவும், சுதந்திரம் பெற்ற தென்கிழக்காசிய நாடுகளில் வகுப்புப் போராட்டத்தைப் போதிக்கவும் முற்படுவோம். தென் கிழக்காசிய ஆபிரிக்க மக்கள்

விவேகமும் அனுபவமும் அற்றவர்கள்; எதையும் நம்பி விடுவார்கள்; தொடக்கத்திலிருந்தே போதிய பணமும் வேடிக்கையும் அளித்தால் அவர்களை நம்பவைத்துவிடலாம்.

இத்திட்டத்தை அமுலுக்குக் கொண்டு வருவதற்கு வத்திக்க சாம்ராச்சியத்தின் அனுபவத்திலும் சிறந்த ஆசான் வேறில்லை. எனவே, அவர்கள் வத்திக்கான் முறைகளை மிகநுணுக்கமாகப் பின்பற்றுகிறார்கள். தென் கிழக்காசிய ஆபிரிக்க மொழிகளை எழுதவும் வாசிக்கவும் பயில்வதற்காக மொஸ்கோவில் பாடசாலைகள் அமைக்கின்றனர். இப்பாடசாலைகள், மாக்ஸியம், சர்வதேச வகுப்புப் போராட்டம் என்பனவற்றைப் பற்றி இம் மொழிகளிற் பிரசார இலக்கியங்களை வெளியிட வேண்டும். தனது சாம்ராச்சியத்தை விஸ்தரிப்பதற்காக ரோமன் கிறிஸ்தவ போதனைகளைப் பரப்ப இம்முறையை வத்திக்கான் நூற்றாண்டுகளுக்கு மேலாகக் கையாண்டு வருகிறது.

தென் கிழக்காசியாவிலும் ஆபிரிக்காவிலும் தாம் பயிற்றும் கையாட்களின் பட்டியல் கிரெம்ளினிடம் உண்டு. அவர்கள் எவ்வளவு தூரம் நம்பத்தக்கவர்கள் என்பதையும் இரகசியமாக அறிந்து கொள்கிறது. தென் கிழக்காசிய ஆபிரிக்க நாட்டுக் கம்யூனிஸ்டுக் கட்சித் தலைவர் கிரெம்ளினின் மரியாதைக்குரிய விருந்தாளிகளாவர். அவர்கள் டாம்பீகமாக வரவேற்கப்பட்டு, அவர்களுக்கு உபசாரமும், விருந்தும், வெகுமதிகளும் அளிக்கப்படுகின்றன. தென் கிழக்காசிய அறிவிலிகள் தமது நாடுகளுக்குத் திரும்பும் போது தமக்கு விருந்தளித்தவர் உண்மையானவர்களென்றும், தமது நாடுகளின் நவநாகரிகத்துக்குத் தாமே தலைவர் என்றும் நினைக்கின்றனர். சரித்திரத்தில் இடம் பெறக்கூடியதும் தாமே சாதிக்க வேண்டியதுமான ஒரு காரியம் உண்டெனஇவர்கள் எண்ணுகின்றனர். மேலும், தத்தமது நாடுகளில் தாம் சர்வாதிகாரிகள் ஆகலாம் என்னும் ரீதியில் யோசிக்கவும், சுயநலம் இவர்களை உந்துகிறது.

உலகத் தொழிலாளரைக் கார்ல் மாக்ஸ் நேசித்தார். அவர்கள் நலன் கருதி அவர் ஒரு கொள்கையை எழுதினார். ஆனால், இந்திய மகாராஜாக்களையும் அவர்களது குடிகளையும் பாவித்து மலிவான பருத்தி, சீனி, இரும்பு, ரப்பர், தேயிலை, கொப்பரா பெறுவதற்காகப் பிருத்தானியர் பின்பற்றிய கொள்கையைப் போன்று, வேறு நாடுகளை அடிமைப் படுத்தி அந்நாட்டுத்தொழிலாளரை ருஷ்யத் தொழிலாளரின்

நன்மைக்காகச் சுரண்டினுற்ருன், உலகில் முதல் முதலாகத் தோன்றிய மாக்ஸிய அரசு தொழிலாளரின் நிலையைச் செம்மையாக்க முடியும் என்று பிற்காலச் சரித்திரம் நிரூபித்து விட்டது. மேலும், ருஷ்யத் தொழிற்சாலைகளில் வேலை நடக்க வேண்டுமென்ருல் மிதமிஞ்சும் அளவுக்குச் சந்தைகள் தேவை; தன்னைச் சார்ந்த நாடுகளே கூடுதலான லாபத்தைக் கொடுப்பன—அப்படியானுல் பிரித்தானியாவும் ஐரோப்பிய நாடுகளும் தமது குடியேற்ற நடுகளிற் செய்தது போல ருஷ்யாவும் இங்கே மலிவாக வாங்கலாம், கூடுதலான விலைக்கு விற்கலாம். சரித்திர சம்பவங்கள் திரும்பவும் நடைபொறுகின்றன, ஆனுல் வேறு பெயர்களுடன்.

கிரெம்ளின் எஜமானர் அதிகார பீடத்திலிருப்பதற்கு, ருஷ்யத் தொழிலாளருக்கு நல்ல வாழ்க்கைத் தரமளிப்பது அவசியம், அல்லாவிடின் 1918 தொடங்கி அவர்கள் செய்து வந்த உறுதிகளெல்லாம் பொய்த்துவிடும்; அத்துடன் அவர்களுடைய கொள்கைகளிலும் உற்சாகத்தையும் தொழிலாளர் இழந்து விடுவார்கள். எனவே, இந்தக் களைப்புத்தரும் பொறுப்பைத் தன்னைச் சார்ந்த நாடுகள் மீது சுமத்தி விடுதல் கூடின பயனளிக்கும். மாக்ஸியத்தின் ''தாய் சபையையும்'' பாப்பாண்டவரையும், கர்தினுல்களையும் ஆதிக்கத்திலும் சொகுசிலும் கீர்த்தியிலும் வைத்திருப்பதற்காக மற்றைய நாட்டுத் தொழிலாளர் வியர்வை சிந்தட்டும்; ஒரு நாடு சார்பு நாடாகியதும் கிரெம்ளின் முதலில் செய்வது யாதெனில் அங்கேயுள்ள அறிஞரையும் தேசபக்தரையும் அழிப்பதே. இதனுல் மாக்ஸிய வாதம், வெற்றியீட்டி விட்டதென்று உலகத்து மற்றைய தொழிலாளரை நம்பவைக்கலாம்.

தென்கிழக் காசியாவையும் ஆபிரிக்காவையும் முதலில் கைப்பற்றுவதே கிரெம்ளினின் திட்டமாகும். திபெத்துத் தொடங்கி இந்தோனீசியா வரையுள்ள இடத்தைச் சீனுவின் பொறுப்பில் விட்டிருக்கின்றது. இத்திட்டங்கள் நிறைவேறினதும், முழு உலகத்தையுமே கைப்பற்றும் போராட்டம் எழும்.

எனவே, தொழிலாளர் இன்னுமொரு முறை ஏமாற்றப் பட்டுவிட்டனர். தொழிலாளரின் பெயரில், மனித சரித்திரத்திலே மிகப் பெரிய மோசடிக்குத் தொழிலாளரும் மற்றையோரும் ஆளாக்கப்பட்டனர்.

சாம்ராச்சியத்தை விஸ்தரித்தல், ருஷ்யாவுக்கும் சீனுவுக்கும் ஒரு பொருளாதார அவசியமாகும்; அல்லாவிடின் கிரெம்ளின், பீக்கிங் எஜமானர் தரைமட்டமாகிவிட நேரிடும். இந்த மோசடி வெளிப்பட்டுவிடுவதையே இந்த எஜமானர் அதிகமாக அஞ்சுகின்றனர்.

இந்த பகுதியிற் கூறப்பட்டதை யின்னுமொரு முறை ஆராய்தல் நன்று. கார்ல் மாக்ஸ் மிதமிஞ்சிய லாபம் பற்றிய கொள்கையைப் பிரலாபித்த பொழுது, உலகத்தின் அந்தப் பாகத்தில்—இரத்தம் சிந்தும் புரட்சிமூலம் சுரண்டல் செய்யும் முதலாளிகளைத் தொழிலாளர் வீழ்த்த வேண்டுமென்ற கார்ல் மாக்ஸின் புத்திமதிப்படி நடக்காத மேற்கு ஐரோப்பாவிலும், அமெரிக்காவிலும்—என்ன நடந்தது என்பதை ஆராய்வோம்.

அநேக மேற்கு ஐரோப்பிய நாடுகளுக்கு தென் கிழக்காசியாவிலோ அல்லது ஆபிரிக்காவிலோ ஏதோனுமொரு குடியேற்ற நாடு இருந்தது. ஸ்காந்துனேவிய நாடுகளையும் சிறிய சுவிற்சர்லாந்தையுந் தவிர மற்ற எல்லா நாடுகளுக்கும் தங்கள் தாய் நாட்டுக்குச் செல்வம் ஈட்டும் நோக்கத்துடன் சுரண்டத்தக்க பிரதேசங்கள் ஏதோ இருந்தன. நாடுகளற்ற சிறிய ஐரோப்பிய நாடுகள் குடியேற்ற நாடுகளுடன் வியாபாரம் நடத்துவதை மற்ற ஐரோப்பிய நாடுகள் அனுமதித்தன.

எனவே தென் கிழக்காசியாவையும் ஆபிரிக்காவையும் சுரண்டுவதில், ஐரோப்பியருக்குள் ஒரு சகோதரத்துவம் ஏற்பட்டது.

இவர்களுள், அதிகமானோர் தாம் கிறிஸ்தவரெனப் பறை சாற்றினர். "கடவுள் எல்லாரையும் சமமாகவே படைத்தார்" என்று கோயிற் பிரசங்க மேடைகளிற் கூறின போதிலும், வியாபார ஸ்தலங்களிலும், அரசாங்க உத்தியோகங்களிலும் நீதி ஸ்தலங்களிலும். நியாயத்தீர்ப்புகளிலும், "கடவுள் ஒரு சிலரை மற்றவர்களிலும் பெரியவராகச் சிருஷ்டித்தார்". என்ற கொள்கையைப் பின்பற்றினர். அவர்கள் அதிகார முறையில், நிறத்தவர் மீது வெள்ளையர் ஆதிக்கம் செலுத்துவது முதலிடம் பெற்றது. தென் கிழக்காசியாவையும் ஆபிரிக்காவையும் வெளிப்படையாகச் சுரண்டுதலும், இரக்கமின்மையும் தான் ஐரோப்பிய யதேச் சாதிகாரிகளின் முதன்மை பெற்ற கொள்கையா

யிருந்தது. பேராசையும், இன்னும் கூடிய பேராசையும் தமது செயலால் மக்களுக்கு ஏற்படும் துன்பத்தைப் பொருட்படுத்தாது தமது நாட்டுக்காகச் செல்வம் சேர்த்தலும் தேச பக்தியின் அறிகுறிகளாக அக்கால ஐரோப்பியராற் கருதப்பட்டன. அத்தகைய வீரர்கள் மீது அக்கால அரசாங்கங்கள் பட்டங்களும் பதவிகளும் வாரிவழங்கின.

அமெரிக்காவில், அமெரிக்கர் மூலபணத்தைத் திரட்டுவதற்கு அத்திவாரமிட்டவர்கள், நீகுரோவ அடிமைகளே. ஆனல், பத்து லட்சத்துக்குக் கூடின அமெரிக்கர் தமது உயிரையே தியாகஞ் செய்த உள்நாட்டு யுத்தம் அடிமைத்தளைகளில் நின்றும் அமெரிக்க நீகுரோவரை விடுவித்தது என்பது அமெரிக்கர் சார்பில் கூறத்தக்கது ஒன்று. சுதந்திர மக்களின் நாடாக அமெரிக்கா கருதப்பட்டது; சிந்தனைக் கட்டுப்பாட்டிற் கடங்காது உள்ளம் சுதந்திரமாக இருக்கும் நாடு; யாத்திரிக குருமார் போன்ற புரொட்டஸ்தாந்து மதத்தினர், வத்திக்கான் சம்ராச்சியத்தினரின் கொடுமைகளுக்கஞ்சியோடிப் புகலிடம் பெற்ற நாடு; தமது அரசியற் கொள்கைகளுக்காக ஐரோப்பாவில் வதைத்கப்பட்டோரெல்லாரும் அமெரிக்காவிற் சரண்புகுந்தனர்.

எனினும் ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் சிந்தனை சுதந்திரத்தை யாதரித்த ஜோன் ஸ்ரீவார்ட்மில், பேக், ரொபிஸ்பியர், டான்தே, றூசோ, ஆபிரகாம் லிங்கன், கார்ல் மாக்ஸ் போன்ருேரும் இன்னும் பலரும் உதித்தனர். புரொட்டாஸ்தாந்துப் போதனைகளும், ரூேம் செனற் சபையின் சனநாயக முறைகளும், கிரேக்க குடியரசு நாடுகளின் சனநாயக முறைகளும் அளித்த முன்மாதிரியினுலும் உற்சாகத்தினுலும் அவர்களின் போதனைகள் எழுந்தன.

இத்தகைய சிந்தனைகளிலிருந்தே அமெரிக்காவிலும் மேற்கு ஐரோப்பாவிலும் சனநாயகம் தோன்றிற்று. தொழிலாள வகுப்பினரின் நலனை ஆதரித்தவர்கள் தோன்றினர். பேர்னுட் ஷோவின் வசை நூல்கள், வேபியன் சோஷலிஸம் (Fabian Socialism) வெவ்வேறு பெயர்களுடன் தொழிற் கட்சிகள் ஆகியவை மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் தோன்றின. இறுதியில் தொழிலாளருக்கு வாக்குரிமை யளிக்கப்பட்டது.

முதலாம் உலக யுத்தத்துக்கு முன் இங்கிலாந்தில் திருமதி ஈ. பாங்கேஸ்ற் என்பவர் தலைமை தாங்கி நடாத்திய, பெண்களுக்கு வாக்குரிமை கோரும் இயக்கம் பயனளித்தது. இங்கிலாந்திலும், பல ஐரோப்பிய நாடுகளிலும் அமெரிக்காவிலும் பெண்களுக்கு வாக்குரிமை யளிக்கப்பட்டது.

தொழிலாள வகுப்பு ஆணுக்கும் பெண்ணுக்கும் வாக்குரிமை யளிக்கப் பட்டதன் பின், மேற்கு ஐரோப்பியாவிலும் அமெரிக்காவிலும் அரசியல் மாற்றங்கள் ஏற்பட்டன. ஏனெனில், சனத்தொகையிற் கூடிய தொகையினர் இவர்களே. அரசியல் வாதிகள் அதிகார பீடத்தில் ஏற வேண்டுமென்றால், இவ்வகுப்பினரை மகிழச் செய்ய வேண்டியிருந்தது. எனவே, ஏழை ஆண்களுக்கும் பெண்களுக்கும் ஏற்கத்தக்கதாக அரசாங்கக் கொள்கைகளை மாற்றியமைக்க வேண்டியிருந்தது.

கார்ல் மாக்ஸ் கூறிய மிதமிஞ்சிய லாபத்தை முதலாளிகள் தம் நலவளர்வுக்காகப் பாவித்துவந்தனர். இப்பொழுது, பாட்டாளி மக்களுக்கு அளிக்கப்பட்ட வாக்குரிமையின் பயனாக அதிகாரத்துக்கு வந்த இந்தப் புதிய அரசியல் வாதிகளின் கையில் இந்த மிதமிஞ்சிய லாபம் இருந்தது. இவர்கள் வாக்காளரைத் திருப்திப் படுத்த வேண்டியிருந்ததால் முதலாளிகளின் மிதமிஞ்சிய லாபத்தில் வரி போட்டு, இப்பணத்தைப் பாட்டாளிமக்களுக்கு வாழ்வு நலன்கள் அளிப்பதற்காகப் பாவித்தனர். மலிவான கல்வி, சேமலாப நிதி, தொழிலாளருக்கு ஈட்டுப் பணம் அளித்தல், நூல் நிலையங்கள், பூங்காக்கள், விளையாட்டு மைதானங்கள், வைத்திய சாலைகள், மலிவான போக்கு வரவு வசதிகள், வேதனத்துடன் கூடுதலான லீவு நாட்கள், இவையும் இன்னும் பல நன்மைகளும் அளிப்பதில் இப்பணம் செலவழிக்கப் பட்டது.

அரசியற்கட்சி முறை ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் விருத்தியடைந்தது. பொதுவாக ஒவ்வொரு நாட்டிலும் இரண்டு அரசியற் கட்சிகள் தோன்றின; ஒன்று முதலாளித்துவத்தை யாதரிக்கும் வலது சாரிக்கட்சி, மற்றது தொழிலாளரை யாதரிக்கும் இடது சாரிக்கட்சி, தனிமனித சுதந்திரமும் சிந்தனைசக்தியின் சுதந்திரமும் இருக்கவேண்டியவையென்று எல்லாக்கட்சிகளும் நம்பின. எனவே, பொலிஸ் அரசை வெறுத்தன.

சுதந்திரம் அவ்வளவாகப் பேணி வளர்க்கப்பட்டதால், அரசு தனிமனிதர்களின் முயற்சிகளிற் தலையிடத் தொடங்கியது; சட்டத்தின்படி உரிமைகளைக் கொண்டதும், பணம் திரட்டக் கூடியதுமான தொழிலாளர் சங்கங்கள் தொடங்குவதை யனுமதித்தது. வேலை நிறுத்தஞ் செய்தல், தொழிலாளரின் உரிமையெனக் கணிக்கப்பட்டது. சிலவேளைகளில், வேலை நிறுத்தங்கள் அரசாங்கத்தையும் நாட்டின் பொருளாதாரத்தையும் சக்தியற்றுப் போகச் செய்தன.

கால கதியில், நேர்மையற்ற தொழிற் சங்கத்தலைவர்கள், சங்க அங்கத்தவர்களை வஞ்சித்துக் சங்க நிதிகளைத் தமது நலனுக்காகப் பாவித்தும், தமது அதிகாரம், செல்வம், சௌகரியங்கள் ஆகியவற்றைப் பெருக்கிக் கொண்டனர். தொழிற்சங்கம் காரணமாகப் பலர் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கத் தொடங்கினர்; சில வேளைகளில் இவ்விதம் பிரதம மந்திரிகள் தோன்றியதுமுண்டு.

ஐரோப்பாவில் தொழிலாளர் நடாத்திய போராட்டத்தின் எதிரொலி ஐரோப்பிய தேசங்களின் குடியேற்ற நாடுகளிற் கேட்டது. இருதரத்தாரும் ஐரோப்பிய முதலாளிகளாற் சுரண்டப்பட்டு வந்தனர். இப்பொது எதிரியுடன் சண்டை செய்வதற்காக இருசாராரும் ஒன்று சேர்ந்தனர்.

மேலும், தென்கிழக் காசியாவிலும் ஆபிரிக்காவிலுமிருந்து ஐரோப்பிய சர்வ கலாசாலைகளிற் கல்வி பயிலச் சென்ற மாணவர்கள், செலவு செய்ய அதிக பணம் இல்லாத காரணத்தால், ஐரோப்பாவில் வறிய தொழிலாளரது குடும்பங்களோடு சீவிக்கவேண்டி நேரிட்டது. ஐரோப்பிய தொழிலாளர் இயக்கங்களுக்கும் தென்கிழக்காசிய ஆபிரிக்க நாடுகளின் சுதந்திர மோகத்துக்கு மிடையே ஒரு நட்பு வளரத் தொடங்கியது.

தென்கிழக்காசியாவிலும் ஆபிரிக்காவிலுமிருந்து நிறை யௌவனத்திற் சென்ற மாணவர் தமது சிற்றின்ப விருப்பையும், மதிப்பு மோகத்தையும் திருப்தி செய்யத் துடித்தனர். ஆகவே, நிறத்துவேஷத்தடைகளாலும், பணமுடை காரணமாகவும், தமது ஓய்வு நேரங்களைக் கழிப்பதற்காக ஐரோப்பிய பரத்தையருடனும் சமையலறைப் பெண்களுடனும் சகவாசஞ் செய்யவேண்டியிருந்தது.

உலகத்தில் எதுவும் நன்ருகப் பதியக் கூடிய பருவத்தில், முதலாளித்துவ முறையின் அநீதி அவர்களது இளமை உள்ளங்களில் பதிந்தது. அத்துடன் பயிற்றப்பட்ட மாக்ஸிய பிரதிநிதிகள் அவர்களுக்கு மாக்ஸியத்தைப் பற்றிய நூல்களையுங் கொடுத்துதவி, மாக்ஸியத்தின் மேன்மையைப் பற்றியும் நீதியைப்பற்றியும் பிரசங்கங்களும் செய்தனர். ''ஒவ்வொருவனுக்கும் அவனவனது தேவைகளுக்குத் தகுந்தபடி'' என்று கூறினர். இந்த மாணவர்களின் தேவைகளோ பல—முக்கியமாகக் காதலும் பணமும்—. மாக்ஸியப் பிரதிநிதிகள் இந்த மாணவர்களுக்காக ஓய்வு நாட்களில், கம்யூனிஸ நாடுகளிற் சுற்றுப் பிரயாணங்கள் ஒழுங்கு செய்தனர். அங்கே கேளிக்கை, ஆடல், மது என்பவற்றிற்கிடையே மனிதரின் சகோதரத்துவத்தைப் பற்றியும் போதனைகள் நடாத்தினர் மாக்ஸியப் பிதற்றல்களை யளப்பதில் திறமை வாய்ந்தவன் அறிவாளியெனவும், முற் போக்குவாதியெனவும் புகழப்பட்டான்; மாக்ஸியவாதியல்லாதவன் பிற்போக்கு வாதியென இகழப்பட்டான்.

கிரெம்ளின், வத்திக்கானது கொள்கைகளை ஒழுங்காகப் பின்பற்றுகிற தென்பது முன்னே கூறப்பட்டுள்ளது. ''இளமையிற் பிடி'' யென்ற கொள்கை பயனளித்திருக்கிறது. தென்கிழக்காசிய ஆபிரிக்க மாக்ஸியத் தலைவர்களில் அநேகர் ஒரு காலத்தில் இத்தகைய மாணவராயிருந்தவரே. அவர்களது இளம்பருவத்தில் போதிக்கப்பட்டன வற்றை அவர்கள் உள்ளத்தினின்றும் அகற்றமுடியாது. பிள்ளைப் பருவத்தில் ''ரோமன் கத்தோலிக்கனுயிருந்தால், எப்பொழுதும் ரோமன் கத்தோலிக்கனுகவேயிருப்பான்''. என்று வத்திக்கான் கூறுகிறது. மாக்ஸியத்தைப் பொறுத்தளவிலும் இது உண்மை.

மனித வர்க்கத்தின் சகல சிந்தனை இயக்கங்களைப் போன்று மாக்ஸியமும் இரு கூறுகளாகப் பிரிந்து நிற்கின்றது. வத்திக்கானுக்கு எதிராக எழுந்த புரொட்டஸ்தாந்து மதத்தைப் போன்று, கிரெம்ளின் அதிகாரத்துக்கு எதிராக எழுந்தது தான் ரொட்ஸ்கிவாதம். ரொட்ஸ்கிக்கும் ஸ்டாலினுக்குமிடையில் இருந்த நெடுநாட் பகை காரணமாக அது எழுந்தது. ரொட்ஸ்கியவாதம் நிரந்தர

புரட்சியில் நம்பிக்கை வைத்திருப்பதும், ருஷ்ய மாக்ஸியத்தி லும் பார்க்கத் தமது கொள்கை திறமை வாய்ந்தது என்பதைக் கூறுவதற்காகப் பெரிய சொற்களைப் பாவித்தலுமே இரண்டிற்கு மிடையிலுள்ள வித்தியாசங்க ளாகும்.

அதன் தலைமைக் காரியாலயம் பாரிஸில் இருப்பதாகக் கூறப்படுகிறது. ஒரு சக்திவாய்ந்த இயக்கம் என்றளவில் அது ஐரோப்பாவில் மறைந்து விட்டது. எனினும், பழங் காலத்தைய ஐரோப்பிய குடியேற்ற நாடுகளில் இருக்கும் சில அரசியற் கட்சிகளுக்குக் கட்டளைகள் கொடுத்து வருகின்றது. பொதுவாக உலகத்தினர் அதைப் பொருட் படுத்தவில்லை. தாம் ஒரு சர்வதேச இயக்கத்தின் அங்கத்தினரெனத் தென்கிழக் காசிய ரொட்ஸ்கி வாதத்தினர் பெருமிதம் கொள்வர். ஆனால், கம்யூனிஸ்டு களுடன் ஒப்பிட்டுப்பார்த்தால், இவர்கள் குள்ளராகவும் அரைப்பைத்தியங்களாகவும் தென்படுவர்.

தென் கிழக்காசியாவின் சுதந்திர இயக்கத்துக்கு மகாத்மா காந்தி தலைமை தாங்கினார். இந்தியச் சுதந்திரப் போராட்டத்திலே மாபெருந் தீரர் தோன்றினர். இந்தியா விற் தோன்றின தேசீய இயக்கம் தென்கிழக்காசியா முழுவதி லும் பரவிற்று. மகாத்மா காந்தி, நேரு முதலியோர் ஆரம்பித்த ஒத்துழையாமை இயக்கம் பிரித்தானிய அரசின் அத்திவாரத்தையே ஆட்டிவைத்தது.

இரண்டாம் உலகயுத்தம் தோன்றிற்று. தென்கிழக் காசியாவிலுள்ள ஐரோப்பியரின் மங்கோலிய இனக் குடியேற்ற நாடுகள் மீது யப்பான் படையெடுத்து அழித்தது. ஐரோப்பிய அதிகாரமும் கௌரவமும் சீரழியத் தொடங்கின. பிழைசெய்யமாட்டான் என்று கருதப்பட்ட ஐரோப்பியன் வீண்புழுகனைக் காணப்பட் டான். நேருக்கு நேர் சண்டையிலும், துணிவிலும் ஐரோப்பியரிலும் பார்க்கத் திறம்வாய்ந்தோர் யப்பானியர் என்பதை எளிதில் நிரூபித்தனர். அமெரிக்கர் ஹிரோஷிமாவிற் போட்ட அணுகுண்டே யவர்களின் ஊக்கத்தை முறியடித்தது.

சமாதானத்தின் விளைவாக ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் தோன்றிற்று. இங்கிலாந்தில் தொழிற் கட்சியாட்சி பீடத்துக்குவந்தது, தென்கிழக்காசிய நாடுகளுக்குச் சுதந்திரம் வழங்கியது.

இன்றைய உலகத்தின் போராட்டம், ஐ ரோ ப் பி ய தேசத்து அதிகாரிகள் பிடியிலிருந்து ஆபிரிச்கர் தம்மை விடுவித்துக் கொள்வதற்காகச் செய்யும் போராட்டமே.

இந்த ஆபிரிக்கச் சுதந்திர இயக்கத்தை தென் கிழக் காசியன் ஒவ்வொருவனும் ஆதரிக்கின்ருன். ஆச்சரியப் படத்தக்கதாகப் பொதுநலவமைப்பு நாடுகளும் ஆதரவு அளிக்கின்றன.

பிரித்தானிய ஆட்சியில் இருந்த தென் கிழக்காசிய நாடுகள் இங்கிலாந்தில் நடை முறையிலிருந்த சனநாயக ஆட்சி முறையைக் கைப்பிடித்தனர். தேர்தல்கள் நடாத்தப் பட்டன; பாராளுமன்றங்கள் நிறுவப்பட்டன—அரசியற் கட்சிகளும் எழுந்தன.

மேற்கு ஐரோப்பாவிற் பாட்டாளி மக்களுக்கு அதிகாரம் கூடுதலாகக் கொடுக்கப்பட்டதும், அரசியலிலும் பொருளா தாரத்திலும் கொள்கை மாற்றம் அடைந்தது. சோஷலிஸம் என்ருல் தொழிலாளிக்குக் கூடுதலான வசதிகளும் ஓய்வும் கொடுப்பதோடு பல கைத் தொழில்கள் தேசீயமயமாக்கப் படுதல் எனவும் கருதப்பட்டது. எனவே ஐரோப்பிய நாடுகள் பல வற்றில் இருவகைக் கைத்தொழில்கள் எழுந்தன. ஒன்று அரசாங்கத்திஞல் நடாத்தப்படுவது, மற்றது தனியார் முயற்சியிஞல் நடாத்தப்படுவது; ஒன்று பொது மக்க்ள் பகுதி, மற்றது தனியார் பகுதி, இதுவே தற்கால சோஷலிஸம் என்று அழைக்கப்படுகிறது.

இன்னும் தென் கிழக்காசியாவுக்கே சொந்தமான அரசியல், பொருளாதாரக் கொள்கைகள் தோன்றவில்லை. இவற்றிற்கு ஐரோப்பியர், அமெரிக்கர், அல்லது ருஷ்யரையே நம்பியிருக்கின்றனர். தென் கிழக்காசிய மக்கள் தென் கிழக்காசிய உடைகளாற் தமது உடல்களைப் போர்த்துக் கொண்ட போதிலும் மேல் நாட்டாரின் முறைகளையே கண்மூடித்தனமாகப் பின்பற்றுகிருர்கள்.

இப்படியே, பொதுமக்கள் பகுதி, தனியார்ப்பகுதி, பாராளுமன்றம், அரசியற் கட்சி முறை, தொழிற் சங்கங்கள் என்னும் கருத்துக்கள் தென் கிழக்காசியவுக்குட் புகுந்தன.

உள்ளத்தின் சுதந்திரத்தையும் சமூக நீதியையும் ஆதரிக்கும் இக்கொள்கைகள் மேற்கு ஐரோப்பியரின் கொள்கைகளாகும்.

ஆனுல், தென் கிழக்காசியாவுக்கு ஐரோப்பிய நகரங்களிலிருந்து ஏமாற்றத்துடன் வந்த மாணவர்களின் கருத்துக்களும் வந்திருக்கின்றன. நன்ருகப் பயிற்றப்பட்ட மாக்ஸியப் பிரதிநிதிகள் தமக்கு இளமையிற் போதித்தனவற்றை யிம்மாணவர் நன்றியறிதலுடனும், ஆதரவுடனும் நினைவு கூருகின்றனர். ஆனுல் ருஷ்யாதான் தங்களது உண்மையான நண்பன் என்று நம்புகிருர்களோ என்னவோ! மாக்ஸியமே உறுதியளிக்கும் வழி. பாப்பரசர் பிழையெதுவும் செய்யாதவரென்று கத்தோலிக்கர் நம்புவது போல, மாக்ஸிய வாதிகள் கிரெம்ளினும் பாப்பரசர் போல் பிழை செய்வதில்லை யென்று நம்புகின்றனர். ஆகாய வெளியில் ருஷியாவின் சாதனைகள் அவர்கள் மனதில் பதிந்துவிட்டன. கிரெம்ளின் எப்போதும் சரியானதையே செய்யும்; அது ஒருபோதும் பிழைசெய்ய மாட்டாது; மாக்ஸியவாதி சிந்திக்கவேண்டிய அவசியமில்லை. கத்தோலிக்கரைப் போன்று கீழ்ப்படிதல் மட்டுமே அவசியம்.

தென் கிழக்காசியாவின் பிரச்சினைகள் பல. முதலாவதாக அளவு மீறிய சனத்தொகைப் பெருக்கம். முன்பெல்லாம் சிறுபிள்ளை மரணம், மலேரியா, அம்மை நோய், இன்னும் பல நோய்கள் சனத்தொகையைப் பத்திலொன்ருகக் குறைத்தன. எனவே நாட்டின் சனத்தொகையை இறப்பும் பிறப்பும் சமநிலையில் வைத்திருந்தன. ஐரோப்பிய அமெரிக்க வைத்திய ஆராய்ச்சியின் பயனுகப் பல உயிர்கள் காப்பாற்றப் படுவதால் மரண விகிதம் குறைவாக இருக்கிறது. மேற்கு நாட்டார் செய்த நன்மையைத் தென் கிழக்காசியர் நன்றியறிதலுடன் ஒப்புக் கொள்ள வேண்டும்.

துரதிர்ஷ்ட வசமாக மேற்கத்திய வழிகளைப் பின்பற்றிச் சுகதேகிகளாய் வாழக் கற்றுக் கொண்ட தென் கிழக்காசிய மக்கள் தமது ஆதிகாலப் பழக்கவழக்கங்களை யின்னும் கைவிடவில்லை. நாலு மனைவிகள் கொள்ளும் உரிமையையும் பல பிள்ளைகளையும் முஸ்லிம் மதத்தினர் விரும்புதல் போன்று, தமது ராச்சியத்தைப் பெருப்பிக்கும் நோக்கத்துடன் குடும்பக் கட்டுப்பாடு செய்தல் கடவுளுக் கொவ்வாத

பாவம் என்று வத்திக்கான் கூறுகிறது. இந்துக்களும் பல ஆண் குழந்தைகளை விரும்புவது பிறப்பு விகிதம் கூடுதற்கு ஒத்தாசை செய்கிறது. அதிகரித்துக் கொண்டு போகும் சனத்தொகையைப் பொருளாதாரம் சமாளிக்க முடியாமற் தவிக்கிறது. எனவே, தென் கிழக்காசியாவின் உணவுப் பிரச்சினை நாளுக்கு நாள் மோசமாகிக் கொண்டே போகிறது. இந்நிலை தென் கிழக்காசிய அரசாங்கங்களுக்கு அதிக வேதனையையும் சஞ்சலத்தையும் கொடுக்கிறது. போஷிப்பான உணவை யுண்ணும் பெண்களிலும் பார்க்கப் போதிய உணவு அற்ற பெண்களில் கருவளர்வு கூடுதலாக உள்ளது என்ற உண்மையும் தென் கிழக்காசியாவின் அளவு கடந்த பிறப்பு விகிதத்துக்கு ஒரு காரணமாக விருக்கிறது.

தனது அந்திய காலத்தில் தன்னையும் மனைவியையும் ஆதரிப்பதற்காக இயலக் கூடிய அளவு பிள்ளைகளைப் பெற வேண்டும் என்ற ஆசையே உண்மையான காரணம் எனத் தோன்றுகின்றது. வேலை செய்ய முடியாமற் போனதும் வேலையிலிருந்து நீக்கப்பட்டு விடுவான் என்றதால் சிறிய ஊதியபத்தைப் பெறும் ஏழை, வயோதிய காலத்தை யஞ்சுகிறான். எனவே தன்னையும் மனைவியையும் அக்காலத்தில் ஆதரிக்கத் தக்கவர்கள் தமது பிள்ளைகளே யென்று நினைக்கிறார்கள். ஒரு டசன் பிள்ளைகளைப் பெற்றால்; ஒரு சில பிள்ளைகள் நன்றியறிவற்றவர்களாக இருக்கக் கூடும் என்று வைத்துக் கொண்டாலும் மற்றப் பிள்ளைகள் வளர்ந்து உத்தியோகத்திலிருக்கும் பொழுது பெற்றோருக்கு ஆதரவு அளிப்பார்களென்று நினைக்கிறான். தனியொரு பிள்ளையின் மீது பாரமாயிருக்க அவன் விரும்புவதில்லை. பல பிள்ளைகள் இருந்தால், தானும் மனைவியும் மாறி மாறி அவர்கள் ஆறுதலில் தமது கடைசிக் காலத்தைக் கழிக்கலாம் என நினைக்கிறான். இந் நியாயம் காரணமாக தென் கிழக்காசியாப் பாட்டாளி மக்கள் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளை யெதிர்க்கிறார்கள்.

தென் கிழக்காசியாவில் இன, மத, மொழிப் பேதங்களும் உள்ளன. அங்கே சிறந்த கல்வி வசதிகள் இல்லை. ஒரே நிலையிலிருக்கும் பொருளாதாரத்தாலும் உணவும் தொழிலும் குறைவாயிருப்பதாலும் எல்லாரும் தமது இனத்தவர்களை யுதவி செய்ய முற்படுகின்றனர். சில நாடுகளில் பழைய பிராமணிய சமூகத்தின் வருணக் கட்டுப்பாடும் ஒரு பிரச்சினையாக இருக்கிறது. எனவே, தென் கிழக்காசிய அரசியல் ஞானிகள்

எதிர்க்க வேண்டிய பிரச்சினைகள் பல—இப்படிப்பட்ட வேற்றுமையில் ஒற்றுமை காணல், விரைவாக முன்னேறும் பொருளாதாரத்தை வகுத்தல், மேற்கு ஐரோப்பா அல்லது அமெரிக்காவின் முதலாளித்துவ கட்டுப்பாடுக்குள் செல்ல விடாது நாட்டைக் கவனித்தல், ரூஷ்யா அல்லது சீனுவின் சார்பு நாடு ஆகாமல் கண் காணித்தல் போன்ற பிரச்சினைகள் பலவாம்.

மேற்கு ஐரோப்பாவிலுள்ள பொது மக்கள் பகுதி, தனியார் பகுதி இரண்டையுங் கொண்ட சோஷலிஸமுறை தென்கிழக்காசிய நாடுகளில் அதிக செல்வாக்கு பெற்றது தேர்தற்காலங்களில் இக்கோஷத்தைப் போல வேறெதுவும் பாட்டாளிமக்களின் கவனத்தைப் பெறுவதில்லை. தென்கிழக்காசிய முதலாளிகளுக்குப் பாட்டாளி மக்களிடையே நண்பரில்லை. அரசியல் வாதிகள் பாட்டாளிமக்களின் ஆதரவைக் கோரும் நேரங்களில் முதலாளியே பலியாடு ஆகிறுன். தென்கிழக்காசிப நாடுகளில், மிதமிஞ்சிய வரி காரணமாக முதலாளி வர்க்கமே மறைந்து விடக் கூடிய அபாய நிலை யேற்படுகின்றது. எல்லாச் சட்டங்களும் தொழிலாளருக்கு ஆதரவு அளிக்கும் முறையில் அமைந்துள்ளன. ஒழுங்காக அமைக்கப்பட்ட தொழிற் சங்கங்கள் எதிர்த்து நிற்பதாலும், வரிச்சுமையதிகமாக இருப்பதாலும் உதவியற்ற முதலாளிக்குத் தனது பொருளாதார அலுவல்களை விருத்தி செய்யமனம் வருவதில்லை. ஏனெனில், கூடின விருத்தி கூடின துயரத்தைத் தரும். கூடுதலான சம்பளமும் குறைந்த வேலையுமே தொழிலாளர் கூக்குரலாகும், தொழிலாளர் ஆதரவில் இயங்கும் தொழிற் சங்கங்கள் அவனது கோரிக்கைகளை யாதரிப்பதால், அற்ப காரணங்களுக்காக அடிக்கடி வேலை நிறுத்தங்கள் ஏற்படுகின்றன.

எனவே, தனியார்துறையில் பொருளாதார விஷயங்களில் இயங்கிக்கொண்டிருக்கும் சக்தி யெதுவுமில்லை. ஏனெனில், இயங்குவிக்கும் சக்தியாகிய முதலாளி தனது முதற்பணத்தைக் காப்பாற்றுவதிலும் பாரச்சுமையான வரிகளைச் செலுத்தாது தப்பவழிவகை தேடுவதிலும் தனது நேரத்தைச் செலவிடுகிறுன்.

பொதுமக்கள் பகுதியில் கடமையாற்றும் அதிகாரத்தினரும் இந்நிலையில் இருக்கின்றனர். அரசாங்க சமாஜங்களில் வேலை செய்யும் தொழிலாளரை நேர்மையாக வேலை

செய்யும் படி புத்திமதி கூறமுடியாது. அவர்கள் ஏதும் கட்டாயப்படுத்தினால் அல்லது மரியாதைக் குறைவாக நடந்தால், தொழிலாளரும் தொழிற்சங்கமும் ஆட்சேபித்து அரசாங்கமந்திரிகளுக்கு முறையிடுவார்கள்; அல்லது வேலை நிறுத்தத்துக்கு அடிகோலுவார்கள். பாட்டாளி மக்களின் வாக்குகளை நம்பியிருக்கும் மந்திரியும் கட்டாய மாகத் தொழிலாளரையே ஆதரிக்க வேண்டியிருக்கிறது. மந்திரியால் அதிகாரிகள் வேலை மாற்றப்படலாம் அல்லது வேலையிலிருந்து நீக்கப்படலாம். எனவே எவற்றையும் முற்பட்டுச் செய்ய அதிகாரி யஞ்சுகிறான். மந்திரியினால் பிறப்பிக்கப்பட்ட கட்டளைகளையே நிறைவேற்றுகிறான். தனது உத்தியோகத்தைக் காப்பாற்றுவதற்காக அதிகாரி யபிவிருத்தி யெதிலும் சிரத்தை காட்டுவதில்லை. அவர்களும் ''கொடுப்பதில்லல்லப் பெறுவதில்'' தான் கூடுதலான கவனஞ்செலுத்துகிறார்கள். உருத்திராட்சப் பூனைகளாகக் கடமையாற்றும் முறைகளைப் பயின்று கொண்டு எந்நேரமும் சரளமான பதில்களுடன் ஆயத்தமாயிருக்கின்றனர்.

தென் கிழக்காசியாவிலுள்ள அரசாங்க ஸ்தாபனங்களிற் பல நட்டத்துடன் நடாத்தப்படுகின்றன. இவற்றில் ஏதேனும் ஸ்தாபனம் இலாபம் பெறுகிறதென்றால், அது திறமான ஆட்சியமைப்பு முறைகாரணமாகவல்ல; அந்த ஸ்தாபனம் எப்படியும் இலாபம் பெறும் என்ற காரணத் தாற்றான் இலாபம் பெறுகிறது. ஏற்படும் நட்டம் அரசாங்கத்தின் பொறுப்பாகி வரிகளிலும் மிதமிஞ்சிய லாபத்திலும் போடப்படுகிறது.

தென்கிழக்காசியாவின் உஷ்ணமும் வெப்பமான சீதோஷ்ணமும் மேற்கு ஐரோப்பாவில் சமசித்த சீதோஷ்ணத்தையுடைய நாடுகளில் உள்ள மக்களிலும் பார்க்கத் தென்கிழக்காசிய மக்கள் சோம்பேறிகளாயிருப்ப தற்கு உடந்தையாயிருக்கின்றன. மேலும், முன்பு சுரண்டினதாலும் மேற்கு ஐரோப்பிய நாடுகளிற் தனி மனிதனின் சராசரி வருமானம் தென்கிழக்காசிய நாடுகளின் தனிமனித வருமானத்திலும் பன்மடங்கு கூடுதலாக இருக்கின்றது. மேற்கு ஐரோப்பாவில் கல்வித்தரமும் கடமையுணர்ச்சியும் உயர்ந்த நிலையையடைந்திருக்கின்றன.

ஆனால், பொதுமக்கள், தனியார்ப் பகுதிகளையும் கட்டுப்பாடற்ற வாக்குரிமையையுடைய தொழிற் சங்கங்களையுங் கொண்ட சோஷலிஸமும், சிந்தனைச் சுதந்திரத்தையும் மக்களுக்குச் சமமான நீதியையும் நிலைநாட்டுவதற்காக மனித வர்க்கம் எடுத்துக்கொண்ட முயற்சிகளிற் பின்பற்றியதிறமை வாய்ந்த கட்சியரசாங்கமும் தென்கிழக்காசியாவில் நடைமுறையில் இருக்கின்றன. தென்கிழக்காசிய நிலைமைக்கேற்ற புதிய மாற்றங்களை யமைத்துக் கொண்டாற்றான் இவற்றில் வெற்றிகாண முடியும்.

இல்லாவிடின் அசைவற்ற பொருளாதாரத்தினலேற்படும் அபாயங்களும் கூடுதலான பிறப்பு விகிதமும் தென்கிழக்காசிய மக்கள் எல்லாருக்கும் சொல்லொணுத் துயரையும் வறுமையையும் கொணர்ந்து அவர்களை மக்கள் என்ற மதிப்பையிழந்த மாக்கள் ஆக்கிவிடும். இந்நிலையில், மொஸ்கோவில் போதனைக்குள்ளான ஏவலாளர் மூலம் அதிகார வெறிபிடித்த பொலிற்பூரோ தமது சாம்ராச்சியத்தின் விருத்தியைத் திட்டமிடுகிறது. கடந்த நான்கு நூற்றாண்டுகளாகத் தென்கிழக்காசியாவில் பிபிலிய வேதம் விற்கப்பட்டது போலவே இந்நாடுகளில் பட்டினியாற் தவிக்கும் ஏழைப்பாட்டாளி மக்களுக்கு 'தாஸ் கபிற்றல்' விற்கப்படும். சரித்திரத்தில் என்றுமே யேற்படாத கடுந்துயரும் சோர்வும் தென்கிழக்காசியாவிற் தோன்றும். மக்கள் விடும் கண்ணீர் தென் கிழக்காசிய ஏரிகளிலுள்ள நீரினும் கூடினதாயிருக்கும்.

தங்களுக் கேற்பட்டிருக்கும் நிலையை யுணர்ந்து தென்கிழக்காசிய அரசியல் ஞானிகள் தங்கள் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு தமது நீண்டகாலச் சரித்திரத்தினுதவியை நாடினுல் அதுபயனளிக்காதோ? இந்த உலக நிலையைத் தென்கிழக்காசியா தானுகவே தீர்த்துக்கொள்ள வழி தேடமுடியாதோ?.

தென்கிழக்காசியாவில் தோன்றினவர்களுள் மிகவும் நேர்மைவாய்ந்தவர் புத்தர். உள்ளத்தைப் பொறுத்தளவில் அதிக திறம்வாய்ந்த இந்தவிஞ்ஞானி பட்டினியால் வாடுபவனுக்கு ஒழுக்கம் கற்பிக்க முடியாதென்றும் அவனுக்கு முதல் உணவு கொடுத்துத்தான் அவனை நியாயங் காணச் செய்யமுடியும் என்றுங் கூறினர்.

இரண்டாவதாக எதிர் முரணுகைவுள்ள இரு காரியங்களுள் இரண்டினுமுள்ள நல்லவற்றைத் தெரிந்தெடுத்து ஒரு நடு நிலையைக் கைப்பிடித்தல் தான் மிகவும் அறிவுள்ள செயல் எனக் கூறியிருக்கிறூர். மூன்றுவதாக இவ்வாழ்விலொருவன் சந்தோஷமாக இருக்க வேண்டுமாயின் அவன் பிறருக்குத் தீமை விளைக்கக் கூடாதென்றூர். இதன் விளைவாக ஒருவன் இவ்வுலகில் மட்டுமல்ல, மறுபிறப்புகளிலும் சந்தோஷமாக இருப்பான்.

இப் போதனைக் கிணங்க, முதலாளித்துவ முறை, மாக்ஸியக் கொள்கைகள் ஆன இவ்விரண்டிலிருந்தும் திறமான வற்றையெடுத்து மூன்றுவதொரு புதிய முறையை உருவாக்குதல் முடியாத காரியமா? ஐரோப்பிய சிந்தனையின் பயனுக ஐரோப்பிய உள்ளங்களிலிருந்தே முதலாளித்துவமும் மாக்ஸியமும் தோன்றின வென்பது வெளிப்படையான உண்மை. இவையிரண்டும் தன்னயத் தேட்டத்திலும் சாம்ராச்சியம் உருவாக்குவதிலும் முடிவடைகின்றன, என்பது சரித்திர உண்மை. இரு முறைகளிலும் நன்மைகளும் தீமைகளும் உள்ளனவென்பதும் உண்மை. எனவே இரண்டிலும் தீமைகளைத் தவிர்த்து நன்மைகளை யெடுத்தால், அவற்றைக்கொண்டு உருவாக்கப்படும் புதிய மூன்றுவது முறை முதலிரண்டிலும் திறமை வாய்ந்ததாக இருப்பதோடு மனித வளர்ச்சியில் ஒரு முக்கிய இடமும்பெறும்.

உள்ளம், பொருள் ஆகியவற்றேடு சேர்ந்தனவெல்லாம் இயங்கிக்கொண்டேயிருக்கும் ஒரு பிரபஞ்சத்தில் 10,000 ஆண்டுகளுக்குக் கூடின காலத்துச் சரித்திர சாசனங்கள் வைத்திருக்க முடியாது. மக்களின் உள்ளத்திலே பொருள் வடிவிலோ இதற்குக் கூடின காலத்திய சரித்திரத்தைப் பதிந்து வைத்திருக்க இயற்கை விடுவதில்லை. விஞ்ஞானிகளால் என்ன நடந்திருக்கக் கூடுமென்று ஊகிக்க மட்டுமே முடியும். இதனுற்றூன், பிபிலிய நூலின் பழைய ஏற்பாடு அல்லது சொல்லியல் லோகாயத வாதம் என்பன வற்றின் அடிப்படையில் எழுந்த ஐரோப்பிய சிந்தனை வெறும் கொள்கையெனப் புறக்கணிக்கப் படவேண்டும்.

இந்தப் பூமியில் வாழும் எல்லா மக்களதும் சரித்திரத்தை யுமாராய்ந்தால், ஒரு உண்மை புலப்படும். அதாவது, உலகின் மெலியார் எப்பொழுதும் பொய்ப் பாதைகளில் வழி நடத்தப்பட்டு இறுதியில் வலியாரான ஒரு ஆளும் வகுப்பினரால் தம் தன்னலத் தேட்டத்துக்காகப் பாவிக்கப் படுகின்றன ரென்பதாம்.

ஆதிகாலத்தில் வாழ்ந்த சாதாரண மனிதனும் அவனது குடும்பமும் தமது பற்றையும் கீழ்ப்படிவையும் விசுவாசத்தையும் அரசனுக்கும் பிரபுகளுக்கும் செலுத்திவந்தனர். இதற்காக இவர்களுக்கு கிடைத்த பிரதிபலன் யாது? அடிமை வாழ்வும், சித்திரவதையும், மண் குடிசை வாழ்வு, இன்னும் தமது மானியப் பிரபுகளின் நிலஎல்லைக்குள் ஏற்பட்ட சொல்லொணுக் கஷ்டங்களுமே இவர்களுக்குக் கிடைத்த பிரதிபலன்.

பின்பு தோன்றிய முதலாளித்துவம் இவனையும் மனைவியையும் பிள்ளைகளையும் தொழிற்சாலைகளிலும் தோட்டக் காடுகளிலும் கொண்டுபோய் விட்டது. அங்கும் இங்குமாகப் பரவியிருந்த மண் குடிசைகள் பெரிய நகரங்களில் திரண்ட சேரிகளாக மாறின; மக்கள் சமூகத்தின் கூடின தொகையினர் பெரிய நகரங்களில் வாழ்ந்துவந்தனர்.

சாதாரண மனிதர், இவ்வுலகிற் சொர்க்க வாழ்வை வாக்களித்த சர்வாதிகாரிகளை நம்பி வாழ்ந்தனர். சர்வாதிகாரியிவனை மறுநாடுகளிலுள்ள மெலியாரை யொருவன் துன்புறுத்தும் போர்க்களத்துக்கு மட்டுமே அனுப்பி வைத்தான். சமாதானம் வந்ததும், யுத்த ஞாபகார்த்த சின்னம் ஒன்று மாத்திரமே இவனுக்கு வழங்கப்பட்டது.

காருண்ய உள்ளம் படைத்த கார்ல் மாக்ஸ், துன்பத்திலிருந்து விடுதலையடைய முடியும் எனக் கனவு கண்டார். தனி மாக்ஸிய கொள்கையினல் இது முடியாத காரியம் என்று பிற்கால சரித்திரம் காட்டியுள்ளது. சாதாரண மனிதன் முன்பில்லாத மாதிரியிப்போது பல எஜமானருக்குப் பணிசெய்ய வேண்டும்; தனக்கெனச் சிந்தனைகள் எதுவும் இருக்கும் உரிமை அவனுக்கில்லை; இருந்தால் அது அவன் அழிவுக்குக் காலாயிருக்கும்.

மனித சரித்திரத்தில், சாதாரண மனிதன் என்றுமே துன்புற்று வருவதின் காரணம் யாது? இரு காரணங்களைக் கொண்டு என்பது தெளிவாகிறது. (அ) அறியாமை, இதனால் பொய்களை நம்பி, மற்றவர் கூறும் பொய் வாக்குறுதிகளில் விசுவாசம் வைத்தல்; (ஆ) தனக்காகச் சிந்திக்கவும், தனது வாழ்வை யமைப்பதற்கும் மற்றவர்களை நம்பியிருத்தல். துன்பத்துக்கு முக்கிய காரணம் அறியாமை யென்பது வெளிப்படையாக விளங்குகிறது. மற்றவர்களை நம்பியிருத்தல் பிரச்சினையைச் சிக்கலாக்குகிறது.

இன்று சாதாரண மனிதன் பெற்றிருக்கும் கல்வியறிவு முன்பு எக்காலத்திலும் பெற்றிருந்ததாக பதியப்பட்டுள்ள மனித சரித்திரத்திற் காண முடியாது. இன்று அநேக நாடுகளில் உள்ள சாதாரண மனிதனும் அவன் குடும்பமும் எழுத வாசிக்கத் தெரிந்த நிலையில் இருக்கின்றனர். எனவே, தொழிலாளி வேலை செய்யும் காலத்திலேயே முதலைத் திரட்டுவதற்கு வசதியாக வழிவகைகளை யமைக்கும் சமுதாயத்தை யமைத்தலே இப்பிரச்சினைக்குத் தீர்வு காணும் வழியாகும். இந்த முறை, இவ்வளவு காலமும் மறைத்து வைக்கப்பட்டிருந்த உற்சாகத்தை மனித சாதியினரிடத்தில் தோன்றச் செய்யும். தொழிற்சாலைகளில், தோட்டங்களில், வியாபாரஸ்தலங்களில், இன்னும் மனிதன் தமது நாளாந்தப் பிழைப்புக்காகப் பாடுபடும் வேலை ஸ்தலங்களில் எல்லாம் ஒரு உற்சாகத்தைக் காண முடியும். ஒவ்வொருவனும் பணம் திரட்டித் தனது வயோதிப காலத்துக்கு ஏற்ற ஒழுங்குகள் செய்வதற்காகக் கஷ்டப்படுவான்.

இத்தகைய சமுதாயத்தில், எதிர்காலத்தைய குடும்பங்களை மூலதனம் பராமரிக்கு மாகையால், ஒரு குடும்பத்தின் தொகை திரட்டக்கூடிய மூலதனத்திற் தங்கியிருக்கிறது. தேசங்களில் அளவு மீறிய பிறப்பு விகிதப் பிரச்சினை தானாகவே மறைந்துவிடும். வத்திக்கான், முஸ்லிம் அதிகார பீடத்தினர், பொலிற் பூரோ எஜமானர் ஆகியவர்களின் பொய்ப் பிரசாரம் இனிமேற் பலிக்காது, தங்களால் மூலதனம் திரட்டக்கூடிய அளவுக்குத் தகுந்த படிதான் கணவனும் மனைவியும் குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைக் கையாள்வர் பணவிருத்தியின் பயனாகப் பூரண வாழ்வுக் கேற்ற புதிய சந்தர்ப்பங்கள் தோன்றும். இந்த நிலையில் சந்தான விருத்தி முக்கியமற்ற இடத்தையே வகிக்கும். இது நிச்சயமாகப் பிறப்பு விகிதத்தின் போக்கைப் பாதிக்கும். குடும்பக் கட்டுப்பாட்டு முறைகளைப் பற்றிய

கல்வி உலகமெங்கெங்கெனும் விரும்பி வரவேற்கப்படும். இதன் பயனாக, முன்னையிலும் அதிக ஆரோக்கியத்தையும் சந்தோஷத்தையும் மக்கள் பெறுவர்.

இப்படியெனின், முதலாளித்துவம் கம்யூனிஸம் ஆகிய இரண்டிலும் உள்ள திறமையான அம்சங்கள் யாவை?

இன்று முதலாளித்துவ சமுதாயம் சிந்தனைச் சுதந்தரத்துக்கு உற்சாகம் அளிக்கிறது. நாலு வகைப் பட்ட சுதந்திரங்கள் உள:— (அ) தேசிய சுதந்திரம், (ஆ) அரசியற் சுதந்திரம், (இ) தனிமனித சுதந்திரம், (ஈ) பொருளாதார சுதந்திரம்.

(அ) *தேசிய சுதந்திரம்:—*

மனித இனத்திற்கு இயற்கையாக இருக்குமொரு விருப்பம் ஆகும்.

(ஆ) *அரசியற் சுதந்திரம்:—*

என்பது மக்களின் தேவைக்கும் விருப்பங்களுக்கும் ஏற்ற அரசாங்கத்தையமைக்கும் உரிமை. தாம் விரும்பாத அரசாங்கத்தை நீக்கிவிட்டுத் தாம் விரும்பும் அரசாங்கத்தைத் தெரிவு செய்வதற்கு மக்களுக்கு உள்ள உரிமை.

(இ) *தனி மனித சுதந்திரம்:—*

என்பது ஒரு நாட்டுப் பிரஜைக்கு இருக்கவேண்டிய பல உரிமைகள். பேச, எழுதச் சுதந்திரம், சமய வழிபாட்டுச் சுதந்திரம், எந்தநேரமும் தன்னை வேவுகாரர் பின் தொடராமலிருக்கும் சுதந்திரம் ஆகியவையாம். கைது செய்யப் பட்டால் அவனது "உடலைக் கோரும் சட்டம்" போன்ற பலவேறு உரிமைகளும் இதிலடங்கும்.

(ஈ) *பொருளாதார சுதந்திம்:—*

முதலாளித்துவ சமுதாயத்தில் இச் சுதந்திர முடையவர் முதலாளித்துவ வகுப்பினர் மட்டுமே, தனிமனித வருமானம் உயர்வாயிருக்கிற மேற்கு ஐரோப்பாவிலும் அமெரிக்காவிலும் தொழிலாள வகுப்பினர் கையில் ஓரளவு பணம் இருக்கிறது. சோஷலிஸ சட்டங்கள் அமுலுக்கு வந்ததன் பின்

தான் முன்னையிலும் கூடின அளவுக்கு இவ்விதம் தொழிலாளர் நிலை மாறியது. ஆனால், தனி மனித வருமானம் குறைவாகவுள்ள தென் கிழக்கு ஆசியா போன்ற நாடுகளில் மக்கள் தொழில் செய்யும் பொழுதே பணம் திரட்டுவதற்கேற்ற வழிவகைகள் அமைக்கப்பட வேண்டும். எனவே, எதிர்நோக்கப் படும் சமுதாயத்தில் சுதந்திரத்தின் இந்த அம்சம் அடிக்கடி போதிக்கப்பட வேண்டும்.

கம்யூனிஸ முறையிலுள்ள நல்ல அம்சங்களாவன:—

(அ) அதிகார பீடத்து மத்தியிலிருந்தே பொருளாதாரத் திட்டம் வகுத்தலும், பொருளதார வீண் செலவைத் தடுத்தலும். முதலாளித்துவ முறையின் கீழ், கடின மான போட்டி நிலவுகிறது. அநேக வேலைகளில் உற்பத்திக் கழிவும், பொருளாதார உற்பத்திப் பொருள்களில் கழிவும் ஏற்படுகிறது. திறமை வாய்ந்தவர் தப்புதல் என்ற 'காட்டு நீதி' அங்கு நிலவுகிறது. பலவான் பலஹீனமானவனை வதைக் கிறான். ஒரு திட்டம் இல்லாததன் காரணமாக அங்கேயதிக துன்பம் இருக்கிறது. முதலாளிகள் நாட்டில் ஒத்துழையாது, தமது லாபத்தைப் பெருக்குவதற்காக இடும் திட்டம் ஒன்றுதான் அந்த முறையில் இருக்கிறது.

தொழிலாலளரது உற்சாகம்:—

(ஆ) கம்யூனிஸ சமுதாயம், தொழிலாளர் சமுதாயம் என்று தொழிலாளருக்கு எப்போதும் போதிக்கிறார்கள். முன்னே கூறியுள்ளதின்படி, முதலாளித்துவ முறையில் உள்ளதிலும் கூடின தொகையினரைக் கொண்ட ஒரு சிலாக்கியம் படைத்த வகுப்பினருக்காக அவர்கள் உழைக்கிறார் கள். எனவே கடினமான தண்டனைகள் விதிக்கப்படு வதற்கு அவசியம் ஏற்படுகிறது சித்திரவதை நிலவும் மறியல் முகாம்கள், இரகசியப் பொலிஸ், ஸ்டாக் ஞேவ் முறை, பங்கீடு குறைக்கப்படுத்தல், தற்கொலை யில் முடிவடையும் வேலை நீக்கம் போன்றவை சில தண்டனைகளாம். எனவே, கம்யூனிஸ தொழிலாளரை உண்மையில் உந்தித்தள்ளுவது, அவர்கள் அநேக காலமாக நம்பாது கைவிட்ட பிரசாரம் அல்ல; பயம் தான் அவர்களை உந்தித் தள்ளுகிறது.

இந்த அடிமைத்தனமான நிலைக்குப் பதிலாக, வயோதிப காலத்துக்காகப் பணம் திரட்டும் ஆசையை நிறைவேற்றும் முறை சமுதாயத்திற்புகுத்தப்பட்டால், அது தொழிலாளர் திறமையுடன் தொழில் புரிவதற் கேற்ற உற்சாகத்தையளிக்கும்,

மறுவிதத்திற் கூறின், அவன் ஓய்வு பெறும் காலத்தில், அவனுக்குக் கொடுக்கப் படுவதற்காக, அரசாங்கம் மிதமிஞ்சிய லாபத்தில் ஒரு பகுதியை அவனுக்காகச் சேமிக்கிறது. இடைக்காலத்தில், அவனது முதற்பணத்தின் மூலம் கிடைக்கும் லாபமோ வட்டிப்பணமோ அவனுக்குக் கொடுக்கப் படுகிறது. எனவே, இந்தச் சேமிப்பு எல்லாம் தென்கிழக்காசிய நாடுகளுக்குள் ஏற்படும் வருங்கால அபிவிருத்திக்காகப் பாவிக்கப்படும் பணத்திரட்டாகும்.

தென் கிழக்காசியாவில் மூலதனம் அவசியமாகத் தேவைப்படுகிறது. தொழிலாளரது உற்சாகத்தின் பயனாகப் பணம் திரட்டப்பட்டால், அது பொருளாதாரத்தில் சுதந்திரத்துடன் திகழ்வதற்கு வேண்டிய தேசீய முதலாக அமையும்.

நான்கு புத்தர்களின் பிறப்பிடமாகிய தென்கிழக்காசியா, மனித வர்க்கத்தினருக்குள் ஒரு நவ நாகரிகம் தோன்றுவதற்கு வழிவகுத்து, இன்று முழு உலகிலும் படந்திருக்கும் இருளை அகற்றமுடியாதா?.

எம். டி. குணசேன அன்ட் கம்பெனி, லிமிட்டெட்., கொழும்பு.

குணசேன

9-33/5-6-1

விலை ரூ. 1/50